மின்னல்

MADRAS
3 AUG 1954

ஆசிரியர்:

நெல்லை வேந்தன்

695
3-54.

O-,3NVH2,
M
N54
106120

மன்றம்
சென்னை-1

வெளியீடு: 134
முதற் பதிப்பு: ஆகஸ்ட் 1954
உரிமை உடையது

சாதா பயின்ட் விலை ரூ. 1—0—0
அட்டை பயின்ட் விலை ரூ. 1—8—0

TAMIL NADU ARCHIVES LIBRARY
106120

விற்பனை நிலையம்:
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனு பஜார்
சென்னை-1

O-,3x1VHR,M
N54

தீர்ப்புக் கூறுங்கள்

மின்னல் ஓர் சமூக சீர்திருத்த நாவல் படிப்பவரைத் திருத்தும் பயனுள்ள ஏடு! இன்று களையப்பட வேண்டிய பல அநீதிகள் இதிலே சுட்டிக் காட்டப் படுகிறது. ஆசிரியர்; எழுத்தாளர் உலகத்திற்குப் புதியவர்தான் என்றாலும் பல அரிய உண்மைகளை எடுத்து கூறுவதில் உண்மையிலேயே சிறந்த ஓர் ஆசிரியராவர். திருநெல்லை வேந்தன் அவர்களின் எழுத்தை படித்து உங்கள் தீர்ப்பைக் கூறுங்கள்.

வணக்கம்

கலைமன்றத்தினர்.

திராவிட கருத்தோட்டம்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி—

கசந்த கரும்பு	...	1	8	0
சிலந்திக்கூடு	...	1	0	0
தனியரசு ஏன்?	...	1	0	0
முள்	...	1	0	0
மனைவி	...	0	12	0
கொலைகாரி	...	0	12	0
வாழ்க்கை வாழ்வதற்கே	...	0	12	0
இருண்ட வாழ்வு	...	0	12	0
அவள் வாழ்வு	...	0	8	0

விருதை - ந. இராமசாமி—

இலட்சியப் பெண்	...	1	0	0
வழுக்கி விழுந்தவள்	...	1	0	0
மலர்புரி ராணி	...	1	0	0
புதுவாழ்வு	...	1	0	0
கருமுகில்	...	1	0	0
தளபதி	....	1	0	0
தாமஸ் மசாரிக்	...	1	0	0

விபரங்களுக்கு:

கலைமன்றம்

த. பெ. எண். **275** — சென்னை-**1**

1. மின்னல் வீச்சு!

ஆண்கள் வைராக்கியத்தின் கோட்டை என்றால் பெண்கள்தான் அந்தக் கோட்டையை உடைத்தெறியும் குண்டுகள் போலும். இல்லையென்றால் இளங்கோவின் வைராக்கியம் உடைந்து தூள் தூளாக முடியுமா? இளங்கோ இன்பவல்லிகளுக்கு தன் மனதை இரும்பு கோட்டையாக்கி, அதில் எந்த இளங்குமரிகளும் புகுந்து விடாதபடி, வைராக்கியம் என்ற பூட்டால், கோட்டை யைத் தாளிட்டான். ஆனல்......?

கள்ளன் பெரிதா? காப்போன் பெரிதா?

அமைதியான கடலில் 'அலையே நீ எழும்பாதே' என்று அலைக்கு தடுப்பு மசோதா அளிக்க முடியுமா? குளிர் சோலையிலே 'தென்றலே நீ வீசாதே' என்று தென்றலுக்கு விதிவிலக்கு கொடுக்கமுடியுமா? இருண்ட வானில் தோன்றும் மின்னல் வீச்சைக்கூடவா தடுக்க முடியும்?

அமைதியான கடல்தான் அவன் உள்ளம். ஆனல் அமைதியான கடலிலும் அலை உண்டே! சந்திரனைக் கண்டதும் அலை தன்மேல் விதிக்கப்பட்டுள்ள தடுப்பு மசோதாவை மீறத்தானே செய்யும்! வேலி சூழ்ந்த சோலையிலே தென்றலே வீசாதே என்றாலும் வெப்பத் தால் சோலை தகிக்கப்பட்டால், வெளியிலிருந்து தென் றல் வீசத்தானே செய்யும்! இருண்ட வானத்திலே ஒளிக்கு ஒத்திகை கொடுத்தாலும், கரிய மேகங்கள் தோன்றினல் மின்னல் வீச்சு தோன்றத்தானே செய் யும்!

ஆம்! பெண்களுக்கென இறுகப் பூட்டி யிருந்த இரும்புக் கதவை உடைத்து, இருண்டு இருந்த அவன் இருதயத்தில் ஒளி பரவச்செய்து விட்டது அந்த மின்

னல் வீச்சு! அமைதியான அவன் உள்ளத்திலே ஆசை அலைகளை எழுப்பி விட்டது அந்த முழுமதியின் ஒளி! ஆம்! அவன் வாழ்விலே கரிய மேகமாக ஒரு கன்னிப் பெண் தோன்ற, காதலாகிய மின்னல்வீச்சு வீசி விட்டது.

கொண்ட கொள்கையைக் காப்பாற்றத் தெரியாத கோழையா அவன்? இல்லை. முல்லை பூத்து முற்றத்தில் கிடக்க, அதன் மணத்தை முகரக்கூடாது என்று மூக்கைப் பிடித்துக்கொண்டு கிடந்தாலும், ஒரு சிறு தும்மல் வந்துவிட்டால் போதுமே! முல்லையின் மணம் அவன் உள்ளத்தையும் உணர்வையும் ஊடுருவிப் பாய்ந்து விடுமே! நறுமணத்தைப் பின் நுகராமலிருக்க முடியுமா? வண்ண மலரின் தேன் சுவையை கண்டபின், வண்டு தேனை உண்டு களிக்கச் செல்லாமல் இருக்குமா? ஆண்கள் மனம் ஒரு வண்டு. அது மலரைக் கண்டபின், அதன் வாசனையை நுகர்ந்தபின் அதில் தொத்திக் கொள்ளத்தானே செய்யும்?

வெஞ்சமரில் விரோதிகளை விரட்டி விரட்டி அடித்த வீரர்களும், வேல்விழி மாதரிடம் தாள் பணிந்து விடுவர் என்பது உண்மைதான்.

இல்லையெனில் காதல் என்பது மிருதுவான வஸ்துவா? மிகவும் மூர்க்கமானது, மிகவும் கொந்தளிப்பானது. அது முள்போல் குத்துகிறது என்ற ஆங்கில கவியின் கூற்றையும் காதல் ஒரு கள் என்ற ஷாவின் உரையையும், காதல் ஒரு ரப்பர் பலூன்; அதை இந்த உலகம் ஊதி வெடிக்க வைக்குமே தவிர, வைத்து காப்பாற்றாது. என்ற காண்டேகரின் வாக்கையும்; பெண்களை நம்பாதே என்ற பட்டணத்தடிகளின் பாட்டையும் படித்து அதனையே கடைபிடித்து, கல்யாணமே வேண்டாம் அது கசப்பானது என்று கூறிய இளங்கோ வீழ்வது ஏன்?

இளங்கோ ஓர் இலட்சிய வீரன். திராவிடத்தைச் சுரண்டும் சுயநலக் கும்பல்களையும் சூழ்ச்சிக்காரர்களையும் குழி தோண்டிப் புதைத்து, தனிச் சுதந்திரம் பெற்றுத் தரணியில் தன்னிகரில்லா அரசு பூக்கவேண்டும் என்று சுதந்திர துந்துபிமுழங்கும் காளை. கடமையையே காதலாக கருதுபவன். இளமைக்கு - இலட்சிய வீரனுக்கு - காதல் ஒரு சாதல். 'திராவிட இளஞ்சிங்கங்களே! தீய்ந்துபோன நம் திராவிடத்தை தேன் சொரியும் சோலை வனமாக்க காதல் கொள்ளுங்கள். கன்னிப் பெண்கள் மீதல்ல; கடமையின் மீது. நாரிமணிகள் மீதல்ல; நாட்டின் மீது. சுந்தரிகள் மீதல்ல; சுதந்திரத்தின் மீது' என்று பிரசங்கம் புரிபவன்.

"ஏண்டா! காதலைப்பற்றி அவ்விதம் கதைக்கிறாய்! காதல் இருமனங்களிலிருந்து திடீரென கிளம்பும் ஒரு ஜோதி! அது கடமையை கருதாது; காலத்தைப் பாராது; இலட்சியத்தை மதியாது - உதிப்பது. முற்றும் துறந்து முக்திபெறவேண்டும் என்று பக்தியுடன் காட்டிலே கடுந்தவம் புரியும் முனிபுங்கவர்களாலேயே காதலினின்று தப்பமுடியவில்லை; அவர்களும் ஒரு வகையில் இலட்சிய வீரர்கள்தான். அவர்களாவது சோலை வனத்தைவிட்டுச் சென்றுவிட்டார்கள். நீயோ மலர்கள் நிறைந்த சோலையிலே உலாவுகிறாய். சோதனையில் அவர்களே சிக்கிவிட்டார்கள். நீ சிக்காமல் தப்பிவிடலாம் என்று சிந்து பாடுகிறாய்! தித்திக்கும் திராட்சை பழத்தை பார்த்துக் கொண்டு, 'இதை தீண்டமாட்டேன்' என்று உன் மனம் கூறினாலும், நாக்கில் வாநீர் சொட்டத்தானே செய்யும்! அதுபோல்தான் உன் நிலைமையும். உன் நிலைமை மட்டுமென்ன? உலகில் உள்ள மனிதர் அனைவரின் நிலைமையும் அதுதான்." என்று கூறும் நண்பர்களை கேலி செய்பவன். விதி விலக்கு வீரன் நான் என்று மார்தட்டுபவனே வீழ்ந்து விட்டது ஏன்? அவன் வைராக்கியக் கோட்டையே வெடித்து சிதள் சிதளாகச் சிரழிந்து விட்டதே ஏன்?

ஆம்! இலட்சிய வீரனையும் காதல் தன் வலையில் வீழ்த்தி விடும். அதுபோலவே இளங்கோவும் அவளின் மின்னல் வீச்சின்முன் மயங்கி விட்டான். அந்த மின்னல்வீச்சு நடந்தது எங்கே? அந்த மின்னல்கொடி யார்?

---

2. பாளைச் சிரிப்பு!

அன்று! ஆம்! இளங்கோ தன் நண்பன் மதிவாணன் கலியாணத்திற்கு போன அன்று தான் அந்த மின்னல் வீச்சு நடந்தது. நெல்லையில் வண்ணார்பேட்டையில்தான் கலியாணம். இளங்கோ கலியாண வீட்டை நோக்கி வந்துகொண் டிருந்தான். வீட்டைச் சமீபித்த போது ஒரு நாய், கரிய நிறத்துடன், தீயை கக்கும் கண்களுடன் அவன் எதிரே தூரத்தில் "லொள், லொள்" என குலைக்க ஆரம்பித்தது. இளங்கோ மலைத்து நின்றான் அதனைக் கண்டு. நெஞ்சை பயம் அரித்துக்கொண்டிருந்தது. நாயும் தன் ஆலாபனத்தை நிறுத்தாமல், அவனை நோக்கி ஓடிவந்தது. நடு நடுங்கினான் இளங்கோ. இடியோசை கேட்டு நடுங்கும் நாகம்போலானான். சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டு கதிகலங்கும் சிறு நரியானான். உள்ளம் படபடவென அடித்தது. உணர்ச்சி மிகுதியால், "ஐயோ! நாய்! நாய்!!" என்று அலறிக்கொண்டு ஓட ஆரம்பித்தான். ஓடுகிறவனைக் கண்டால் விரட்டுகிற நாய்க்கு தொக்கு! தாழ்ந்த சுருதியுடன் பாடிய அது உயர்த்திற்று தன் சுருதியை. அலறிக்கொண்டு வரும் போலீஸ்களைக் கண்டு பதறிக்கொண்டு ஓடும் கள்ளன் போல் ஓடினான் இளங்கோ! ஒரு திருப்பம்! திரும்பினான். எதிரே வந்த மின்னல் கொடிமீது மோதி விட்டான். அவள் கரத்திலிருந்த குடமும், அந்த அதிர்ச்சியில் விலகி ஓடி தரையில் உருண்டது! அவன் பேந்தப்பேந்த

விழித்துக்கொண்டு நின்ருன். ஒரு பக்கம் "வள்! வள்!!" என்று வரும் நாய்க்குப் பயம்! இன்னெரு பக்கம் வீண் பயத்தால் கன்னியின்மீது மோதிவிட்டோமே என்ற வெட்கம்! ஆடிக்கொண்டே நின்ருன். கடுங் குளிரில் நடுநடுங்குபவன்போல் நடு நடுங்கினன். இதைக் கண்ட அம் மின்னல் கொடி கொல்லென்று சிரித்தாள். அதற்குள் அந்த நாயும் ஓடிவந்தது அவனை நோக்கி. பாளைச் சிரிப்புச் சிந்திய பாவை பக்கத்திலிருக்கும்போது பயந்து ஓடினல்...வேறுவழியில்லை. நின்ருன் கொலைக்களத்தில் நிற்கும் குற்றவாளியைப் போல. அவன் உதடுகள், முதலில் அசைய மறுத்தது. ஆனல் நெஞ்சைக் கொல்லும் பயத்தினல் அவன் வாய், "நாய்! நா...ய்!" என ஆடிக்கொண்டே அலறியது. அவன் நிலையைக் கண்ட அவள் "பாளைச் சிரிப்பு" சிந்தினள். அவனுக்கோ தன்னை நோக்கிப் பரிகசிப்பதுபோல் தோன்றியது. பல்லை நறநறவெனக் கடித்தான். அதற்குள் அவள் "டைகர்! வா!" என்ருள். நாயும் அவளை நோக்கி வாலை குழைத்துக்கொண்டே சென்றது. அவன் மனத்திலே வெட்கம் நிறையவே, அவனையும் அறியாமல் அவன் தலை குனிந்தது. அவளோ சிரித்தாள். சிரித்துக்கொண்டே தன் குடத்தை தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள். அவன் கண்கள் மெல்ல அவள் பக்கம் திரும்பியது. அவளோ அவனை நோக்கிச் சிரித்துக்கொண்டே தன் வழியே செல்லலானள். நாயும் அவள் பின்னல் சென்றது.

நன்றி கூறகூட நா எழவில்லை இளங்கோவுக்கு. இயல்பாகவே பெண்களிடம் பேச கூசுபவன். ஆனல் இப்பொழுது......நாய்க்குப் பயந்து ஒரு நங்கையின்மீது மோதிவிட்டான். அதுமட்டுமல்ல; அவனின் கோழைத்தனத்தைக் கண்டு அவள் எள்ளி நகையாடுகிருள். ஏளனப் புன்னகை பூக்கிருள். பாளைச் சிரிப்புச் சிந்துகிருள். இந்நிலையில் இளங்கோ எப்படி அவளுடன் பேசுவான்? மௌனமே ஆட்சிபுரிய ஆரம்பித்தது. வெட்

கம் இதய சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டால்......எந்த வீரனுக்கும் மௌனமே சட்டமாகி விடும். இதற்கு இளங் கோமட்டுமென்ன விதி விலக்கா?.........வெட்கித் தலை குனிந்தே நின்றான் திருமணப் பெண்போல. ஆயிர மாயிரம் குதர்க்கர்கள் கூட்டத்திலே இளங்கோ பேசும் பொழுது கேலி செய்தாலும், கேள்வி தொடுத்தாலும், வெடுக்கென பதில் கூறி அவர்களை வெட்கித் தலைகுனிய வைப்பவன், வேல்விழியாளின் பாளைச் சிரிப்பைக் கண்டு, வெட்கித் தலைகுனிய வேண்டியதாயிற்று.

சாய்ந்த கோபுரம்போல் நின்றவன் தன்மேல் ஒரு கை படவே, தலையைத்தூக்கினான். திரும்பி பார்த்தான். தன் நண்பன் மதிவாணன் அருகில் நிற்பதைக் கண் டான்.

"ஏன் இளங்கோ? எப்போது வந்தாய்? புதுமணப் பெண் போல் ஏன் பேசாமல் நிற்கிறாய்? ஏதும் புது மோகமோ? ச்சே! நீதான் காதல் என்றால் கசக்கும் என்பவனாச்சே! வா! வீட்டிற்கு!"

அவன் நண்பனின் வார்த்தைகள் ஒன்றும் அவன் செவியில் விழுவதாகத் தோன்றவில்லை. அவன் மனம் "யார் இக் கன்னி?" என்று ஆராய்ந்தது. ஆராய்ச்சியி லிருப்பவன் அமைதியையே நாடுவான். அனாவசியமாக சத்தம் வந்தாலும் அதையா கவனிப்பான்? அவனுக்கு அம் மின்னல் கொடியை எங்கோ பார்த்ததாக தோன்றி யது. ஆகவே யோசித்து யோசித்துப் பார்த்தான். "சிந் தனை செய்து எதையும் முடிவு செய்!" இது அவன் சித் தாந்தம். எனவே சிந்தித்தான். தன் சிந்தையை கலக் கிச் சென்ற அந்த சிங்காரி யார் என்று. அவள் போகும் திசையை நோக்கியே வெறிக்க, வெறிக்கப் பார்த்துக் கொண்டே நின்றான்.

"இளங்கோ! ஏன் பேசாமல் நிற்கிறாய்? ஏன் அங் கேயே வெறிக்க, வெறிக்கப் பார்க்கிறாய்? என்ற நண்ப னின் வார்த்தைகள் அவனை சிந்தனைச் சிறையிலிருந்து

விடுதலை யளித்தன. நெற்றியில் படர்ந்திருந்த சிந்தனைக் கோடுகள் அகன்றன. ஓடி மறைந்திருந்த புன்னகை அவன் உதடுகளில் அமர்ந்தது. சுருங்கிப் போயிருந்த அவனது கண்களில் சுடர்போல் பிரகாசம் தோன்றியது."

புன்னகை பூக்க, "ஒன்றுமில்லை!" என்முன் இளங்கோ.

மீண்டும் சிந்தனை ரேகைகள் அவன் நெற்றியில் படர ஆரம்பித்தது. அவன் நண்பனிடமே அவள் யார் என்று கேட்கலாம் என மனம் கூறிற்று. "பெண்ணைப் பற்றி ஒரு வார்த்தை கேட்டாலே போதும், தப்பெண்ணம் கொள்ளும் பொல்லாத உலகம் அல்லவா இது! சூதுவாது தெரியாத சிறுவர்கள் இதிலிருந்து தப்பிக் கரையேற முடியாது! எச்சரிக்கை!" என்ற ஒரு 'அபாய அறிவிப்பு' அவன் மனதில் உதித்தது.

கலங்காதே! நீதான் உலகில் சீர்திருத்த வாதியாயிற்றே! ஆண் பெண் வேண்டுமளவு அளவளாவலாம், அதை தப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று உபதேசிப்பவனுயிற்றே! அந்தக் கொள்கையை நீயே ......நிரூபிக்கத் தவறினல்......அதுவும் அவனியிடமல்ல; அத்தியந்த நண்பனிடம். மாற்றூரிடமல்ல; மனதுக்கிசைந்த சிநேகிதனிடம். கெடுமதி கொண்டோரிடமல்ல; உன் நண்பனிடம்......உலகில் எவன் பெரிய சீர்திருத்த வாதியென்ருல் முதலில் தன்னையே சீர்திருத்திக் கொள்பவன் என்று கூறும் நீயே கோழையானல்......?" என்றது சீர்திருத்த மனது.

ஆடிக்கொண்டு நின்றதால் ஓடி ஒளிந்த தைரியம் அவன் மனதில் ஓடிவந்து அமர்ந்தது.

"நண்பா! யார் அதோ செல்லும் அந்த அணங்கு?" என்று அவள் சென்ற திசையை சுட்டிக்காட்டினன்.

"ஏன் காதல் காய்த்துவிட்டதோ? ஆசைப் புயல் அடித்துவிட்டதோ? சரிதான்! விரம் பேசும் நீயுமா

வீழ்ந்து விட்டாய்?" என நக்கலாகப் பேசினன் நண்பன்.

இளங்கோ எதிர்பார்த்த பதில்தான் அது. அதனை நினைத்துதான் அவன் உதடுகள் முதலில் அசையமறுத்தது. ஆனல் இனி என்ன செய்ய......? "எல்லாம் தாங்க இந்த மனம் இருக்கிறது. கேலியும் கண்டனத்தையும் கண்டு புறமுதுகு காட்டுவது இலட்சிய வீரனுக்கு அழகல்லவே!" என்று வெட்கத்தை விரட்டி அடித்தது அவன் வீர உள்ளம். புன்னகையுடனே தன் நண்பனிடம் நடந்ததைக் கூறினன். நண்பனும் சிரித்தான். இளங்கோவும் சிரித்தான். ஏன் சிரித்தான்? எதற்காகச் சிரித்தான்? என்பது அவனுக்கே தெரியாது. காரணமில்லாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன். பைத்தியக்காரனு அவன்? ஆம்! பைத்தியம்தான் பிடிக்க ஆரம்பித்து விட்டதே! உண்மைதான்! காதல் பைத்தியம் அவன் மனதில் தோன்றிவிட்டதே!

தங்கு தடையின்றி பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக்கொண்டே, "நண்பா! அவளை நான் எப்போதோ பார்த்தமாதிரி தோன்றுகிறது. நெருங்கிப் பழகியது போல் ஒரு நேச உணர்ச்சி என் மனதிலே அரும்புகிறது. அதற்காகத்தான் கேட்டேன் அவள் யார் என்று!"

"பூ! இவ்வளவுதானு? எந்த கூட்டத்திலும் ஒரு வேளை குறுக்கு கேள்வி கேட்டிருப்பாள். ரெயிலிலாவது, டிராமிலாவது சந்தித்திருப்பாய்."

"இல்லை மதிவாணு! சின்னஞ் சிறு வயதில் சந்தித்ததுபோல், கூடிக்குலாவியதுபோல் ஒரு ஞாபகச் சக்தி தெரிவிக்கிறது."

"சரி! யார் கண்டார்கள் அதை? அது கிடக்கட்டும். வா! காப்பி சாப்பிடலாம். அவள் பெண்வீட்டைச் சேர்ந்தவள்." என்று அவன் நண்பன் அவனிடம் சொல்லிக்கொண்டே வீட்டிற்கு அழைத்துச் சென்ருன். ஆனல்

இளங்கோவின் கண்களோ, திரும்பி திரும்பி அவள் சென்ற திக்கையே அடிக்கடி பார்த்துக் கொண்டே வந்தன.

நண்பன் அவனுக்கு காபி, பலகாரம் கொண்டுவரச் சொன்னான். விழுந்தடித்துக் கொண்டு ஒரு வேலைக்காரன் எல்லாம் கொண்டு வைத்தான். ஆனால் இளங்கோவுக்கு ஆகாரம்......செல்ல மறுத்தது. பலகாரங்களெல்லாம் வேப்பங்காய்கள்போல் இருந்தது. காப்பியும் ஒரே கசப்பு அவனுக்கு. நெஞ்சிலே பாரம் இருந்தால் உணவு செல்லாது; உறக்கமும் கொள்ளாது என்பது உண்மைதான் என்றது அவன் மனம். அதிலும் காதல் நோயின் பாரம் நெஞ்சை கப்பிக் கொண்டால்......? "காதல் தோன்றினல் பாலும் கசக்கும்; பஞ்சணை மெத்தையும் குத்தும் தோழி!" என்ற பாடல் காற்றிலே அசைந்து வந்ததுபோல் தோன்றியது. "அப்படியானல்......எனக்கும் காதல் நோயா? என் இலட்சியக் காதல் இன்பவல்லிகளிடமும் சென்று விட்டதா? ச்சீ! என் இலட்சியம்! இதயகீதம்! இன்பத் திராவிட விடுதலை! எல்லாம் இடிந்துவிடுமோ? முடியாது! நான் காதலிக்க முடியாது!"

"முடியாதா? மடையா! காதலில் இருந்து தப்பிக் கொள்ளவா நினைக்கிறாய்? மன்னாதி மன்னர்களெல்லாம்; வீராதி வீரர்களெல்லாம்; சூராதி சூரர்களெல்லாம்; தேவாதி தேவர்களெல்லாம் காதல்முன் தெண்டனிட்டுப் பணிந்துவிட்டார்கள். நீ எம்மாத்திரம்?"

மனம் பெரிய போர்க்களம். அதில் நீதிக்கும் அநீதிக்கும் இடையே பெரிய போராட்டங்கள் நடக்கும். ஆனல் இளங்கோவுக்கோ......இலட்சியத்திற்கும் காதலுக்கும் கடும் போர். போரின் வெற்றி....,.? வெற்றி யாருக்கும் கிடைப்பதற்குள்...சன்னலுக்கு வெளியே அந்த சண்பக மலரின் சந்திர வதனம் தோன்றியது. பாலைச் சிரிப்பு சிந்தினுள் பாவை. இளங்கோவின் கண்களும்

அவளைச் சந்தித்து விட்டது. வேல் விழியால் விம்மும் அவன் நெஞ்சை குத்திச் சென்றது அந்த வெண் டாமரை.

பாவம்! இளங்கோ அப் பாளைச் சிரிப்பில் பலியாகி விட்டான். ஆம்! அவன் மனம் பாளைச் சிரிப்பில் பறி போய்விட்டது. இலட்சியமும் பலியாகிவிட்டதே. அவள் வீசிய அந்த மின்னல் வீச்சு அவன் இருண்ட இதயத் தில் இன்ப ஒளி ஏற்றிவிட்டது. அவள் மறைந்தபின் அவன் கண்களில் ஏக்கமே பிரதிபலித்தது. எதையோ பறிகொடுத்தவன் போல் இருந்தான். அவன் உள்ளமோ......“ அவள் யார்? அவள் யார்?” என்று ஓயாமல் வினவியது, ஆனல் விடை......?

---

3. ஜோடிப் புறாக்கள்

அதிகாலை. காகங்கள் கரைந்தன. புள்ளினங்கள் தங்கள் இனிய கானங்களை பரப்பத் தொடங்கிவிட்டன. இளங்கோவும் துயில் நீங்கினன். உடனே ஆற்றிற்குச் சென்று குளித்துவிட்டு வந்தான். வீட்டிலோ மேளங்கள் காதைப் பிளக்கும்படி முழங்கின. சிறுவர்கள் உற்சாக மாக ஓடியாடிக்கொண் டிருந்தனர். எங்கிருந்தோ மணி ஐந்து என்பதற்கு அறிகுறியாக மணியின் ஒலி கேட் டது. இளங்கோ ஆடையலங்காரம் செய்துகொண்டான். அவன் உள்ளத்திலே ஓர் உவகை. ஆனந்தக் களிப்பு. என்றுமில்லா உற்சாகம் அன்று அவனுக்கு. அவசர அவசரமாக புறப்பட்டான். மணமகனிடம் சென்றான். மணமகன் அவனைத்தான் அந்த திருமண நிகழ்ச்சிக்கு தோழனாக நியமித்திருந்தான்.

தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு தொங்கு தோட்டம்போல் விளங்கியது மணமேடை. விண்மீன்கள்

போல் மின்சார விளக்குகள் ஒளிவீசிக்கொண்டிருந்தன் சிறுவர்கள் ஆனந்தச் சிந்துபாடிக்கொண் டிருந்தனர். மேளங்கள் முழங்கின. மணமகனுடன் இளங்கோவும் மணமேடைக்கு வந்தான். அவனுக்குச் சமீபத்தில் நின் ருன். அவன் கையில் ஓர் பன்னீர்ச் செம்பு! பன்னீரை சிறிது நேரம் பக்கத்தில் நின்றவர் மேல் தெளித்தான். ஆனல் அவன் உள்ளமோ "ஏதோ ஒரு புதையலை" தேடும் வேலையில் ஈடுபட்டது. ஆம்! அவன் கண்கள் அவளைத்தான் - மின்னல் வீச்சு வீசி மின்னல்போல் மறைந்த அவளைத்தான் - தேடியது. "அவள் யார்?" என்ற வினவுக்கு ஏற்றவிடை கிடைக்கவில்லை அவ னுக்கு. அவள் பெயர்கூட அவனுக்குத் தெரியவில்லை. ஆனல் அவன்; மனமோ......வெகு நாட்களாக நெருங் கிப் பழகியவள்தான் என அறிவித்தது. ஆனல் அது அவனுக்குப் புரியாத புதிராகத் :தோன்றியது. அதனல் அவன் உள்ளத்தில் உவகை யில்லை - அமைதியுமில்லை. கடலிலே புயல் வீசும்வரை அலை உண்டே! அமைதியா கிடைக்கும்? அதுபோலவே அவன் மனத்திலே "அவள் யார்?" என்ற கேள்விப் புயல்! பின்பு அங்கு அமை திக்கு இடம் ஏது?

அவன் கண்கள் மாத்திரம் அங்குமிங்கும் மேய்ந் தது. மேயவில்லை; காணுத ஒரு பொருளைக் காண விழையும் கண்கள்போல் அங்கு நின்ற கூட்டத்திடையே தன் இச்சைபோல் பாய்ந்தது. ஆனல்......? கண்களில் அந்தக் கற்பூரகப் பெட்டகத்தைக் காண முடியவில்லை.

"இல்லை! வருவாள்! வந்தாலும் வந்திருப்பாள்; கண்டிப்பாக வந்துதான் தீரவேண்டும்; கலியாண வீட்டு விருந்தாளியவள். காணவில்லை என்று குருடுபோல் கூறுதே. தேடு! கண்களை கூர்மையாக தீட்டிக்கொண்டு தேடு! கவனமாகத் தேடு! கவலையோடு தேடு!" என் றது மனம்.

கண்கள் அங்குமிங்கும் பாய்ந்தன. மின்னல்வேகத் தில் அங்குள்ள கூட்டத்தை மறுபடியும் முற்றுகை

யிட்டது. கோட்டைக்குள் தான் கோரிய கோதை இருந்தால்தானே......? ஆனல்...?

பார்த்து பார்த்து கண் பூத்துப் போனதுதான் மிச்சம்!

மணப் பெண்ணை தோழிகள் அழைத்துக் கொண்டு வந்தனர். தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு, கண்கள் மூட. தள்ளாடித் தள்ளாடி வந்தாள் மணமகள்.

அங்குமிங்கும் அலேந்தோடிய அவன் கண்களும் அக் காட்சியைக் கண்டன. கண்டதும் அவன் கண்கள் மகிழ்ச்சியால் விண்மீன்கள்போல் ஜொலித்தன. கருகிய அவன் முகத்திலே ஓர் களிப்பு! எங்கோ ஓடி மறைந்திருந்த புன்னகை அவன் இதழோரத்தில் வந்து அமர்ந்தது. பூரிப்பால் அவன் நெஞ்சு விம்மி, விம்மி அடங்கிற்று. காணுத புதையலேக் கண்டெடுத்தவன்போல் களிப்புக் கடலில்நீந்தியது அவன் உள்ளம். கரைகாணுத கடலில், காரிருளில், ஒளிக்காக அலேந்த ஓடம், கலங்கரை ஒளியைக் கண்டதுபோல் களிப்பு அவனுக்கு. காரணம்......?

யாரை அவன் உள்ளம்காண விழைந்ததோ, யாரை அவன் கண்கள் தேடினதோ அந்தக் கன்னியே மணப் பெண் தோழியாக காட்சி தந்தாள். மணமேடைக்கு வந்து மணமகன் அருகில் அமர்ந்தாள் மணமகள். அவளுக்குச் சமீபத்திலே ஒய்யாரமாக நின்ருள் அவனின் ஒய்யாரி.

அவனுக்குச் சில அடிகள் தூரத்தில்தான் அந்தச் சித்திரப்பதுமை நின்றது. ஆனல் அவனுக்கோ........ ஆயிரங்கணக்கான மைல்களுக்கு அப்பால் நிற்பது போல் தோன்றியது. மணமகளும் மணமகனும்இணேந்து நெருங்கி யிருப்பதுபோல் இருந்தால்......அவன் விம்மும் நெஞ்சின் அடித்தளத்தில் எழுந்த ஆசை இது.

அவன் கண்கள் அடிக்கடி அவளேயே நோக்கின. அவன் உதட்டிலே ஓர் புன்சிரிப்பு! பார்வையிலே ஓர்

ஒய்யாரம்! முகத்திலே ஓர் குதூகலம்! கண்களிலே ஓர் காந்த ஒளி! ஆனல் அவளோ......? வெகு நேரம் ஆகியும் அவனை நோக்கினுள் இல்லை. சினிமா பார்க்கச் செல்பவன், சினிமா துவக்கும்வரை கொட்டகையினுள் இருந்துகொண்டு எவ்வாறு துடிப்பானே? அவ்வாறு இளங்கோவும் துடித்தான். அவள் தன்பக்கம் அவளின் பனிப் பார்வையை ஓட்ட, அவளின் செவ்வுதடுகளின் புன்சிரிப்பைக் காட்ட, அவள் கவனத்தை தன் பக்கம் திருப்ப என்ன வழி? யோசித்தான் இளங்கோ!......... அவன் கரத்தை ஒரு எறும்பு கவ்வியது. கரத்தைத் தூக்கிக் கொண்டு கையைச் சொரிந்தான். அவன் கையிலுள்ள பன்னீர் செம்பின் மீது அவன் பார்வை விழுந்தது. பரவசப் பட்டான். பாதைதெரியாமல் தடுமாறு நடுக்காட்டில் திரிபவன் கண்களுக்கு ஓர் ஒற்றடி பாதை தென்பட்டால்......? களிப்பு அடையாமல் இருப்பானு?

பன்னீர் தெளிக்க ஆரம்பித்தான் பக்கத்தில் நின்றவர்கள்மேல். பின்பு...அவன் பச்சைக்கிளிமேலேயே தெளிக்க ஆரம்பித்தான். பன்னீர்த் துளிகள் முகத்தில் விழுந்ததும், பாவை தன் முகத்தை துடைத்துக் கொண்டாள். ஆனல் அவள் தன் பார்வையை வேறு திசை திருப்பவில்லை. இளங்கோவின் இதயத் துடிப்பும் இரட்டிப்பாயிற்று. வேண்டுமென்றே அவள் முகத்தின்மீது மீண்டும் தெளித்தான். மீண்டும் மீண்டும் தன்மேல் பன்னீர் துளிகள் விழவே, பாவை தன் பார்வையை பக்கத்தில் மெல்ல ஓடவிட்டாள்.

அவளுக்கு எதிரே, வெகு சமீபத்தில் மணமகன் தோழன் கையில் பன்னீர் செம்போடே நிற்பதைக் கண்டாள். ஆம்! அன்று 'நாய்க்குப் பயந்த புலி' நகைமுகத்துடன் நிற்பதைக் கண்டாள். அவளையும் அறியாமல் கேலிச் சிரிப்பு ஒன்று அவள் நெஞ்சினின்று பொத்துக் கொண்டு வந்தது. ஆனல் அதனை கடிவாளம் போட்டு அடக்கிவிட்டு, கண்களிலே கனிரசம் சொட்ட, இதழிலே புன்னகை தவழ அவனையே நோக்கினுள். இருவரது

கண்களும் சந்தித்தன. ஏக காலத்தில் காதல் ஒளி வீச இருவரது கண்களும் சந்தித்தது இதுதான் முதல் தடவை.

கண்களோடு கண் நோக்கின......?

பெண் என்றாலே பயந்து நாணிக் கோணும் இளங் கோவும் அவளையே நோக்கினான். "சந்தர்ப்பம் ஒரு தோன்றி மறையும் மின்னல்; அதன் ஒளி ஓடி மறைவ தற்குள்ளே, நாம் நம் வேலையை முடித்துவிடவேண்டும்" என்ற மொழி அவன் வெள்ளை மனதில் துள்ளிப் பிரகா சித்தது.

"இதோ! இந்தப் பன்னீரை வாங்கி அந்தப் பக்கம் தெளி!" என்றான். நினைத்த குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும் என்ற ஊக்கம், எந்தக் கோழையனையும், வீர னாக்கிவிடும் என்பதை அவன் நிரூபித்தான்.

பன்னீர் செம்பை நீட்டினான். கைகளிலே ஒரு நடுக் கம். மனத்திலே மாசு யிருந்தால் கை யென்ன, உடலே நடுங்கத்தானே செய்யும். அவளும் தன் கரங்களை நீட்டி னாள். பன்னீர் செம்பை கொடுப்பதுபோல் இளங்கோ அவளின் கரங்களைப் பற்றினான். அவன் உடம்பெங்கும் ஓர் "உஷ்ண நீரோட்டம்" மின்சார அதிர்ச்சி யுண்டாக் கிற்று அந்த பிணைப்பு. இருவரது கண்களும் கடும்போர் புரிந்தன. மாம்பழக் கீற்றுகளாயின அவள் கன்னங் கள். ஆனால் கரங்களோ......விலக மறுத்தது. காந்தம் இரும்பை, கவர்ச்சித்தால் இரும்பு எளிதில் பிரிந்து விடுமா?

'உங்கள் அன்பின் பிணைப்புக்கு நான் ஏன் இடைஞ்சலாக நின்று இடத்தை அடைகிறேன். நானும் விலகிவிடுகிறேன். உங்கள் அன்பு வாழட்டும்." என்று கூறுவதுபோல் கைகளிலிருந்த பன்னீர் செம்பு தரை யில் உருண்டது.

திடுக்கிட்டார்கள் இருவரும். இருவரது கரங்களும் திடீரென விலகியது. இருவரும் பன்னீர் செம்பைத்

தூக்க, கீழே குனிந்தனர். ஒருவரது தலையின்மீது ஒருவர் தலை மோதியது. காதல் போதையில் வலிகூடவா தெரியும்...? இவையாவும் மின்னல் வேகத்தில் நடந்து முடிந்தது.

இதையெல்லாம் கண்ணுற்ற ஒரு பாட்டன் தன் காதற்கிழத்தியிடம் "பார்த்தியாடி, அந்த ஜோடிப் புறாக்களை"

"ஜோடிப் புறாக்களா ? எங்கே பறக்கிறது ?"

"புறாக்களல்ல ! காதல் ஜோடியால் கட்டுண்ட புறாக்கள்போல் இருக்கும் அந்த தோழனையும் தோழியையும் பார்த்தியா ?"

"ஆம்! அசல் பெண்ணும் மாப்பிள்ளையும்போல்..."

"ஆம்! பெண்ணும் மாப்பிள்ளையுந்தான்"

இதைக் கேட்ட இருவருக்குமே ஒரு அதிர்ச்சி உண்டாயிற்று. உடம்பெங்கும் ஒரே புல்லரிப்பு! கைகளிலோ நடுக்கம்! வெட்கம் வேறு! தலைக்குனிந்தனர். ஆனால் கண்கள் மட்டும்......மூட மறுத்தது. இருவரது கண்களும் ஏககாலத்தில் போராட்டம்தொடங்கிற்று. போரின் முடிவு...?

இரு புஜமும் வெற்றியே! ஆம்! இரண்டுபேருடைய கண்களும் சமாதான உடன்படிக்கையில் தான் கையெழுத்திட வேண்டியதாயிற்று, ஆம்! காதல்தான் சமாதான உடன்படிக்கையாயிற்று. இருவரது நெஞ்சிலும் மொட்டாக இருந்த காதல் ரோஜா மலர்ந்தது.

---

4. ஒளியா ? இருளா ?

மறுநாள் காலை. வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்தில் ஆழ்ந்தசிந்தனையில்அமர்ந்திருந்தான் இளங்கோ. தென்றல் பூக்களை முத்தமிட்டு நறுமணத்தை எங்கும்

வாரியிறைத்தது. சூரியன் மஞ்சளும் சிகப்பும் கலந்த வர்ணக் குழம்பை வான மண்டலமெங்கும் பூசிவிட்டது போல் காணப்பட்டது. தோட்டத்திலுள்ள செடிகளின் மீது அதன் மஞ்சள் ஒளி வீசவே, தோட்டம் தங்கமய மாக பிரகாசித்தது. இயற்கையின் எழில் வதனத் திலோ, மணம் தரும் போதையிலே இளங்கோவின் மனம் நாட்டம் கொள்ளவில்லை. "அவள் யார்?" அவள் யார்?" என்ற வினவே அவன் உள்ளத்தில் வேரூன்றி யது. அந்த சமயம் அவன் மேல் ஒரு கடிதம் பறந்து வந்து விழுந்தது. அதைக் கையிலெடுத்துக் கசக்கி வீச எத்தனித்தான். "இன்னுயிரே!" என்ற வார்த்தை அவன் இதயத்தைக் கவர்ந்தது. கசக்கிய கடிதத்தைப் பிரித்தான்.

புதையலுக்காக தவங்கிடந்தவன் புதையல் கிடைத் ததும் எவ்வாறு பூரிப்படைவானே? வானநூல் வல்லு னர் வானிலே ஒரு புது கிரகம் கண்டுபிடித்தால் எவ் வாறு ஆனந்த மடைவாரோ? மேகத்தைக் காணுததால் முகத்தைக் கோணிக்கொண்டு கிடந்த மயில், மேகத் தைக் கண்டதும் எப்படிக் களிநடம்புரியுமோ? அது போல் அவன் உள்ளம் நர்த்தன மாடியது. ஆனந்தக் கூத்தாடினன்.

"க்ளுக்" என்ற சிரிப்பொலி! திடுக்கிட்டு பின் புறம் திரும்பினன் இளங்கோ. ஆச்சரியம். இல்லை! ஆனந்தம் அணை கடந்தது அவனுக்கு. ஆம்! அவன் வாழ்வின் வரப்பிரசாதம், இன்பத்தின் வசந்தம், முத் துப் பற்களைச் சிந்துவதுபோல் சிரித்துக்கொண்டு நின் ருள். இளங்கோ எழுந்தான். உடலெங்கும் ஓர் மின்சார அதிர்ச்சி! மெதுவாக அவளை நோக்கி நடந்தான். அவ ளும் புன்சிரிப்பு பூக்க அவன் எதிரே வந்தாள். அவ ளின் கரங்களைப் பற்றினன். ஆனல் வாயோ......'பேச மாட்டேன்' என்று சத்தியாகிரகம் செய்தது. சிறிது நேரம் மௌனமே ஆட்சிசெய்தது. பேச வாயெடுப் பான். ஆனல் உதடுகள் அவ் வார்த்தைகளை சிந்த

மறுத்துவிடும். 'நெஞ்சிலே மட்டற்ற மகிழ்ச்சி நிறைந்து விட்டால்.......வார்த்தைகள் வெளிவராது' என்று விளக்கம் கூறியது மௌனம். ஆனல்......சிறிது நேரத்தில் அவன் ... ...

" அன்பே !" என்ருன்.

பேசாமடந்தைபோல் நின்ருள் பாவை. ஆனல் இளங்கோவுக்கு சிறிது தைரியம் உண்டாயிற்று.

" அன்பே ! உன் பெயர்......"

" இளவேனில் " முத்துப் பற்கள் சிந்திய ரத்தினப் பெயர் இது."

" இளவேனில்! என் இளமை வாழ்வின் இளவேனில் நீ! வாழ்வின் வசந்தமே !"

" உங்கள் பெயர்......?"

" இளங்கோ !"

" இளங்கோ ! நான் வருகிறேன் ! அங்கே என் தோழிகள் நிற்கிருர்கள். வந்துவிடுவார்கள்."

" இதற்குள்ளாகவா போகப்போகிருய்...—?"

" ஆம்! விடுங்கள் ! விபரம் கடிதத்தில் !"

" இனி நம் சந்திப்பு......"

" கடிதத்தில் உள்ளது! "இருளா? ஒளியா?" என்ற கேள்வியும் அதில் இருக்கிறது. பதிலுடன் வாருங்கள் "

இதற்குள் " இளவேனில், இளவேனில்" என்ற குரல் கேட்டது. " இதோ வருகிறேன். " என்ருள் இளவேனில்.

" இளவேனில் ! எழில் விளக்கே! போகிருயா ?"

" ஆம் ! மீண்டும் சந்திக்கலாம்......பின் ..."

" இளவேனில் !"

" இளங்கோ !"

இளவேனில் பிரிந்து சென்ருள். பிரியாது பிரிந்தாள் பேதை. இளங்கோ அவள் செல்வதையே பார்த்துக்கொண்டு நின்ருன். அவளும் திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே சென்ருள். அவள் மறைந்ததும் பெருமூச்செறிந்தான் இளங்கோ. தன்னையே மறந்து நின்ருன். "இளவேனில்! ஆ! இளவேனில்! இனிமையான பெயர்! என் வாழ்வின் இளவேனில்தான் நீ?" என்ற இன்ப மொழிகள் அவன் இதயத்திநின்று வெளிவந்தன.

கடிதம்! ஆம்! அவன் காதற்கிழத்தி எழுதிய கடிதம்! கையிலெடுத்தான். படபடவென வாசிக்கலானுன். எல்லையில்லா இன்பம் அவனுக்கு. அவன் தொல்லையை துடைக்கவந்த சஞ்சீவி அல்லவா அது.

"இன்னுயிரே" தொடக்கம் இது.

"ஆஹா! எவ்வளவு இன்பம்! இனிமையான உயிர் நான்! அவள் அன்புதான் என்னே!" என்றது விம்மிய நெஞ்சு.

இன்னுயிரே,

காதல் வலை வீசி என்னுள்ளத்திலே காந்த ஒளி பரப்பி, காதலால் கட்டுண்டு கலங்கி என்னைத் தவிக்க விட்டு நிற்கும் கற்கண்டே! கரும்பின் சுவையே!

விரிந்த உமது மார்பு விம்மும் என் நெஞ்சில் விளக்கேற்றி விட்டது. ஆம்! காதல் ஒளி என் உள்ளத்திலே காட்டாறுபோல் வீசிவிட்டது. கலங்கித் தவிக்கிறேன். கடிதம் எழுதவேண்டும் என்ருல் கரங்கள் நடுங்கின. ஆனுல் நடுங்கும் கரங்களையும் ஏதோ ஒரு சக்தி உயிர் ஊட்டியதுபோல் என் கடிதமும் ஓட ஆரம்பித்து விட்டது. இருளில் உள்ள எனக்கு ஒளியருளிய வாழ்வின் விளக்கே! வற்ருத ஊற்றே! அன்பின் சிகரமே! அடைக்கலம் கேட்கிறேன். அபலையாக்கி விடாதேயும்! அன்பின் ஆதரவு அருளும்! அறிவின் சுனையே!உமக்கு அடிமை நான்.

பன்னீர் தெளித்துப் பரவசப் படுத்தினீர் அன்று. பன்னீர் மணத்திலே பூத்த நம் காதல் பன்னீர்போல் மணக்குமா? பாசிப்பிடித்த குட்டைபோல் நாறுமா? பிறைச் சந்திரன் போல் வளருமா? பிய்ந்துபோன புத்தகம்போல் தேய்ந்து கொண்டு வருமா? பளிங்குபோல் ஒளி வீசுமா? பாதி இரவுபோல் இருளாகி விடுமா? ஒளியா? இருளா?

"ஏன் இந்த வீண் சந்தேகம்? வீண் மனக்கவலை? வீண் விசாரம்? என்மீது நம்பிக்கை யில்லையா? நம்பிக்கையில்லா தீர்மானம்போல் ஏன் கேட்கிறுய் இப்படி? நட்டாற்றில் விட்டு விடுவேன் என்ற பயமா? அல்லது நயவஞ்சக நரியாக மாறுவேன் என்ற நம்பிக்கையின்மையா? அல்லது நானும் கன்னியரை வேட்டையாடும் காமுகன் என்ற எண்ணமா?" என்று நீங்கள் கேட்கலாம். கேட்கக் கூடியதுதான்.

ஏன் இப்படி கேட்கிறேன் தெரியுமா? நான் ஒரு கிறிஸ்தவப் பெண். நீங்களோ இந்து! நம்மிருவருக்குமிடையே மதம் என்ற மாயக் கோட்டை வளர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல; நான் ஏழை. நீங்களோ சீமான். ஏழ்மை என்ற அகழியும்; மதம் என்ற மாயக்கோட்டையைச் சுற்றிலும் வெட்டப்பட்டுள்ளது. சமூகத்தின் ஏற்றதாழ்வு என்ன சாக்கடை நீர் அந்த அகழியில் ஓடுகிறது. சனுதனிகள் முதலைகள் போல் அதில் வலம்வருகின்றனர். பெரும் பிளவு நமக்கிடையே. பெரும் போராட்டம் நடத்த வேண்டும் இதை தாண்டவேண்டுமானுல். அதனுல்தான் கேட்கிறேன் ஒளியா? இருளா? என்று. சந்தேக கண்களோடு உங்களைப் பார்க்கிறேன். உறுதி தர முடியுமா? என்று உங்களை உற்று நோக்குகிறேன்.

ஜாதி மதம். ஏற்றதாழ்வு பாராமல் பூத்த நம் காதல் கருகி மடியுமா? கம்பீரமாக நிமிர்ந்து நிற்குமா? ஏற்றதாழ்வு நீங்கும்வரை காதல் கை கூடாப் பொருளாக மாறி விடும் என்று பெரியோர் கூறலாம். எதற்

கும் இந்த பாழும் சமூகத்தை எதிர்த்துப் போராட்டம் தொடங்குவோம். புறமுதுகுகாட்ட வேண்டாம். புகழு டன் வாழ்வு; இல்லை! புழுதியோடு சாவு. சனுதனிகள் நமக்கு சவக்குழி தோண்டலாம். ஆனல் சாய்ந்து விட மாட்டோம். சழக்கரையே சாய்ப்போம்! மூட மதி கொண்ட கேடர் சமூகத்தை முறியடிப்போம்! வெற்றி முரசு கொட்டுவோம்.

இதை கலந்தாலோசிக்க சென்னையிலுள்ள என் வீட்டிற்கு வாருங்கள். விலாசம் கீழே தருகிறேன். விரைந்து வாருங்கள். நான் இன்றே என் தந்தை யுடன் செல்கிறேன். திறந்து இருக்கும் என் வீட்டிற்கு பறந்து வாரீர். பாக்கியம் தாரீர்! வருகிறேன்.

வணக்கம்!

இப்படிக்கு, தங்கள்,

இளவேனில்.

"தங்கள்" என்னிடமே உன்னை ஒப்புவித்து விட் டாயே தங்கக்கிளியே! தாமரை இதழ்வல்லி! தவிக்க உன்னை விடேன்! தரணியே எதிர்த்தாலும் தயங்காமல் உன்னையே ஏற்பேன். கலங்காதே கண்மணி! மதமல்ல; மாநிலமே எதிர்த்தாலும் உன்னை மறவேன் நான். எல் லோராகுகையில் உள்ள எந்த எழில் சித்திரமும் எளி தில் மறந்துவிடும்; ஆனல் நீயோ மறக்கமுடியாத எல் லோரா. எழில் நிழல் நீ! என்னைப் பின் தொடர்கிருய்! எப்படி மறப்பேன்! எவ்விதம் மறைவேன்! பணம் என்ற பாம்பு படம் எடுத்தாலும் பதறமாட்டேன் நான். பயப்படாமல் எதிர்ப்பேன். அதன் பல்லை உடைத்து என் சொல்லை நிறைவேற்றுவேன். பாட்டாளி, பணக் காரன் என்ற பாகுபாடு மறைய பாடுபடும் பகுத்தறி வாளி நான். பாரிக்கு முதல் சீர்திருத்த வாதிக்கு எடுத் துக் காட்டாக விளங்குவேன். இது நிச்சயம்! சத்தியம்! உறுதியும்கூட!" என்ற வார்த்தைகள் அவன் வாயி னின்று உதிர்ந்தன கடிதத்தைப் படித்ததும். மீண்டும்

மீண்டும் மடலைப் படித்தான். மளமளவென்று படித்தான். மார்போடு மடலை அணைத்தான். மீண்டும் கையில் எடுத்தான். வாயின் அருகே கொண்டுவந்தான். கனி முத்தம் பொழிந்தான் அதன்மீது.

---

5. சந்தன மரம்

இதற்குள் கனைப்பு சத்தம் கேட்கவே திடுக்கிட்டான். வெட்கம் வேறு. திரும்பினன். எதிரே அவன் நண்பன் மதிவாணன். அவன் உதடுகளில் ஏளனப் புன்னகை. கண்களிலே ஓர் பரிகாசம்!

"இளங்கோ! நீயுமா......? காதல் ஒரு தொத்து நோய்! யார்மீதும் அது எப்போதாவது தொத்திக்கொள்ளும். அதற்கு சிகிச்சை கிடையாது என்ற என்னிடம் "நோயை தடுக்க ஏற்ற இலட்சியம் என்ற இன்செக்ஷன் என்மீது போடப்பட்டு விட்டது. இனி காதல் என்னைக் கண்டு நடுங்கி ஓடவேண்டியதுதான் என்ற நீயுமா...? முத்தமிடுகிருய்......அதுவும் கடிதத்தை."

"ஆம்! மதிவாண! காதலின் காந்த சக்தி தெரியாத கபோதியாகவே இருந்தேன். ஆனல் கண் திறந்து விட்டது என்னையு மறியாமல்."

"நன்றி! 'மனிதன் காதல் மயக்கத்திலிருந்து விடுபட்ட போதுதான், முட்டாள்தனத்தி லிருந்து விடுதலையடைகிறுன். மனிதனுக்கு தீங்கு விளைவிப்பது இரண்டு. ஒன்று பெண். மற்றது பணம்.' என்று கூறி எங்களை ஏளனம் செய்தாய்."

"ஆம்! ஏளனம் செய்தேன். இலட்சிய வீரனுக்கு காதல் ஏன்? இலட்சியமே காதல். பெண் மீது காதல் ஒரு கடுக்காய்; இளமையை - இலட்சியத்தை கொல்லும்

நஞ்சு என்றேன். இளமைக்கு இலட்சியமே ஜீவ நாடி. இளமையில் இலட்சியத்தை நாடு. இன்ப சாகரத்தில் மூழ்காதே என்றேன். உண்மைதான்! ஆனல் காதல் வாலிபத்தின் கூறு என்பதை மறந்தேன். ஆனல் கால தேவனின் ஜாலக் கண்ணடி காதல் காட்சியைக் காட்டி விட்டது. இனி இதிலிருந்து கரையேற முடியாது."

"அது சரி! இளங்கோ! ஆனல் இளவேனில் ஒரு கிறிஸ்தவப் பெண். நீயோ இந்து!"

"தெரிந்ததே! மதம் என்ற மாயப் பிசாசு எங்களுக்கு துன்பம் கொடுக்கும். அதுமட்டுமல்ல; தூர்ந்து போன சமூகத்தின் கண்களுக்கு அவள் ஏழை; நான் சீமான். இருவருக்கு மிடையே நெருங்க வொண்ணு தூரம்!"

"ஆம்! பாசிசம் நம் நாட்டில் பலமாக வேரூன்றி விட்டது. அதினல் பாமரர்கள் பணக்காரர்களின் பதுமைகளாகி விட்டார்கள். சாதி வேற்றுமை என்ற அரக்கன் வேறு நம் நாட்டை அழிக்கிருன். இதில் காதல் கைகூடாது. அதற்கு மதம் என்ற அரண் வேறு. ஏற்ற தாழ்வு என்ற அகழ் வேறு. சிந்தித்துப் பார் இளங்கோ! உன்னை நான் காதலிக்காதே என்று கூறவில்லை. ஆனல் நம் நாட்டிலே - சாதி மத பேதம் பாராத காதல் படும் பாட்டை பாருங்கள். சாதி மத பேதம் அழிந்து சமத்துவம் தோன்ருதவரை—பெண்களுக்குச் சுதந்திரம் கொடுக்காதவரை—காதல் வாழ்வின் தூக்கத்தில் ஏற்படும் கனவுதான்."

"ஆம்! உண்மைதான்! ஆனல் நான் சீர்திருத்த வாதி என்பது உனக்குத் தெரியுமே! போராடுவேன். சாதிமதம் பேசும் சழக்கர்களை எதிர்த்துப் போராடுவேன். பொட்டைக் கருத்தினரை எதிர்த்து என்வாழ்வு பொசுக்கும் வரை போராடுவேன்!"

போராடு! ஆனல் ஒன்று கூறுகிறேன் கேள்! நம் நாட்டிலே மேல்சாதிக்காரன் கீழ் சாதிப் பெண்ணை

என்னவும் செய்யலாம் என்ற நீதி நிலவுகிறது. சாதி பேதம் பேசும் சழக்கர்களே மந்திரிகளாக உள்ளனர். 'அந்தந்த சாதி அந்தந்ததொழில்' என்று மனுநீதி ஓதும் மடையர்களே மந்திரிகளாக உள்ளனர். பஜகோவிந்தம் பாடும் பக்தரே நாட்டில் முதல் மந்திரி. டில்லியில் மந்திரி யின் காரியதரிசி முகமதியன் ஆனதால் அவன் காதல் திருமணத்திற்கு ஏற்பட்ட கதியைப் பார்! இளங்கோ! மதத்தை வளர்க்கும் சட்டங்களே நம் நாட்டிலுள்ளன. இவற்றோடு நீ மோதப் போகிறாய்!"

"ஆம்! மோதத்தான் போகிறேன். மண்டை உடையும்வரை மோதுவேன். மரணமே வந்தாலும் மருளமாட்டேன். இலட்சியவீரனுக்கு வாழ்வது இன்பம்; சாவதும் இன்பமே! உலகத்தில் தன்னையே சீர்திருத்தி கொள்பவன்தான் சிறந்த சீர்திருத்தவாதி. முதலில் என் னையே சீர்திருத்திக் கொள்ளுவேன். சாக்கடை நாற்ற மடிக்கும் சமூகத்திலே நான் ஓர் சந்தன மரமாக விளங்கு வேன். இளவேனிலையே மணப்பேன்."

"இலட்சக்கணக்கான இளங்காதலர்கள் காதலுக்கு இடையூறாக சாதி மத பேதம் நின்றதால் தங்கள் இன னுயிரை நீத்திருக்கிறார்கள். நீயாவது வெற்றிபெறு.....! பாழும் சமூகம் உன்னை சும்மாவிடாது...! இன்னொன்று இளங்கோ! நீயே இலட்சிய வீரன்! இலட்சியம் நிறை வேற்ற இடைவிடாது பிரசங்கம் செய்ய பல இடங்களுக் குச் செல்பவன். உன்னால் இன்பம் கொடுக்க முடியுமா அவளுக்கு! வீட்டிலிருந்து தனியாக தவிப்பாளே! அவ ளின் தாபத்தைப் போக்க முடியுமா? அவளுடன் கொஞ்சி குலாவினால் உன் இலட்சியம் நிறைவேறுமா? யோசித்துப் பார்? விபச்சாரம் நம் நாட்டில் வளர்வது இவ்விதமே! எத்தனையோ இளங்காளைகள் கன்னிப் பெண்களை திருமணம் செய்துவிட்டு; அவர்களின் தாபத்தை உடனிருந்து தணிக்காமல் அயலிடங்களுக்கு பணம்தேட புறப்பட்டு விடுகிறார்கள் பலர். சுட்ட சுண்

ணும்பு தன்னுள் சூட்டை அடக்கிவைத் திருக்கிறது. சிறிது தண்ணீர் தெளித்ததும் சிறிது சூடு கிளம்பும். ஒரேயடியாக தண்ணீர் தெளித்து அதன் சூட்டை தணிக்காவிட்டால்......? மழைத் தண்ணீர், வேறு எந்த தண்ணீரையாவது கிரகித்து தானே கொள்ளும் அது. அவ்விதம் சுண்ணும்புகண்ட தண்ணீரையும் கிரகிப்பது அதன் குற்றமா ......? பெண்களுக்கு ஆசையை கிளறி விட்டுவிட்டு, அடுத்தநாள் அந்நிய இடங்களுக்கு அவளை தனியாக விட்டுச் சென்றுவிட்டால்......அவள் எத்தனை நாள் தன் ஆசையை அடக்குவாள்! எரிந்துகொண்டிருக்கும் தாபத்தை எப்படி தணிப்பாள் ?"

" ஆம் ! கட்டிய மனைவியுடன் பூர்ண இன்பம் அனுபவிக்காமல், அவர்களைப் பிரிந்து செல்பவன் மடையன். ஆனல்....? மதிவாணு! நான் நம்பியவளை நட்டாற்றில் விடலாமா ? இருளா ? ஒளியா ? என்று என்னைநோக்கி கேட்பவளை நான் இருளில் விடலாமா ?"

"அதுவும் கூடாதுதான். ஆனல் உன் முடிவு ...?"

" அவளையும் இலட்சிய வாதியாக்குவேன். என்னுடன் எங்கும் அழைத்துச் செல்வேன். இருவருமே இன்பத் திராவிடத்துக்காகப் போராடுவோம். சமூக சாக்கடைக்கு சந்தன மரமாக விளங்குவேன்.

" நல்லது! சந்தன மரமாகு! சாகும் காதல் மணம் வீசட்டும்."

"நான்நாளைக்கு சென்னை செல்கிறேன் மதிவாணு!"

இதற்குள் மதிவாணனுக்கு அழைப்பு வரவே, மதிவாணன் பிரிந்தான். இளங்கோவும் சிறிது நேரம் இருந்துவிட்டுச் சென்றுன்.

6. ஒளிதான் இருளல்ல!

நெல்லையிலிருந்து ரெயில் ஏறி சென்னைக்குப் பிர யாணமானான் இளங்கோ. ரெயில் வேகமாக ஓடியது. ஆனல் இளங்கோவுக்கோ......ஆமை ஊர்ந்து செல்வது போல் தோன்றியது. "எப்போது தன் இளவேனிலைக் காண்பது. என்னென்ன பேசுவது எப்படி நடப்பது; எவ்விதம் கொஞ்சுவது" என்ற எண்ண அலைகள் அவன் மனக் கடலிலே கொந்தளித்து எழுந்தன. ரயில் சிறிது நேரம் நிற்பதுகூட அவனுக்குச் சித்திரவதை செய்வதுபோல் தோன்றும். தேர்வின் முடிவு நாளை தினத் தாள்களில் வெளியாகும் என்றல் தேர்வு எழுதிய மாணவர்கள் தேர்வின் முடிவைக் காணும் வரையும் எவ்வாறு துடிப்பார்களோ? அங்விதமே இளங்கோவும் துடித்துக் கொண்டே இருந்தான்.

ரயிலில் இளங்கோ இருக்கும் வண்டியின் அறையில் ஒரு நிலையத்தில் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் வந்து ஏறினர். பெண் பார்ப்பதற்கு இளவேனில் போன்றவள். இளங்கோ. தன் இதயவல்லிதான் என்று நினைத்து "இளவேனில்!" என்றன். ஆனல் அந்த பெண்ணே இவனை ஏறெடுத்தும் நோக்கவில்லை. வண்டியில் உள்ள மற்ற பிரயாணிகள் சிரித்தார்கள். அவர்களின் சிரிப்பு அவனைச் சித்ரவதைசெய்தது. தன் மடமையை குறித்து. அவனே வெட்கித் தலை குனிந்தான்.

இருள் தன் ஆட்சியைப் பரப்பத் துவங்கியது இளங்கோ வண்டியில் இருந்துகொண்டே சிந்தனை செய்தான். "இருளே நீ என்முன் நில்லாதே! உடனே ஓடிவிடு" என்று சந்திரன் கூறி சிறிது நேரத்தில் நீலவானிலே பவனிவர ஆரம்பித்தான். ஒளியின் முன் இருள் ஓடி மறைந்தது. இளங்கோவின் மனமும் "ஒளி தான்; இருளல்ல! இளவேனில்" என்று முணுமுணுத்

தது. வான்மதியை சில கருமேகங்கள் வட்டமிட்டு சுற்ற ஆரம்பித்தன. "கருமேகங்கள்! ஆம்! இளவேனில்! மதம், பணம் என்ற கருமேகங்களும் நம்மைச் சுற்றி வட்டமிட்டு மறைக்க வரும்." என்றது அவன் மனம். அதற்குள் கருமேகங்கள் சில சந்திரனை மறைத்துக் கொண்டது. "கருமேகங்கள் சந்திரனை மறைத்துவிட்டதே! என் வாழ்க்கையிலும் கருமேகங்கள் சூழ்ந்து விடுமா? அதிலிருந்து மீளமுடியாதா?" என ஏங்கியது அவன் உள்ளம். அந்த ஏக்கத்திலே அவனைக் கவர்ந்து விட்டது தூக்கம்.

ஞாயிறு தன் ஒளியை வண்டியினுள் வீசியது, ஒளியால் தாக்கப்பட்ட இளங்கோ குதித்தெழுந்தான். ரயில் எக்மூர் ஸ்டேஷனை அடைந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக ரயிலும் நின்றது. நெஞ்சிலே இரவு உதித்த எண்ணங்கள் வலம்வரலாயின. ஆனால் அவன் மனமோ, "இயற்கை நிகழ்ச்சியினை நம்பி நாம் முயற்சியைக் கைவிடுவது மடமைத் தனம், சகுனம பார்க்கும் சழக்கரல்லவா அதை நம்பவேண்டும்" என்றது. இளங்கோ உடனே தன் காதலியை காணவிரைந்தான். காலையின் பசியைகூட அவன் பொருட்படுத்தவில்லை. காதலியை காணவேண்டும என்ற பசியே அவனை வாட்டி வதைத்தது.

இளவேனிலோ.....அன்று காலையிலிருந்து வாசலை எட்டிப் பார்ப்பதும் உள் செல்வதுமாக இருந்தாள். பண்டிகையின் வரவை நோக்கி கையில் பட்டாசு வைத்துக்கொண்டு விளையாட நினைக்கும் குழந்தைகள்போல் குதூகலத்தில் ஆழ்ந்தாள். எல்லையற்ற இன்பம் இன்று. ஆனந்தத்தால் அவள் அழகே என்றுமில்லாது துல்லியமாக பிரகாசித்தது. மேகங்கள் இல்லாத வானவீதியிலே வரும் மதியின் ஒளி, மேகங்கள் உலவும் நாட்களை விட துல்லியமாகத்தானே பிரகாசிக்கும். அதுபோலவே அவள் மனதிலே கவலை என்ற மேகமே அன்று இல்லை.

பின் அவள் வதனத்தில் அழகு கொழிக்க அன்று கேட்கவா வேண்டும்?

இளவேனில் ஓர் எழில்கூடம்! பால் போன்ற தூய வெண்மையல்ல; ஆனால் பனைபோல் கருமையுமல்ல; மாநிறம். முழுமதிதான் அவள் முகம். முற்றும் துறந்த முனிவனும் அவள் முகத்தைக் கண்டுவிட்டால் போதும்; பக்தர்களுக்கு முக்திதரமாட்டாயா? தங்கமே" என்று இவளை நோக்கி கெஞ்ச ஆரம்பித்து விடுவார்கள். புன் சிரிப்போ பூவேந்தரையும் பொசுக்கிவிடும். மொழியோ தேன் சொட்டுதான். கரு வண்டுகள் மருண்டு ஓடும் படிக்கு கருமை படர்ந்த கூந்தல்; அவள் விழி ஒருவன் நெஞ்சிலே ஊடுருவி பாய்ந்துவிட்டால், அவன் மீள வேறு வழி ஏது? பற்களோ முத்துப் பற்கள்தான். பிடியிடை; அன்ன நடை அவள் அழகின் எடைக்கு எவருமே நிகரில்லை.

அவள் உள்ளமோ தூய்மையின் இருப்பிடம். கருணையின் பிறப்பிடம்; அன்பின் உறைவிடம், சிறிய வயதில் ஏதோ எழுத படிக்கத்தான் படித்திருந்தாள். ஆனால் அறிவின் சுனைதான் அவள், அவளது தாய் அவளுக்கு பத்து வயது நடக்கும்போதே இயற்கை எய்துவிட்டாள். வீட்டில் தலைப்பிள்ளை அவள். அவளுக்கு தூயமணி என்ற ஓர் தம்பி! மங்கை என்ற ஓர் தங்கை.

அவளின் தந்தைக்கோ தீராத மனக்கவலை. பாட்டாளிதான் அவர். ஆனால் பணக்காரர். படாடோபமாக செலவழித்து பணம் கரைந்து விட்டது. பாவம்! தற்போது ஏழ்மை என்ற படுகுழியில் வீழ்ந்து கிடக்கிறார். மனம்போல் வாழ்வு என்ற மகத்தான கொள்கையுடையவர். குணத்தின் குன்று! அன்பின் அணிகலம்! பெற்ற குழந்தைகளை உயிருக்கு உயிராகநேசித்தார். ஒவ்வொருவருடைய விருப்பப்படியே நடப்பார். வேண்டுவன கொடுப்பார். 'இல்லை' என்ற வார்த்தையே அவர் அகரா

தியில் கிடையாது. மனநோய் அவரை தீராத நோயில் கொண்டுபோய் விட்டது. ஆம்! காசம் என்ற கடும்நோய் அவரை கப்பிக் கொண்டது. அவர் அன்று கட்டிலில் படுத்துக்கொண்டு இருந்தார். எழுந்து நடமாடகூட அவருக்குச் சக்தியில்லை.

இளவேனில் இளங்கோவைப் பார்த்ததும் ஏதோ ஒரு கள்ளம் அவள் வெள்ளை உள்ளத்தில் புகுந்திருப்பதாக அரிந்தாள். அவளையு மறியாமல் அவன்பால் ஒரு அன்பு சுரந்தது. அந்த அன்பிலேதான் காதல் மொட்டு விட்டது. "தன் உள்ளத்தின் அடித்தளத்தில் உறைந்திருந்த காதல் மலர்ந்து விடுமா? மலர்ந்து விட்டாலும் சமூகம் அதனைக் கருகும்படிச் செய்துவிடுமோ? காதல் வாழ்வு கனவு ஆகிவிட்டால், தன் எதிர்கால வாழ்வும் பாலைவனமாகிவிடுமே? நான் காதல்கொள்ளக்கூடாது. காதல் என் வாழ்விற்கு சாதல். ஆம்! சாதல்தான்.!' என்று எண்ணி தன் நெஞ்சிலே உறைந்திருந்த காதலின் கள்ளத்தை அகற்ற எண்ணினுள்........ஆனுல் காதல் ஒரு காட்டாறு போன்றது. காட்டாறு வெள்ளப் பெருக்கினுல் எந்த மேடான நிலங்களிலும் பாய்ந்து செல்வதுபோல், காதல் எந்த கடினமான மனதிலும் பாய்ந்து விடுமே. அதற்கு அணையேது தடுக்க! என்பதை அவள் அறிவாளா?

அன்று. ஆம்! திருமண வைபவத்திலே மணமேடையில் நேர்ந்த சம்பவம்; பன்னீர் தெளித்துப் பரவசப் படுத்திய இளங்கோவின் கூற்று; பாட்டி, பாட்டன் 'காதல் ஜோடிப்புகள்' என்று கூறிய வார்த்தைகள்; அவள் உள்ளத்திலே கருகிக் கொண்டிருந்த காதலை சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்து விட்டது. காதற்புயல் பலமாக மோதவே அவள் மன ஓடம் பலமாக அலைக் கழிக்கப் பட்டது. தத்தளித்தாள். ஓடம் ஒதுங்கக்கூடிய துறைமுகம் காண வழி. வழியை அறிய ஒளி யேது...... இளங்கோவின் காதல் ஒளியேதான் அதற்கு வழி! அந்த வழியை அடைந்தால்தான் இளங்கோவின் அன்

பின் இருதயம் என்ற துறைமுகத்தை யடைய முடியும் என்பதைக் கண்டாள்.

"இளங்கோ ஓர் இந்து! பெரிய சீமான் மகன் அவன்." என்று அவள் சிநேகிதி கூறியதைக் கேட்டதும் சிதைந்தாள். எங்கே தன் காதல் புல்லின் பூபோல் பூத்து, மதம் என்ற கோரப் புயலால், தாக்கப்பட்டு, மறைந்துவிடுமோ என மருண்டாள். பதை பதைத்தாள், "ஒளியா? இருளா? என் வாழ்வில்" என்ற வினு அவள் உள்ளத்திலே எழுந்தது. "காதல் கைகூடுமானல் ஒளி! ஆம்! எதிர்கால இன்பக் கரையை அடைய கலங்கரை ஒளி! இல்லையேல்,......இருள்! காரிருள் கப்பிக் கொள்ளும் அவள் வாழ்வில்! ஆம்! கடக்க முடியாத, கரைகாணுத காரிருள்தான் என் காதலர் கைவிட்டால்" என்றது அவள் மனம்.

"காதலர் என் வாழ்விற்கு ஒளியேற்றுவாரா? இருள் மூடச்செய்வாரா? இதை அறிய வழி?" தத்தளித்த அவள் நெஞ்சிலே உதித்த ஒருவினு! வினுவிற்கு ஏற்ற விடை காண......அவரிடமே! அவளின் ஆசைக் காதலனிடமே கேட்க வேண்டும். அவரிடம் எப்படிக் கேட்பது? நாணம் என்ற பாணம் வந்து தடுத்துவிடுமே நம் எண்ணத்தை, நெஞ்சிலே உதிக்கும் கேள்விகள் காதலரைக் கண்டதும் நெஞ்சோடே உறைந்துவிடுமே. நாக்கு அசைய மறுத்துவிடுமே, என்ற எண்ணமே அவள் நெஞ்சிலே வலம்வரலாயின.

"மனம் வைத்தால் இடமுண்டு. அதிலும் மங்கையர் காதல் விஷயத்தில் மனம் வைத்துவிட்டால்......காதலை வெளிப்படுத்த வழி கோடியுண்டு. அதுமட்டுமல்ல; இரகசிய சந்திப்பு கூட இரண்டாயிரம் வழி பிறக்குமே" என்ற எண்ணம் அவளைப் பரிகசித்தது. ஏன் வழியில்லை என்று திகைக்கிருய் என்று. ஆம்! நாங்கள மனம் வைத்துவிட்டால்......வழி பிறக்கும் கண்டிப்பாக. கடிதம். ஆம்! காதலை-என் உள்ளக் கிடக்கை-என் காதல

ருக்கு வெளிப்படுத்த வழி.” என்ற ஓர் ஒளி அவள் உள்ளத்திலே துள்ளிப் பிரகாசித்தது.

காதல் என்ற வர்ணம் பூசி, ஒளியா? இருளா? என்ற கேள்வி எழுப்பி கடிதம் வரைந்தாள். கடிதத்தை எப்படி சேர்ப்பது என முதலில் திகைத்தாள். அவள் அன்று இரவு இரயில் சென்னை செல்லவேண்டும். மாலை நேரம் வந்து விட்டது. இளவேனில் ‘இளங்கோவைக் காணவில்லையே? எப்படி கடிதத்தை சேர்ப்பது? என்று ஏங்கிய உள்ளத்தோடு தோழிகளுடன் விளையாடிக் கொண்டு வீட்டின் பின்புறம் நுழைந்தாள். காதலனைக் கண்டாள். கடிதத்தையும் சேர்ப்பித்தாள். “ஒளியா? இருளா?” என்ற ஒரே பிரச்சினை அவள் மனத்திலே கொரியாப் பிரச்சனைபோல் ஆயிற்று. ஐ. நா. சபை எப்படி கொரியா பிரச்னைக்கு வழிகாணது தத்தளிக்கிறதோ, அதுபோல் அவள் உள்ளமும் தத்தளித்தது. ஆனால் அவன் அவளைச் சந்தித்தபோது “இளவேனில்! என் இளமை வாழ்வின் இளவேனில் நீ! என் வாழ்வின் வசந்தமே!” என இளங்கோ கூறியது அவளுக்கு ஒளிதான்; இருளல்ல என்ற நம்பிக்கை யளித்தது. காதலர் கைவிடமாட்டார். காதல் கருகி மடியாது. என்ற நம்பிக்கை ஒளியே அவள் நெஞ்சிலே சுடர்விட்டது. அவள் சென்னையை அடைந்ததும், காதலர் எப்படியும் வருவார்; காதலரை எப்போது காணலாம், என்றே ஏங்கினள். தன் தந்தையிடமும் தன் உள்ளக்கிடக்கை வெளியிட்டாள். தடை சொல்லா தயாளராச்சே தந்தை. காதல் தீர்மானம் அவள் தந்தை என்ற சபையிலே திருத்தம் வெட்டு இன்றி நிறைவேறியது.

மறுநாள் காலை காதலர் வரவுக்காக கதவை வந்து பார்ப்பதும் உள்ளே செல்வதுமாக இருந்தாள். அறுவடை தினத்தன்று உழவன் உள்ளம் விளைச்சலின் பயனைக் காண எவ்வாறு அவா கொள்ளுமோ, அதுபோல்தான் அவள் உள்ளமும் காதல்பயிரின் விளைச்

சலைக் காண - ஆம்! காதலர் கைவிடமாட்டார் என்ற விளைச்சலைக் காண விழைந்தது,

---

7. இன்பக்காவியம்

இளங்கோ இளவேனிலின் வீட்டு வாசலை அடைந்தான். வீட்டினுள் எட்டிப் பார்த்தான். முன் அறையில் ஒருவருமில்லை. வேறு வீடாக இருந்தால்......உள்ளே செல்லத் தயங்கினன் திடீரென ஒருவர் இருமும் சத்தம் கேட்டது. அதனை தொடர்ந்து "அப்பா! என்ன செய்கிறது?" என்று பரிவுடன் வினவும் ஒரு கிளியின் மொழியும் கேட்டது. கிளியின் மொழிதான்! ஆம்! அவனின் ஆசைக் கிளியின் மொழிதான் அது. ஆகவே தைரியமாக உள்ளே பிரவேசித்தான். முதல் அறையிலுள்ள போட்டோக்களையே பார்த்துக்கொண்டு நின்றான். ஒரு போட்டோ! இரு குடும்பங்கள் இணைத்திருந்து எடுத்த ஒரு போட்டோ!.........கண்டதும் திகைத்து நின்றான்.

"என்ன ஆச்சரியம்? இது எப்படி இங்கு வந்தது? எங்கள் வீட்டிலும் இதுபோல் ஒரு போட்டோ கிடந்ததே. யார் என்று கேட்டதற்கு; தந்தை இவர்கள் நமக்குத் தற்போது துரோகிகள் என்றாரே! இதோ நிற்கிறாளே இவள்தான் இவர்களின் மகள்.-அழகு ராணி. அவளும் நீயும் இணைபிரியாது விளையாடிக்கொண்டு திரிவீர்கள் என்றும் கூறினரே. இவர்கள் என் தந்தையின் விரோதிகளா? இளவேனில்தான் இந்தப் பெண்ணா? ஆம்! இளவேனில்தான் இந்தப் பெண்! அவள் முகம்! அதே கண்கள்! அதே சாயல்! அதே சிரிப்பு!" என்று பலவாறு சிந்தித்துக்கொண் டிருந்தான்.

படத்திலே சிந்தனையைச் செலவிட்டுக் கொண்டிருந்த இளங்கோ, "க்ளுக்" என்ற சிரிப்பொலி கேட்டு திரும்பினான். இளவேனில் புன்னகை பூக்க. கண்களில் கனிரசம் சொட்ட, அவனை நோக்கி நின்றாள்.

"என்ன துப்பறியும் நிபுணர்போல் படத்தை துருவித்துருவி பார்க்கிறீர்களே, ஏதாவது உண்மை துலங்கியதா?"

"இல்லை! என் இன்பக்களஞ்சியமே!"

"ஏது! ரயில்வர பிந்திவிட்டதா? அல்லது நீங்கள் தான் ரயிலை விட்டுவரப் பிந்திவிட்டீர்களா? ரயில் இதற்கு அரைமணி நேரத்திற்கு முன் வந்திருக்க வேண்டுமே."

"பசியோடு இருப்பவன் புசிக்கவரும்போதுகூடவா பிந்துவான். நம் போக்குவரத்து மந்திரிகளின் நிர்வாகம் அப்படி!"

"பசியோடு இருக்கிறீர்களா! இதோ காப்பி கொண்டு வருகிறேன்."

"பச்சைக்கிளி நீ என் பக்கத்தில் இருக்கும்போது பசிவேறு எனக்கு. நீதான்! இல்லை. உன் வதனந்தான் நான் அள்ளிப் பருக விரும்பும் அமுதம். இதழ் நீர்தான் நான் இன்பமுடன் பருக விழையும் தண்ணீர்."

"கம்பனும் காளிதாசனும் உங்கள் காதல் வர்ணிப்பைக் கண்டு கைகட்டி, வாய் பொத்தி நிற்கவேண்டியதுதானு? சரி, ஒளியா? இருளா?

"ஒளிதான்; இருளல்ல இளவேனில். உன் மடலை வாசித்தேன். இல்லை! இல்லை! பாராமல் படித்தேன். அதன் இனிமையின்முன் பாதாம் அல்வாகூட புளித்துவிடும். இளவேனில்! உன்னை நான் வேணி என்றே அழைப்பேன்."

'வேணி நான்; பாண்டியன். நீங்கள்."

"வேணி! உன் தந்தை நம் காதல் மணத்திற்கு தடை விதிப்பாரா?"

"ஆமாம்! நிச்சயமாக தடை விதிப்பார்... ஆனால்..."

"தடையா?"

இளங்கோவின் முதத்திலே இருள் படர்ந்தது. சிறு குழந்தையிடம் பழத்தைக் காட்டி அது கையை நீட்டும் போது, அதை கொடுக்க மறுத்தால்......அது எப்படி வருந்துமோ! அதுபோலவே இளங்கோவின் முகமும். இதைக் கண்டு "க்ளுக்" எனச் சிரித்தாள். திகைத்தான் அவன்.

"தடை என்றால் நம் திருமணத்திற்கல்ல......"

"பின்......?"

"நாம் ஒரு போதும் பிரியக்கூடாது என்றுதான் தடை விதிப்பார்."

கருத்துப்போன அவன் கன்னங்களில் களிப்பின் ஒளி வீசியது. அவனுக்கே சிரிப்பு வந்தது. சிரித்தான்.

"என்னை பயங்காட்டி விட்டாயே! பொல்லாத குறும்புக்காரி நீ!"

"குறும்புதானே வாலிபத்தில் கருமபு!" நீங்கள் கரும்பும் அதன் சுவையும்போல் என்னைப் பிரியாமல் இருப்பீர்களா?"

"அதுதான் முன்னே கூறிவிட்டேனே! ஒளிதான் இருளல்ல என்று! இளவேனில்! வேணியை விட்டு பாண்டியன் பிரிவானா? மயில் தன் தோகையைவிட்டுப் பிரியுமா? சொல் இளவேனில் சொல்? மதம் என்ற வைரி வட்டமிட்டுப் பறந்தாலும், சனாதன சர்ப்பங்கள் சீறினாலும்; பணம் நம்மை பிணமாக்கப் பார்த்தாலும் உன்னை கைவிடமாட்டேன். இது உறுதி! உண்மையுங் கூட!"

இதற்குள் இளவேனில் தந்தை "அம்மா! வேனில்! அவரை அழைத்துவா!" என்ற குரல் கேட்டது. இருவரும் கருணாகரர் படுத்திருந்த அறையினுள் சென்றனர்.

"வணக்கம்!"

"வணக்கம் தம்பி!"

"அப்பா! இவர்தான்......"

"தம்பி! இதோ இந்த நாற்காலியில் உட்கார்!"

இளவேனில் நாற்காலியில் அமர்ந்தாள். இளங்கோ தன் தந்தையின் தலைக்கு அருகாமையில் கட்டிலில் அமர்ந்தான்.

"தம்பி! எல்லா விபரங்களையும் கூறினாள். அறிந்தேன். இளங் காதலர்களை வெட்டிப் பிரிக்கும் வீணன் அல்ல நான். கட்டுப்பாடே எனக்கு கனவிலும் பிடிக்காது. மனம்போல் வாழ்வு. இதுதான் என் சித்தாந்தம். இளவேனில் உன்னை உயிராக நேசிக்கிறாள், ஆனால் ஒன்று......"

"என்ன?"

இழுத்து இழுத்துதான் கருணாகரர் பேசினார். படபடவெனப் பேச முடியாது அவரால். திடீரென தொண்டை அடைக்கவே பெரும் இருமல் உண்டாயிற்று. இளவேனில் தலையைக் குனிந்துகொண்டே தந்தையின் தொண்டையைத் தடவினாள். இளங்கோவின் கண்கள் பரிதாபமும், மகிழ்ச்சியும் கலந்து ஒளி வீசியது. அவர் கூறுவதையே கூர்ந்து கவனிக்கலானான். உள்ளத்திலே ஒர்புறம் கவலை; மறுபுறம் களிப்பு.

"இளங்கோ! தன் நிலைமைக்கு மிஞ்சிய இடத்தில் மணம்செய்து கொள்பவர்களின் வாழ்வின் குறிகோளே கனவுதான். களிப்பு என்பது அவர்கள் வாழ்வில் மின்னல்தான். சமத்துவம் பரவாதவரை ஏழை பணக்காரனை மணப்பது உசிதமல்ல; நன்மையுமல்ல; நல்லது

மல்ல. இது என் வாழ்விலே நான் கண்டெடுத்த கருத்து. அதனுல் இளவேனிலுக்கு முதலில் நான் உன்னை மணக்க வேண்டாம் என்றே உபதேசித்தேன். ஆனுல் காதல் நோய் பாகுபாட்டை அறியாது பரவும் நோய். ஆகவே அவள் விருப்பம் நிறைவேறட்டும். இதுவே என் அவா !''

"ஐயா! நான் ஒரு சமதர்மவாதி; பணக்காரன் பாட்டாளி; அரசன் ஆண்டி; என்ற ஏற்ற தாழ்வுகளை நீக்கி சமூகத்தை சரிப்படுத்த நினைப்பவன்.''

"மகிழ்ச்சி! ஆனுல் மத வேற்றுமை என்ற மாயக் கள்ளன் உங்களை மிரட்டுவான்.''

"ஐயா! நான் ஒரு சமதர்மவாதி மட்டுமல்ல; பகுத் தறிவையுங்கூட. சீர்திருத்தி நம் நாட்டை செப்பனிடவே நான் முயற்சிப்பேன். மதம் நம் நாட்டையே மண்மே டாக்கிற்று. மதத்தை மாய்ப்பதே என் வாழ்வின் இலட் சியம். இளவேனில் என் வாழ்க்கைத் துணைவி என ஏற் றுக்கொள்கிறேன். வாக்கு மாறும் வக்ரபுத்தி கொண் டவனல்ல; தன்னுயிரை தத்தம் செய்தாவது, கொடுத்த வாக்கை காக்கும் பரம்பரை நான்.''

"நல்லது தம்பி! மிகவும் நன்றி!''

"உங்களிடம் ஒரு சிறு சந்தேகம்!''

"என்ன தம்பி...?''

"ஆம்! முன் வாசலில் தொங்குகிறதே ஒரு போட்டோ, இரு குடும்பங்கள் இணைந்து இருந்து எடுத்த போட்டோ, அதில் காண்பவர் நீங்கள்தானே.''

"ஆம்! தம்பி! நான்தான் அது. ஏன் தம்பி?''

"அந்த போட்டோவில் இருக்கும் மற்ற இருவரும் தான் என் தாயும் தந்தையும.''

"என்ன? வேலழகன் மகனு ?''

ஆச்சரியத்தோடு அவர் இளங்கோவை உற்றுநோக்கினர். அவர் முகம் கரியமேகம்போலாயிற்று. பெருமூச்செறிந்தார்.

" தம்பி! உன் பெயரைக் கேட்டதும் எனக்கு நீ வேலழகன் மகனுக இருப்பாயோ என்று சந்தேகித்தேன். ஆனல் இளங்கோ என்று உலகில் ஒருவரா உளர்? என்று என்னையே தேற்றிக் கொண்டேன். தம்பி என்னை உன் தகப்பன் பகைவர். அமெரிக்கா அவர் என்ருல் ரஷ்யா நான். இங்கிலையில் நாங்கள் இருவரும் இருக்கிருேம்."

" அது எனக்குத் தெரியும்! என் தந்தை என்னைக் கட்டுப்படுத்தினுலும் சரி; கட்டுப்படுத்தா விட்டாலும் சரி நான் இளவேனிலைத்தான் மணப்பேன். இது உறுதி! என்னை நம்புங்கள்."

இதைக் கேட்டதும் இளவேனிலுக்கு இன்பம் எல்லையற்றது. 'இன்பமே நீ என் வாழ்விலே உதித்து விட்டாய்' என்ற எண்ணம் அவளுக்கு. கருத்திருந்த கருணைகரரின் முகமும் களிப்படைந்தது.

" அப்பா! இன்னுமா உங்களுக்கு அவர்மீது நம்பிக்கையில்லை?"

" நம்புகிறேன் அம்மா! ஆனல்......?"

" ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்."

" பயப்படவில்லை நான். ஆனல் தம்பி! பாழும் சமூகம் உங்களை முதலில் நேரில் பயங் காட்டும். பயப்படவில்லையானல், பதுங்கிப் பதுங்கிப் பாயும். கொட்டும் வண்டாக மட்டும் வராது; கூவும் குயிலாகவும் வரும். எதற்கும் சிந்தித்து நட! சிந்தனைதான் இலட்சிய வீரர்களின் ஜீவநாடி!"

" சிந்திப்பேன்; ஆனல் சிதைந்துவிட மாட்டேன். சீருடன் வாழ்வேன். சிறப்புடன் சீர்திருத்துவேன் சீர்கெட்ட சமூகத்தை."

"இளங்கோ! இதோ என் இளவேனிலை உன்னிடமே ஒப்படைக்கிறேன்."

இளங்கோவின் கரங்களையும் இளவேனில் கரங்களையும் ஒன்ருக சேர்த்தார். இருவரும் எல்லையற்ற இன்பம். உடம்பெங்கும் ஓர் புல்லரிப்பு! கண்களிலோ ஆனந்த கண்ணீர். "இன்பக் காவியமாகும் வாழ்வே! காதலினாலே, இரு மனம் ஒன்ருக கூடும் நாளிலே!" என் இன்னிசை கானம் காற்றிலே மிதந்து வந்தது.

இளங்கோ அவர்களுடன் சிறிது காலம்தங்கி இன்பமாக பொழுது போக்கினன்.

---

8. உயிரும் உடலும்!

வள்ளியூரில் வாழ்ந்த இரு குடும்பங்கள் உயிரும் உடலும்போல் இணைபிரியாது இருந்தன. ஒன்று வேலழகன் குடும்பம். மற்றென்று கருணகரார் குடும்பம். அவர்கள் அன்புடன் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வந்தனர். பெண்களும் அப்படியே. ஒற்றுமைக்கு உவமானமாக வேலழகரின் குடும்பத்தையும் கருணகரரின் குடும்பத்தையும் தான் சிலர் கூறிக்கொள்வார்கள், அவர்கள் சிநேகத்தில் இடி விழாதா? என நொந்து கொண்ட பொருமைக்காரார் பலர்.

வேலழகர் பெரும் பணக்காரர். ஆனல் பழைய பத்தாம் பசலி. கர்னடகத்திற்கு காவலர் - இந்துமதப் பித்தர், மூடநம்பிக்கையின் உறைவிடம் சகுனம், சாதகம் இவற்றின் ஆராய்ச்சி பீடம் அவர். கொடிய வைதீகப் புழு. இந்து மதமே மக்களை காக்கும் மதம். கிறிஸ்தவ மதம் ஒரு அஞ்ஞான மதம், என்ற கொள்கை யுடையவர், கிறிஸ்தவர்களைக் கண்டால் சீரியும் பாம்பு மாவார்.

வேலழகருக்கு ஒரே மகன். பெயர் இளங்கோ. சிறு வயதிலேயே துடுக்குத்தன முடையவன். ஒரு அறிவாளி போக தந்தையிடம் எதைக் குறித்தும் "ஏன்? ஏன்?" என்றே கேட்பான். .சிறு வயதிலேயே அவன் அறிவு மூடநம்பிக்கைகளை நேசிக்க மறுத்தது. அறிவின் சுனை அவன். ஒருநாள் அவன் தந்தை வெளியூருக்குப் புறப் பட்டுக் கொண்டிருந்தார். அப்போது இளங்கோவுக்கு வயது எட்டு.

"அப்பா! எங்கே போகிறீர்கள்?" என்று தந்தை யிடம் கேட்டான். அவருக்கோ கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"போடா! எங்கே என்று கேட்காதே? தூரமா என்று கேள்!"

"போப்பா! வேடிக்கை! தூரமா? பக்கமா? ஏன் எங்கே என்று கேட்கக்கூடாது?"

"மடப்பயலே! அப்படிக்கேட்பது நல்லதல்ல; அப சகுனமும்கூட என்று பெரியோர் சொல்லுவார்கள்."

"ஓகோ! பெரியவர்கள் ஏன் அபசகுனம் என்று கூறினார்கள்."

"போடா! அதிகப்பிரசங்கி! அப்படிச் சொல்லக் கூடாது என்றால் சொல்லக்கூடாது."

"வெறும் குருட்டு நம்பிக்கைதானா? நான் எங்கே என்றுதான் கேட்பேன்."

"உதைப்பேன் உன்னை! ஜாக்கிரதை!"

"உதையுங்கள்! ஆனால் மடமைக்கு நான் அடிமை ஆகமாட்டேன்."

அவருடைய கோபம் அளவுக்கு மீறியது. கோபத் தால் அவன் வாதத்திற்கும் பரிசாக இரண்டு மூன்று அடிகள் அவன் கன்னத்தை ருசி பார்த்தன; அழுது கொண்டே சென்றான்.

இன்னொரு நாள் அவன் ஒரு ஏழை ஆதி திராவிடப் பையனுக்கு பலகாரம் கொடுத்துக் கொண்டு நின்றான். சாதிப் பித்துப் பிடித்த வேலழகர். இதைக் கண்டுவிட்டார். ஆத்திரம் கொண்டார்.

“டேய்! இளங்கோ! இங்கே வாடா!”

“ஏனப்பா? பாவம் ‘இவன்! இவனுக்கு இதை கொடுத்துவிட்டு வர்றேன் அப்பா!”

“முட்டாள்! அவனைத் தொடக்கூடாதுவா! தீண்டத் தகாதவன்.”

“ஏனப்பா?”

“தீண்டத்தகாதவன். கீழ்சாதிப் பயல்!”

“ஏனப்பா தீண்டக்கூடாது? அவனும் என்னைப் போல் ஒரு பையன்தானே?”

“மடையா? பறையனைத் தொடுவதே பாபமடா!”

“ஏன்? என்னைப்போல் ஒரு பையனைத் தொடுவதா பாவம்? முட்டாள்தனம்!”

“சிறுவன் நீ! உனக்கு சாதியைப் பற்றி என்னடா தெரியும்!”

“போங்கப்பா! எனக்கா தெரியாது? சாதி இரண்டொழிய வேறில்லை; ஆண் ஒரு சாதி. பெண் மற்றொன்று. என்று எங்க வாத்தியாரு சொல்லித் தந்தாரப்பா!”

“போடா! உங்க வாத்தியாருக்கு என்னடா தெரியும்! பேசாமல் வீட்டினுள் போகிறாயா? இல்லை......?”

“உதைக்கட்டுமா என்பீர்கள்! நான் உள்ளே போகிறேன். ஆனால் சாதியில் எனக்கு நம்பிக்கையில்லை”

சேற்றிலே முளைத்த செந்தாமரை இளங்கோ. பாலைவனத்தில் ஓர் ஒயஸிஸ். கற்றாழை செடியில் முளைத்த காட்டு ரோஜா அவன்.

ஆனல் கருணகரர் முற்றிலும் மூடபக்தி உடையவ ரல்ல; முழுவதும் பகுத்தறிவாளியுமல்ல. மூடபக்திக்கு தாள்பணியவுமாட்டார். ஆனல் கள்ளைக் குடித்துப் பழகி யவன் அதைக் கைவிட எவ்வளவு கஷ்டப்படுவானே? அதுபோல்தான் அவரும். அவருக்கு அப்போது எட்டு வயதில் ஒரு மகள் இருந்தாள். அவள்தான் இளவேனில். இளவேனிலுக்கு இளமையாக ஒரு தங்கை யிருந்தாள். அவள் பெயர் மங்கை; அவளுக்கு அப்போது வயது இரண்டு. அவர் மனைவி மீண்டும் கர்ப்பமுற்றிருந்தாள்.

சின்னஞ் சிறு வயதிலே சிட்டுக்குருவிகள்போல் இளங்கோவும் இளவேனிலும் இணைபிரியாது ஆடி ஓடி விளையாடுவர். அத்திப்பழத்தைக் கண்டு கத்தி ஓடும் மைனபோல் இளவேனில் இளங்கோவைக் கண்டதும் ஓடிவருவாள். இளங்கோ அவளைக் கட்டிக்சொள்வான், கன்னத்தில் முத்தமிடுவான், அவள் சிரிப்பாள். அவ னும் சிரிப்பான். ஆனல் அந்தச் சிரிப்புக்கு அர்த்தம்... ...? அந்த பிஞ்சு நெஞ்சு அறியுமா?

ஒருவர் தின்னும் பண்டங்களை ஒருவர் கொடுக்காம விருப்பதில்லை. உறங்குவதும் ஒன்று போலவே. உண்ப தும் ஒன்றுபோலவே. உல்லாசமாக ஓடிப் பாடி விளை யாடும் ஜோடிப் புரு க்கள் அவர்களிருவரும்.

"இளங்கோ! இன்று வீடுகட்டி விளையாட வர்றியா?"

"சரி! இளவேனில்! வா!"

"ஆகட்டும்! அப்போ நான் அப்பா! நீ அம்மா!"

இதைக் கேட்ட இளங்கோ "க்ளுக்" என்று சிரித் தான். இதற்குள் அவளுக்கு கோபம் வந்துவிட்டது. 'போடா! நான் விளையாட வரவில்லை. எப்பவும் உனக்கு பரிகாசம்தான்." கண்ணைக் கசக்கினள். இளங்கோ சிரிப்பை நிறுத்திக்கொண்டே, ஒரு கையால் அவள் முகத்தை திருப்பினன். முத்தமொன்று இட்டான்!

"இளவேனில்! இதற்குள்ளா கோபம்? பெண் தான் அம்மா! ஆண்தான் அப்பா! நான்தான் அப்பா! நீ அம்மா!"

அறியாமை நினைத்து அவளும் சிரித்தாள். இளங்கோ மீண்டும் சிரித்தான்.

"சரி! இளங்கோ! நான் அம்மா! நீ அப்பா! மண் வீடு கட்டுவோம்."

சரியென்று இருவரும் மண்வீடு கட்டினார்கள். அடிக்கடி இளங்கோ அவள் கன்னத்தைக் கிள்ளுவான். அவள் சிரிப்பாள்.

"இளவேனில்! கன்னத்தை காட்டு!"

"ஏன்?"

"ஒரு மு...த்...த...ம்!"

"உஹூம்! மாட்டேன்!"

"நானும் விளையாட வரமாட்டேன்."

"இல்லை! இளங்கோ! இதோ!"

கன்னத்தைக் காட்டுவாள். இளங்கோ அது கன்னிப் போகும் வரை முத்தமிடுவான். இருவரும் சிரிப்பார்கள்.

இந்தக் காட்சியை எல்லாம் கண்ணுற்ற வேலழகரும், கருணைகரரும் சிரித்தார்கள். வேலழகர் "கருணைகரரே! கண்டிப்பாக உமது மகளை என் மகனுக்குதான் மணமுடித்து வைப்பேன். நீர் மறுத்தாலும் பலவந்தமாக நானே செய்வேன்." என்றார்.

"அதற்கென்ன? நீங்கள் நினைத்தால் முடிந்தது போல்!" என்று கருணைகரர் கூறிச் சிரித்தார்.

அமைதிக்கு அடுத்து வருவது புயலென்று அவர்கள் அறிவார்களா? இரு குடும்பங்களும் கொந்தளிப்பினல் குமுறுமென்றுத் தெரியுமா? ஒற்றுமையை அழிக்க

வேற்றுமை சனியன் புகுவான் என்று கனவிலும் கருதி யிருப்பார்களா? அவர்கள் எப்படி அறிய முடியும்? இமயமலைபோல் இன்பத்தை அனுபவிப்பவர்களுக்கு, ஆழ் கடல்போல் துன்பம் அதோ வருகிறது என்றாலும் அதை கவனிப்பார்களா?

---

9. புயலும் பூசலும்

கருணாகரர் ஒரு பணக்காரர்தான். ஆனால் பெரிய சீமான் அல்ல. வள்ளியூரில் "லூத்தரன் மிஷின்" என்ற கிறிஸ்தவ சமயம் வரவே, அவர் அதில் சேர அவா கொண்டார். அவர் கிறிஸ்தவ மதத்தில் சேர விழைவதாக வேலழகனிடம் கூறினர். வேலழகருக்கு கிறிஸ்தவர் என்றாலே ஒரு கொடிய பாம்பு அது! அதனைக் கொல்லவேண்டும். என்ற கொள்கையினர். வேலழகரிடம் கருணாகரர் தான் கிறிஸ்தவனாகப் போகிறேன் என்று கூறியதுதான் தாமதம், ஆவேசம் உண்டாயிற்று வேலழகருக்கு.

"அடப் படுபாவி! அவர்கள் அஞ்ஞானிகளாச்சே! பெரிய துரோகமடா இது! வெள்ளைக்காரன் மதமடா அது!"

"ஆமா! அதற்கென்ன? ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று ஓம்பி வாழுபவர்களா கெட்டவர்கள்? ஆயிரமாயிரம் சாதிகளை ஏற்படுத்தி மனித இனத்தை வெட்டிப்பிரித்த இந்து மதமா நல்லது? இல்லை! தங்கை என்று பாராது கூடிக் குலவி, பண்டரிநாதனைப் பெற்றெடுத்த திருமாலை வணங்கும் இந்து மதமா வேண்டும்? பிறப்பிலே பேதங் கற்பித்து மன்னாதி மன்னர்களின் சாம்ராஜ்ய மெல்லாம் மண்மேடாக்கிய இந்துமதம் வேண்டுமா?

" பேசாதேடா! கிறிஸ்தவமதத்தில் மட்டும் அட்டூழி யங்கள் நடக்கவில்லையா ? ரஸ்புடீன் ஒரு கிறிஸ்தவப் பாதிரிதானேடா? அவனுல் ஸார் மன்னரெல்லாம் சரிய வில்லையா ? போப்பாண்டவர்க ளெல்லாம் ஐரோப்பா வையே சின்னுபின்னமாக்கிச் சர்வாதிகாரம் பண்ண வில்லையா ?"

"அது கத்தோலிக்க மதத்தின் கைவரிசைகள். ஆனுல் இப்பொழுது அதில் மறுமலர்ச்சி ஏற்பட்டுவிட் டது. ஆனுல் உங்கள் இந்து மதத்தின் அழுகல் நாற்றம் இன்னும் அகற்றப்பட வில்லையே? இன்னும் இரண் டாயிரம் சாதி உண்டென சாதிக்கிறீர்களே ?"

"நிறுத்துடா! நாக்கு அழுகிவிடும். அன்பேசிவம்!"

"அன்பே சிவம் என்றுல் அவர் கையில் வேலும் சூலமும் ஏன் ?"

" அபச்சாரம்! அபச்சாரம்! அயோக்கியப் பதரே! அஹிம்சை வழிவந்த அமெரிக்கர் தானே அணுகுண்டு கண்டுபிடித்து உலகையே அழிக்கப் பார்க்கிருர்கள். "டேய்! நீஎன்னுடன் இனி பேசக்கூடாது. நம் நட்பு தொலைந்தது."

கோபத்தால் கொந்தளித்த அவர் மதம் பிடித்த வேழம்போல் தன வீடு ஏகினுர்.

வீட்டிலே இளங்கோவும் இளவேனிலும் ஒரு அறை யில் விளையாடிக்கொண் டிருந்தனர். வேலழகர் இதைக் கண்டுவிட்டார். அவர் கோபம் எல்லை மீறியது. இளவே னிலைப் பற்றி இழுத்தார். அவரைக் கண்ட இளவேனில் "மாமா! மாமா!" என்று சிரித்தது. ஆனுல் அவரோ... "பளார்! பளார்!" என அவள் முதுகில் அறைந்தார். இளவேனில் "கோ!" வெனக் கதறினுள். இளங்கோ "ஏன் அப்பா அவளை அடிக்கிறீர்கள் ?" என்றி கூறி அழுதான். "போடா! மடையா! நீ இளவேனிலுடன்

இனி பேசக் கூடாது." என்று கூறி அவனையும் உதைத்தார்.

இளவேனில் அழுதுகொண்டே தன் வீட்டிற்கு ஓடினாள்.

வீட்டிற்குள் வேலை செய்துகொண்டிருந்த வேலமுகர் மனைவி ஓடிவந்தாள்.

"ஏன் அவர்களை அடிக்கிறீர்கள்?"

"சீ! நீ ஒண்ணு! மனிதன் எரிந்துகொண் டிருக்கிறான். நீ வேறு எண்ணெய் வார்க்காதே!"

அவருடைய கோபம் அவளை ஒரு உலுக்கு உலுக்கிற்று. "ஏன் இப்படி கோபப்படுகிறார்? இளவேனிலை கட்டித் தழுவும் அவரின் கரங்கள் ஏன் அவள் கன்னத்தைப் பதம் பார்த்தது? என்ன சேட்டை செய்தாலும் என் செல்வமே என்றல்லவா கொஞ்சுவார்? ஒருநாளும் மில்லாத் திருநாளாக அல்லவா இது இருக்கிறது. ஏன்?" அவள் மனதிலே மளமளவென இக் கேள்விகள் உதித்தன.

"மடையன்! மதித்தானா நம்மை? கிறிஸ்தவ மதமாம்! கிறிஸ்தவ மதம். அதில் சேரப்போகிறானாம். ஏன் என்று கேட்டதற்கு, இந்து மதம் நம் இனத்தையே அழிக்கிறதாம். எவ்வளவு நெஞ்சத் துணிவு அவனுக்கு? நான் எல்லாம் நம் இனத்தை அழிக்கும் துரோகியா?"

"யாரைத் தூற்றுகிறீர்கள்?"

"இல்லை! போற்றுகிறேன்! போக்கிரிப் பயல்! இந்து மதத்தை அழிக்க வந்துவிட்டான். அவனை விட்டேனா பார்?"

"யார் அது?"

"அவன்தான் எதிர்வீட்டுக் கருணாகரன். கழுதை! இனி நீயும் அங்குச் செல்லக்கூடாது. அவன் மகளும் இங்கு வரக்கூடாது. யாராவது அங்கிருந்து வந்தாலுஞ்

சரி, இங்கிருந்து போனாலும் சரி, நான் எரிமலையாகி விடுவேன்."

"ஐயோ! நம் இரு குடும்பங்களும் உயிரும் உடலும் போல் ஒன்றாக வாழ்ந்தோமே! இனிப் புயல் வீசிவிட்டதா? பூசல்தானா அவர்களுக்கும் நமக்கும்?"

"ஆமாடி! புயல் வீசிவிட்டது. பூசல் உண்டாகாமல் என்ன செய்யும்?"

"ஆமா! அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆனால் நமக்கென்ன?"

"கிறிஸ்தவ மதத்தவனைக்கண்டால் நான் கீரிதான். இந்து மத வைரிகள் அவர்கள். அவர்களைக் கீரிப்போடுவேன். இனி நம் குடும்பத்திற்கும், அவன் குடும்பத்திற்கும் சம்பந்தமே கூடாது."

"ஐயோ! நாமாவது பேசாமல் இருந்துவிடலாம். பாவம்! பச்சிளங் குழந்தைகள் இளவேனிலும் இளங்கோவும் இணைபிரிய மாட்டார்களே!"

"பிரியத்தான் வேண்டும், பிரியாவிட்டாலும் பிரியும்படிச் செய்வேன், ஆமா!"

"ஐயோ! கருணாகரரே! உமது மகளை என் மகனுக்கு மணமுடித்து வைப்பேன் என்றீர்களே! உங்கள் வாக்கு......?"

"வானத்திலேபறக்குமடி! அது விளையாட்டுபேச்சி! அது கிடக்கட்டும், இனி அவன் நமக்கு எதிரி நம்பர் ஒண்ணு. ஆமா!"

"வேண்டாம்! இந்த வீண் விபரீதம்!"

"நான் சொன்னது சொன்னதுதான். அந்த ஆண்டவனே வந்தாலும் என் முடிவு முடிவுதான். நீ வம்பை விலைக்கு வாங்காதே! ஓடிவிடு! என் முன் நில்லாதே!"

அவருடைய கோபம் அவர் மனைவி பேசப்பேச அதிகரித்துக் கொண்டே சென்றது. இதைக் கண்ட

அவர் மனைவி இனிப் பேசிப் பயனில்லை என்று அவ் வறையை விட்டு வெளியேறினாள்.

வேலழகரின் கழுகு கண்கள் அவர் மகன் இளங்கோவைத் தேடின. அவனை அங்கு காணவில்லை, கருணாகரரின் வீட்டிலே இளவேனில் கன்னங்களைத் தடவிக் கொண்டு கண்கள் கடலாக நிற்பதைக் கண்டார். 'பச்சிளங்குழந்தைகளின் அன்பு பரிசுத்தமானது. பாரில் வசிக்கும் மனிதரிடம்கூட காண்பது அரிது' என்பதை அக் காட்சி காட்டிற்று.

ஆனால் வெறிபிடித்தவன் முன் வெறும் காகிதத்தைக்கண்டாலும் கசக்கிஎறிவான்? காகிதப் பணத்தைக் கண்டாலும் கசக்கித்தானே எறிவான்? ஒரு அறையில் நெருப்பு பற்றிக்கொண்டால், அது கெட்ட சாமான்மீது பற்றிக் கொள்ளும்; நல்ல சாமானைக் கண்டதும் பற்றத் தானே செய்யும்? நல்லது என்று அது பொல்லாத குணத்தை அணைக்கவா செய்யும்? அதுபோலவே வேலழகரின் மனமும் அந்தக் காட்சியைக் கண்டதும், மனத்தைச் சாந்தப் படுத்தவில்லை. சண்டமாருதமே அவர் உள்ளத்தில் வீசியது. குளிரச் செய்யவில்லை அது. மாறாக கொதிப்பையே ஏற்படுத்தியது.

விரைந்து ஓடினார் வெளியே. இளங்கோவும் இளவேனிலும் அவரைக் கண்டதும் ஒருவரை யொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டனர். கிடு கிடுவென ஆடிக் கொண்டே நின்றனர். வேலழகர் இளங்கோவின் கரங்களைப் பற்றி இழுத்தார். ஆனால் அவனோ......இளவேனிலையும் தன்னுடன் இழுத்துக் கொண்டே வந்தான். அதைக் கண்ட அவர் அவளைப் பிடித்து தூரே தள்ளினார்.

இளவேனில் வீட்டு வாசல் படியின்மீது "ஐயோ! அப்பா!" என அலறிக் கொண்டு மோதினாள். கல்லில் மோதியதால் தலையில் காயம். ரத்தம் அதிலிருந்து கசிய ஆரம்பித்தது. இதைக் கண்டுவிட்டான் இளங்கோ.

யாராவது இளவேனிலை அடித்துவிட்டால், அவனுக்கு கோபம் வந்துவிடும். அவளை அடித்தவரை ஆசைதீர அடிப்பான். அவன் இதைக் கண்டால் எப்படி சகிப்பான்! "ஐயோ! இளவேனில்! இளவேனில்!" அலறினன். அவன் கண்கள் ஊற்றெடுத்தது. கண்ணீர் கரை புரண்டோடியது. தந்தையின் கரங்களைத் தட்டிக் கொண்டு ஓடிவந்தான். தன் கைகளால் இளவேனிலின் தலையில் ரத்தம் கசிந்த இடத்தைப் பொத்திக்கொண்டு நின்றான்.

மகளின் கூக்குரலைக்கேட்ட கருணைகரர் வீட்டினுள்ளிருந்து வெளியேஓடிவந்தார். காண்டா மிருகம்போல் வேலழகர் நிற்பதைக்கண்டார், தன் குழந்தையின் தலையில் ரத்தம் பீறிட்டிப் பாய்வதையும்கண்டார். அவருக்கு கோபம் வீறிட்டு வந்தது.

"இளவேனில்! எந்த அயோக்கியன் உன்னை அடித்தான்? இரத்தம் வழிந்தோடுகிறதே. இரத்த வெறியன்! பச்சைக் குழந்தையின் பச்சை ரத்தத்தைக் கொட்டிய படுபாவி!" என்று கூறிக்கொண்டே தன் குழந்தையின் தலையில் வழிந்த ரத்தத்தை துடைத்தார்.

"மாமா! எங்க அப்பாதான் அடித்தது." என அழுதுகொண்டே கூறினன் இளங்கோ.

திடீரென ஒரு இரும்புக் கரம், கருணைகரரின் தலையை நிமிர்த்தியது. வேறு யாருமில்லை. வேலழகரின் கரங்கள்தான் அவை. ரத்த வெறிபிடித்த ராக்ஷசன்போல் நின்றார் அவர்.

"டேய்! மடையா! யார் இரத்த வெறிபிடித்தவன்? என்ன நெஞ்சத் துணிவு உனக்கு?" என்று உறுமினர்.

"நீதான்! நெஞ்சிரக்கம் கொஞ்சமும் மற்ற வஞ்சகன்! பாம்பு, புலி கூடப் பச்சிளங் குழந்தைகளைக் கண்டால் பரிதாபப் படும்! நீ அவைகளைவிட பயங்கர மனிதனு? காட்டு மிருகங்களுக்கு கூட கருணை உண்டே! உன்னிடம் அதுவும் கிடையாதா?"

“என்ன சொன்னுய்?”

வேலழகர் கருணகரரை அடித்தார். அவருடைய பலமான குத்து ஒன்று அவரின் கன்னத்தை ருசிபார்த்தது, அவரைக் கீழேதள்ளிற்று. இளவேனில் “அப்பா! அப்பா!” என்று அழுதுகொண்டு தந்தையிடம் ஓடினுள். இளங்கோவும் “மாமா! மாமா!” எனக் கதறினுன்.

சண்டை யென்ருல் சந்தைக்கடை கூட்டம் கிராமங்களில் கூடிவிடுமே! அதிலும் உயிரும் உடலும்போல் இருந்தவர்கள் கீரியும் பாம்புமானுல் கூட்டத்திற்கு கேட்கவா வேண்டும்? தேனைச்சுற்றி எறும்புகள் மொய்ப்பதுபோல் மொய்த்து விட்டனர். அவர்கள் அச் சண்டையைத் தீர்க்கும் நீதிபதிகளாயினர். வேலழகர் தன் மகனைக் கூட்டிக்கொண்டு வீட்டினுள் சென்ருர்.

இதற்குள் டோனுவூர் ஆஸ்பத்திரியில் இருந்த கருணகரர் மனைவி பிரசவித்தாள் என்று தகவல் வந்தது. குழந்தை ஒரு ஆண்! அவன்தான் அவருக்கு ஒரே புத்திரன். பெயர் தூயமணி. கருணகரர் வீட்டைப் பூட்டிவிட்டு மனைவியைக் காண டோனுவூர் விரைந்தார். இளவேனிலும் அவருடன் சென்ருள்.

டோனுவூரை அடைந்தார். ஜன்னி வந்து மனைவி இறந்துவிட்டாள் என்ற தகவல் அவரை நடைபிணமாக்கிற்று. சோதனைக்குமேல் சோதனை; கஷ்டத்திற்குமேல் கஷ்டம் அவருக்கு. மனைவியை அங்கேயே அடக்கம் செய்வித்தார்.

தன் மூன்று குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினுர். வீட்டை அடைந்தார். வீடா அங்கு நின்றது? தீப்பட்டு எரிந்து கட்டை மண்கள்தான் அங்கு காட்சிதந்தன. ஆம்! வேலழகர், கருணகரர் வீட்டைவிட்டுச்சென்றதும் அவ்வீட்டிற்கு தீவைத்துவிட்டார். சிங்கத்தை எதிர்த்து சிறு நரி போரிட முடியுமா? புலியை எதிர்த்து பூனை சண்டையிட முடியுமா? மலையின்முன் மடு எம்மாத்திரம்! வேலழகரை எதிர்த்து

ஒன்றும் செய்ய முடியாதென கண்டார். ஆம்! சீமான் அவர்! சீரழிந்து நிற்கும் ஏழை கருணைகரர். சீமானை எதிர்க்க அவரிடம் சக்தி ஏது? மச்சுவீட்டுக்காரனுக்கு ஒரு நீதியும், குச்சுவீட்டுக்காரனுக்கு ஒரு நீதியும், நின்று நிலவி வரும் சமுதாயத்தில் அவருக்கு நியாயமா கிடைக்கும்?

இனி வள்ளியூரில் வாழ்வது கடினம். பருந்து வசிக்குமிடத்தில் சிறு குஞ்சுகள் வாழ இடம் ஏது? ஒரு குஞ்சை பருந்து கொத்தி ருசிகண்டுவிட்டால், மீண்டும் எல்லா குஞ்சுகளையும் காலியாக்கித்தானே தீரும். ருசி கண்ட கழுகு வேலழகர். ஆகவே வள்ளியூரில் வாழ்ந்தால் துன்பத்திற்குமேல் துன்பமே விளையும் என்று கண்டார். சென்னைக்கு ரயில் ஏறினர். குதிரைப் பந்தயத்திலே ஒரு யோகம். சீமான் ஆனர். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி நடத்தினர். அதுவும் திவாலாகி விட்டது. இப்போது அவருக்கு பெரும் கஷ்டம். தீராத கவலை.

இந்த சம்பவங்களை அறிந்த இளங்கோவின் மனம் இரும்பினும் கடினமாகியது. தந்தைக்கு சரியான நீதி கற்பிக்க எண்ணினன். அவன் காதல் மலர்ந்து மணம் வீச ஆரம்பித்தது.

"ஐயா! நான் மணந்தால் இளவேனிலைத் தான் மணப்பேன். அந்த உறுதியை வைராக்கியம் என்ற பூட்டால் பூட்டிவிட்டேன். என் தந்தை என்னை இளவேனிலுக்கு மணமுடிப்பதாக சொன்ன வாக்கை அவர் நிறைவேற்ரு விட்டாலும் நான் நிறைவேற்றியே தீருவேன். இது உறுதி!" என்று ஆவேசம் கொண்டவர் போல் கருணைகரரிடம் கூறினன்.

இளவேனிலை நான் எங்கோ பார்த்து பழகியதாக நான் முதல்நாள் அவளைக் கண்டதும் நினைத்தது உண்மைதான் என்றது அவன் மனம். முன் பின் பழக்கமில்லாதவர்கள் பழகியது மாதிரி தோன்றுவதிலிருந்து மறு

பிறப்பு உண்டென வாதிப்பவர் மடையர்கள் என்றது அவன் அறிவு. பின்புஅவன் அவர்களிடம் வழியனுப்பி விட்டு சென்னையிலுள்ள தன் வீடு ஏகினன்.

---

10. பருந்தும் கோழியும்

பருந்து கூரிய கண்கள் படைத்தவை. ஆம்! அதன் கூரிய கண்களுக்கு அது எவ்வளவு தொலைவில் பறந்தாலும், கோழிக்குஞ்சுகள் கீழே திரிவது அதன் கண்களுக்குத் தென்படாமல் போகாது.

அதுபோலவே வேலழகரும்! ஓர் வஞ்சகப் பருந்து அவர். அவரின் கண்களுக்கு எவர் எங்கிருந்தாலும் கண்டு பிடித்து விடுவார். விரோதியாக ஏழைகளைக் கண்டுவிட்டால், ஏழைகள் அவர் கழுகு கண்களுக்கு கோழிகள்தான். கோழியையும் அதன் குஞ்சுகளையும் பருந்து கண்டுவிட்டால், கோழி தன் குஞ்சுகளுடன் ஓடி ஒளிய வேண்டும்; அல்லது அதற்கு விருந்தாக வேண்டும். வேலழகர் முன்பு ஏழை விரோதிகளும் அப்படியே'

இளங்கோ சென்ற இரண்டு நாள் கழித்து மாலை இளவேனில் தன் வீட்டிற்கு வெளியே வாசலில் உட்கார்ந்திருந்தாள். தூயமணியும் மங்கையும் விளையாடிக் கொண் டிருந்தனர். கருணாகரர் கட்டிலில் படுத்திருந்தார். பாவம்! தீராத நோய் அவருக்கு, இளவேனில் இரண்டு நாளைக்குமுன் சென்ற இளங்கோவைக் காண வில்லையே என்று ஏங்கிக்கொண் டிருந்தாள். அவளுக்கு காதலன் கண்டிப்பாக தன்னை மணப்பார் என்ற தீராத நம்பிக்கை. அவளுக்கு நேரே இரண்டு மூன்று போலீஸ் வந்தனர். அவர்களுடன் ஒரு பெரிய மனிதரும் வந்தார். அவர்களைக் கண்டதும் இளவேனில் பயந்து எழுந்து நின்றாள்.

“ ஏ! புள்ளே ! இதுதானே கருணாகரன் வீடு ?”

“ ஆமாங்க சாமி !”

“ கருணாகரன் உள்ளே இருக்கானா ?”

“ ஆமா ! கடும் காசம் ! கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கிறார்.”

“ எங்கே காட்டு ?”

இளவேனில் போலீஸ்களைத் தந்தையிடம் கூட்டிக்கொண்டு காட்டினாள். பயம் அவளை சித்திரவதை செய்தது. என்ன நடக்குமோ என்று அவள்மனம் நடுங்கியது. போலீஸ்களைக் கண்டதும் கருணாகரர் “ஐயா! வாருங்கள்!” என்றார்.

“ வர நாங்கள் வரவில்லை. உம்மீது ஒரு பெரிய புகார்.”

“ என்ன என் மீதா ?”

கருணாகரர் நடுங்கிப்போனார். ‘ஒரு குற்றமும் அறியாத என்மீது குற்றமா ?’ என அவர் மனம் வருந்தியது.

“ வேய்! கருணாகரரே! நீர் விபச்சார விடுதிவைத்து நடத்துகிறீர்கள் அல்லவா ?”

“ அபாண்டம்! அக்கிரமம் ! அப்பப்டி யார் இங்கு இருக்கிறார்கள் விபச்சாரியாக ?”

“ நல்ல கேள்வி ! பெற்ற மகளையே விலைமாதாக்கி விளையாடுகிறீர்.”

“ ஐயோ ! நானா விபச்சாரி ! என்ன அக்கிரமம் ? கற்பை இழக்க நான் பிறந்தவளல்ல.”

“ என் மகளா ? வீண் வதந்தி !”

இதற்குள் வெளியே நின்ற பெரியமனிதர் உள்ளே வந்தார். அவருடைய மீசை துடிதுடித்தது.

“ எது வீண் வதந்தி ? என் மகனை உன் மகள் கெடுக்கவில்லையா ?”

"வேலழகா! மீண்டுமா என்னிடம் விளையாடுகிறாய்? உன் கழுகு கண்களுக்கு நாங்கள் தப்ப முடியாதா?"

"கருணாகரா! பருந்துதான் நான். கோழி நீ! என்னிடம் மோதாதே! உன் குஞ்சுகளைக் காக்க உடனே இவ்விடம் விட்டு ஓடிவிடு."

"ஏன் ஓடவேண்டும்? நாங்கள் என்ன தீங்கு விளைவித்தோம்?"

"தீங்குமட்டுமல்ல; சட்டத்திற்கு விரோதமான குற்றமும் கூட. விபச்சாரம்! உமது மகளை என் மகனுக்கு விபச்சாரியாக்கினீர். அவனைக் கெடுத்துவிடப் பார்த்தீர்."

"யார் விபச்சாரி? நானா? பெரிய மனிதரே! ஏதோ உச்சிக்கொப்பி லிருக்கிறோம் என்று கும்மாளம் போட வேண்டாம். ஏழைகளை என்னவும் செய்யலாம் என்ற எக்காளம் போடவேண்டாம். இளங்கோ என்னை காதலித்தார். அதற்காக நானா விபச்சாரி?"

"காதலாவது கத்தரிக்காயாவது. விலை மாதே! ஏன் வெட்டிப் பேச்சு உன்னிடம்? என் மகனை கெடுத்ததுமல்லாமல். நீதி வேறா பேசுகிறாய்?"

"வேலழகா! பேதைப் பெண்! உன் மகனை ஒருவரும் கெடுக்கவில்லை. அவன் அவளைக் காதலித்தான். அது அவள் குற்றமா?"

"குற்றத்தை நாங்கள் கேட்கவரவில்லை. கருணாகரரே! நீரும் உமது மகளைக் கூட்டிக்கொண்டு இன்று இரவுக்குள் இந்த நகரை விட்டு வெளியேற வேண்டும். இது இன்ஸ்பெக்டர் உத்தரவு!"

"எங்கள்மீது என்ன குற்றம்?"

"அதுதான் ஆயிரம் தடவை கூறினோமே விபச்சாரம் விபச்சாரம் என்று, விபச்சாரிகளை எல்லாம் விரட்டி அடிக்க வேண்டும் என்பது எங்கள் இன்ஸ்பெக்டர் உத்தரவு. உமது மகள் விபச்சாரி என்பது இவரது புகார்

அதனல் நீர் உமது மகளுடன் உடனே வெளியேற வேண்டும். நாங்கள் வருகிறோம்." போலீஸ்கள் வெளி யேறினர். வேலழகர் தன் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு நின்றார். இளவேனிலும் கண்ணீர் பெருக கல் சிலைபோல் நின்றாள். கருணாகரருக்கு வேலழகனைக் கடித்து தின்றுவிடலாமா என்ற அளவுக்கு கோபம். ஆனல் அவரால் எழும்புவதே கஷ்டம். குமுறும் எரிமலை போல் இருந்தார்.

"வேலழகா! வஞ்சகக் கழுகே! உனக்கு எங்கள் மீது என்ன கோபம்?"

"கருணாகரா! உன் வழியே நீ செல்வதுதானே. என் பாதையில் ஏன் முள் போல் குறுக்கிட்டாய்? முட் டாளே! என்மீது மோதுபவர் மண்டை நொருங்காமல் வெளியேற முடியாது."

"இளங்கோ! இளங்கோ!" என கதறினள் இளவே னில்.

"அட! என் தங்கக் கிளியே! இளங்கோவையா நீ அடைய நினைத்தாய்? நொண்டி நீ! கொம்புத் தேன் அவன்! உனக்கு அவன் கிட்டுவானு? கிட்டினலும் இந்தப் பருந்து உன்னை சும்மா விடுமா?"

"ஐயா! நான் உனக்கு என்ன செய்தேன் கேடு? நான் அவரை காதலித்தேன். அவரும் என்னை காதலித் தார். அவரை நான் அடைவது குற்றமா?"

"முட்டாளே! அவன் யார்? நீயார்? அவன் இந்து! நீ கிறிஸ்தவள். வர்ணசிரம விரோதம்! போக்கிரிப் பெண்ணே கேள்! இளங்கோ சிறைவைக்கப்பட் டிருக் கிறான்."

"என்ன சிறையா?"

"ஆமாம்!"

இதற்குள் அவரும் அகன்று விட்டார். இளவேனில் கொடிய நெருப்பில் சிக்கியவள்போல் துடித்தாள். கரு

ணுகரர் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார். பாவம்! அவரால் வெகுதூரம் நடக்க முடியாது. காரில் போக கையிலோ இருபது ரூபாய்தான் இருக்கிறது. என்ன செய்வார்?

"இளவேனில்! பார்த்தாயா? உன் காதல் வாழ்வால் நம்மீது விழுந்த இடியை? இதற்குதான் பணக்காரன் பாட்டாளியின் காதல் கூடாது என்றேன். கேட்டாயா நீ?"

"நான் காதலித்தது குற்றமா அப்பா? இளங்கோ எப்படியும் என்னைக் காப்பாற்றுவார். அப்பா! நான் எனக்கு ஒரு செயின் செய்யவேண்டுமென்று நூறு ரூபாய் வைத்திருக்கிறேன், அது இதோ இருக்கிறது. நாம் நம்ம ஊருக்கு போவோம்."

"சரியம்மா! எல்லாம் காலத்தின் கோலம். ஏழை வாழ்விலே இன்பம் ஓர் மின்னல்! துன்பம் நீங்கி அங்கு சென்றுவது இன்பம் சுரக்காதா பார்ப்போம்."

"அப்பா! ஆனுல் இளங்கோவுக்கு நாம் ஊர் போகிறது தெரியவேண்டுமே? அவரிடம் சொல்லாமல்போனுல் வருந்துவாரே அப்பா!"

"இன்னுமா அம்மா அவனை நீ மறக்கமாட்டேன் என்கிருய்? அவன் கிட்டாத கனி அம்மா!"

"அப்பா! அவரை நான் எப்படி மறப்பேன்? உயிர் நீங்கும்வரை அவரை நான் மறக்க முடியாதப்பா? என் நிழல்போல் அவர்."

"நீ அவனை மறக்கமாட்டேன் என்கிருய்? அவன் என்ன செய்துக்கொண் டிருக்கிருனே?"

இளவேனில் தன் தந்தையும் தம்பியையும், தங்கையையும் கூட்டிக்கொண்டு சாயங்காலம் புறப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்தாள். பருந்து கோழியை விரட்டி அடித்தது, ஆம்! வேலழகர் என்ற பருந்தின் முன் கருணுகரர் கோழிதானே!

11. சிறைக் கைதி!

சிறைக்கைதி! ஆம்! சிறைக் கைதிதான் இளங்கோ. தன் தந்தையால் சிறையாக்கப்பட் டிருக்கிறான். ஆம்! இளவேனிலைதான் மணப்பெண் என்ற பிடிவாதத்திற்கு பரிசாக சிறை வைக்கப்பட் டிருக்கிறான் அவன் தந்தையால், சிறை யென்றால் சர்க்கார் சிறையல்ல. வீட்டிலே ஓர் அறையினுள் பூட்டப்பட்டு உள்ளே கைதிபோல் கிடக்கிறான். வெளியே செல்லக்கூடாது. வேலைக் காரர் களும் அவனை வெளியே விடக்கூடாது என்பது வேலழ கரின் கட்டளை.

அவன் தன் அறையில் உள்ள ஒரு சன்னலில் வந்து நின்றுகொண்டு சிந்தித்துக்கொண் டிருந்தான். அந்த சன்னல்மூலம் தெருவில் செல்பவர்களைக் காண லாம. அவனுக்கு முன் அவன் எண்ணங்கள் அன்று நடந்த சம்பவங்களைக் குறித்து வட்டமிட்டது. ஆம்! அன்று அவன் தன் தந்தையிடம் தான் இளவேனிலை தான் மணப்பேன் என்று வாதாடிய கட்டம் அவன் மனத்திரையில் தோன்றின.

இளங்கோ இளவேனிலை விட்டுப் பிரிந்தது நேராக தன்வீட்டிற்கு வந்தான். அவனுடைய தந்தை அவனிடம கலியாண சம்பந்தமாக விஷயங்களைக் கேட்டார். பின்பு இளங்கோவுக்கும் கலியாணம் செய்யவேண்டு மென்றும், பெண் தேடுவதாகவும் கூறினர். இளங்கோ இதுதான் தக்க தருணம் என்று எண்ணி தந்தையிடம் தான் ஒரு பெண்ணை காதலிப்பதாகவும் அவனையேதான் மணப்ப தாகவும் கூறினன். அவரோ பத்தாம் பசலி!

“டேய்! சீர்திருத்தச் சிங்கமே! நீ ஏண்டா என் வயிற்றில் முளைத்தாய்? சீர்திருத்தம் பேசிப் பேசி என் குடும்பக் கௌரவத்தையே குழிதோண்டி புதைத்துவிட் டாயே! இப்போது காதல் திருமணம் செய்து கொள்ளப் போகிறாயாமில்ல? காதல் திருமணம்! டேய்! உன்னைப்

போல ஐந்தாறு முளைக்கப்போய்தான், நாட்டிலே மழை யில்லை.''

''வேடிக்கை! அப்பா! பஜகோவிந்தம் பாடினுல் தான் மழைவருமா? ரஷ்யாவிலே பூலோக சுவர்க்கம் எனப்படும் நாட்டிலே கடவுள், மதம் இவற்றை வெறுப் பவர்கள் தானே அதிகம்? அங்கு மழை பெய்ய வில் லையா? அதுதான் போகட்டும்! நன்ருக பக்தி முத்தி போயிருந்த நல்லதங்காள் காலத்திலும் கூட மழை யில்லை யாமே இது யார் குற்றமப்பா?''

''போடா! குதர்க்க வாதி! டேய்! உன் காதலி யாருடா?

''நமது நெருங்கிய நண்பர் மகள் தானப்பா!''

''நெருங்கிய நண்பரா? யாருடா அவன்? பணம் நிறைய கிடைக்குமாடா?,'

''பணம், பணமென்று ஏன் அப்பா பறக்கிறீர்கள்? பணத்தால் நீங்கள் கண்ட சுகம் தான் என்ன? உங்கள் பண ஆசைக்குப் பலியான குடும்பங்கள் எத்தனை? வாங் கிய பணத்திற்கு வட்டியைக் கொட்டியளக்கக்கூட தங் கள் மனைவிகளின் தாலியை வெட்டி யெறிந்திருக்கின் றனர். எத்தனை பேர்.''

''ஏண்டா! குட்டிலெனினே! கொஞ்சம் நான் கேட்ட தற்கு மாத்திரம் பதில் சொல்லுடா.''

''ஆதியில் அன்போடு வாழ்ந்தீர்களாமே அவர் மகள் தான்.

''அது யாருடா......?''

''அவர்தானப்பா! கருணுகரர்...''

கருணுகரர் என்றதும் அவர் கோபம் கொதிக்க ஆரம்பித்தது. ''கருணுகரா! மறுபடியும் என் பாதை யிலா குறுக்கிடுகிருய்? வைரி நான்! கோழி நீ! உன்னைக் கொத்தி விரட்டாமலா விடுவேன். முட்டாளே! உன்

மகள் இளவேனிலா எனக்கு மருமகள்? கனவிலும் நடக்காதுடா இது. எனக் கூறுவது போல் பற்களை நற நற வெனக் கடித்தார். கண்கள் கோவைப் பழங்கள் போல் சிவந்தது.

"டேய்! அந்தக் கிறிஸ்தவ மவன் பெண்ணையாடா? அட! படுபாவி! என் மானத்தையே தூக்கிலே தொங்கப் போட்டு விடுவாய் போலிருக்கே. அவன் எனக்குப் பரம விரோதி! அவன் மகளையா? அதுவும் கிறிஸ்தவப் பெண்ணையா! தோஷம்டா தோஷம்!"

"ரோஷம் பொத்துகிட்டு இல்லா வருகிறது. அப்பா! ஜாதி சமயம், ஏழை பணக்காரன், ஏற்ற தாழ்வு, விரோதி சிநேகிதன் என்பவைகளை யெல்லாம் பொருட்படுத்தாது பூப்பது தானப்பா காதல்!"

"டேய்! மதத்திற்கு விரோதமான மணம் பண்ணக் கூடாது என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்களே..."

"ஆமப்பா! பெரியாரும் அண்ணாவும் ஜாதி சமய பேத மற்ற காதல் திருமணம் நடக்கிறதை தானப்பா விரும்புகிறார்கள்."

"விரும்பு வாங்கடா விரும்பு வாங்க! அவர்களுக்கு என்ன குளிரா? காய்ச்சலா? நான மட்டும் வர்ணாஸ்ரம விரோதமா நடக்க மாட்டேன். நம்ம கிட்ட கரால்னு காரல்தான். ஆமா!"

"ஏனப்பா மதம் மதம் என்று மாரடிக்கிறீர்கள். நம நாட்டிலே — தண்டமிழ் நாட்டிலே மதம் சாதித்தது தான் என்ன? ஒரே குலமாக வாழ்ந்த மக்கள் ஓராயிரம் சாதிகளாக பிரிக்கப்பட்டது எதனால்? வளமுடன் வாழ்ந்த வண்டமிழ் நாடு வறுமை களமானது எதனால்? கடல் கடந்த கடாரத்தைக் கைப்பற்றிய கன்னித் தமிழா கடல் கடந்து கஷ்டப் படுவது எதனால்? 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முது மொழியை விட்டு, விதி! விதி! என்று எதற்கெடுத்

தாலும் நம்பி ஏழைகள், பட்டினிபட்டாளங்களாக பெருகும் படியானது எதனல்? சரித்திரம் கண்ட பல சாம்ராஜ்யங்கள், சடசடவெனச் சரிந்தது எதனல்? கடல் கடந்து கால் வயிற்றுக் கஞ்சிக்காக போராடி கன்னித் தமிழர் மலேயாவில் கம்யூனிஸ்டுகள் என சுட்டுக் கொல் லப் படும் நிலை வந்தது எதனல்?

"நிறுத்துடா லெச்சரை. இது வீடாக்கும்! பிரசங்க மேடையல்ல, டேய்! என்னிடம் கரால்னு கரால்தான். இளவேனிலை நீ மணக்க கூடாது. என்றல் மணக்க கூடாதுதான். ஆமா!"

"நம்ம கிட்டேயும் கரால்னு கரால்தான். இளவே னிலை தான் மணப்பேன். என்றல் இளவேனிலை தான் மணப்பேன்."

"டேய்! என்ன நெஞ்சத்துணிவுடா உனக்கு? என் உயிர் உள்ளளவும் உன் வாக்கு நிறை வேருது. ஆமா!" என்று கூறிக்கொண்டே அவன் கரங்களைப் பற்றினர். ஓர் அறையில் அவனைப் போட்டு பூட்டினர். "மடையா! புத்தி வரும் வரை இங்கேயே இரு!" என்று உறுமினர். சீர்திருத்த சிங்கம் சிறைக் கைதியாகியது.

---

12. இருளில் ஒளி.

இரண்டு நாள்கள் வரை இளங்கோ அந்தச் சிறை யிலே கைதியாக இருந்தான். இரண்டாவது நாள் மாலை அவன் மனம் நிம்மதியற்று அமைதியை நாடியது. ஆனல் அவன் உள்ளக் கடலிலோ ஆயிரமாயிரம் எண்ண அலை கள் கொதித்து எழும்பின. சன்னல் அருகிலே சாய்ந்து நின்றன்.

"ஐயோ! இளவேனில்! இன்பக் களஞ்சியமே! என் இருண்ட வாழ்வில் தோன்றிய மின்னலே! நீ மின்னல்

போல் மறைந்து விடுவாயா? என் தந்தையின் கொடுங் கரங்களுக்கிடையே சிக்கித் தவிக்கிறேன். சிங்கத்தினிடம் சிக்கிய சிறு முயல் வேங்கையிடம் சிக்கிய வெள்ளாடு. நாகத்திடம் அகப்பட்ட நந்து. என் நிலைமை இவைபோல்தான். வெஞ்சிறையிலிருந்து விடுபட்டு உன் பஞ்ச நிகர் மேனியை, பளிங்கு வதனத்தைப் பார்க்க ஓடோடி வருவேன். வருந்தாதே என் வான விளக்கே! வாழ்வின் ஜீவனே! வற்றாத ஊற்றே! வாடிவிடாதே வான்மதியே!

“என் தந்தை உங்கள் இருப்பிடம் அறிந்து தீங்கு விளைவித்தால்............கொலை நடுக்கம் எடுக்கிறதே! நினைத்தாலே நெஞ்சு வெடித்து விடும்போல் தோன்றுகிறதே! கொலைக்கஞ்சா கொடூரர் அவர்! பழிபாதகத்திற்குப்பயப்படாத பாதகர் அல்லவா? பவளச் செவ்வாயே! பட்டு உடற்கட்டே! பயந்து கொண்டுதான் இருக்கிறேன்.

“என்று நம் நாட்டை விட்டு அடிமைத்தனம் நீங்கும்? அறியாமை அகலும்? அறிவொளி வீசும்? அது வரை நம் போன்ற காதலர்களுக்கு வாழ்க்கையிலே காதல் ஒரு மின்னல் போல்தான் இன்பம் தருமா? மின்னல்தானு நம் இன்ப வாழ்வு சிறைப் பட்டுக் கொண்டிருக்கிறேன். உலகத்தில் இல்லாத விசித்திரச் சிறைச் சாலைகள் நம் நாட்டில். எங்கும் அடிமைத்தனம்! ஆம்! மக்களெல்லாம் மதத்திற்கு அடிமை! பிள்ளைகளெல்லாம் பெண்களுக்கு அடிமை! பெண்களெல்லாம் ஆண்களுக்கு அடிமை! மூட நம்பிக்கைக்கு அறிவு அடிமை! இந்த அடிமை இருள் அகலப் போர் தொடுப்போம். எண்ணவும் எழுதவுமே நம் நாட்டில் சுதந்திர மில்லையே? பின் எப்படிச் சீர்திருத்த வாழ்வு நடத்தச் சுதந்திரம் கிடைக்கும்?

“ஏ! காதல் உலகமே! நீ வேண்டாம்! சமத்துவம் சகோதரத்துவம் நாட்டிலே நடமாடாத வரை நீ ஒரு மின்னல்தான் வாழ்விற்கு! எக்காலத்திலும் ஒளிவீசும்

வான விளக்கல்ல! தோன்றி மறையும் மின்னல்தான்; மின்னலோ? தூண்டா விளக்கோ? நான் போராடத் துவங்கி விட்டேன். ஆம்! தோன்றி மறையும் மின்னல் போல் இருக்கும் காதல் வாழ்வு, தூண்டா விளக்காக போராடப் போகிறேன். என்னைச் சுற்றிலும் இருள்! ஆம்! பயங்கர இருள்! 'கூ' இருள்! ஒளி வீசச் செய்வேன்." என்று சிந்தித்துக் கொண்டேயிருந்தான்.

அவன் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக பாய்ந்தது. தெருவையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். தெருவிலே ஒளியைக் கண்டான்! ஆம்! இருளில் கிடந்தவன் முன் ஒளி தோன்றியது. ஒளிதான்! அவன் வாழ்வின் ஒளிதான்! இளவேனிலே! ஒளியானாள் அவன் கண்களுக்கு! ஆம்! எங்கும் இருள் போல் தோன்றிய அவன் கண்களுக்கு இளவேனில் ஒளிதானே?

இளவேனில், தன் தந்தை, தம்பி, தங்கையுடன் சென்று கொண்டிருந்தாள். "இளவேனில்! இளவேனில்!" என்று அலறினான்.

"இளவேனில்! இளவேனில்!" என்ற சத்தம் இளவேனிலின் காதைத் துளைத்தது. கண்டு விட்டாள் தன் காதலனை. அழுது அழுது அவள் கண்கள் வீங்கிப் போயிருந்தது. இளங்கோவைக் கண்டதும் எங்கோ பறந்து சென்ற அழுகையும் பொத்துக் கொண்டு வந்தது. "இளங்கோ! இளங்கோ!" என்றுகதறிக்கொண்டே சன்னலை நோக்கி ஓடி வந்தாள். அவள் தந்தை அவளை தடுத்தும் அவரால் அவள் ஓடுவதை தடுக்க முடியவில்லை.

சன்னலின் மோதிக் கொண்டே இருவரும் அழுதார்கள். ஒருவர் கரங்களை ஒருவர் பிடித்துக் கொண்டு அழுதனர். ஐந்து வினாடி வரை ஒருவரோடு ஒருவரால் பேசக்கூட இயல வில்லை.

"இளவேனில்! எங்கு செல்கிறாய்? என்னைப் பிரிந்தா செல்கிறாய்?"

"பிரியவில்லை. பிரிக்கப் படுகிறோம். இளங்கோ! நான் ஒரு விபச்சாரியாம்!"

"என்ன? நீயா?"

"ஆம்! இளங்கோ! உன் தந்தை உன்னை நான் காதலித்ததால் என்னை ஒரு விபச்சாரி என்று சொல்லி, போலீஸ் மூலம் எங்களை இந்த நகரை விட்டே விரட்டி அடிக்கிறார். நாங்கள் இன்றிரவுக்குள் இந்த நகர எல்லையைக் கடந்தாகவேண்டும்."

"என்ன? என் தந்தையா? கல்நெஞ்சன். நம் காதலைக் கசக்கி எறிய நினைக்கும் காதகன். உன்னையும் விரட்டிவிட்டான். என்னையும் சிறையாக்கிவிட்டான். இளவேனில்! இனி நீ எங்கு செல்லுகிறாய் சொல்? விடுதலையடைந்த பின் உன்னை வந்து காணவேண்டாமா? எங்கு செல்கிறாய் நீ?"

அவன் உள்ளமும் உடலும் படபடத்தன. இரும்புக் கம்பிகளை உடைக்க எத்தனித்தான். ஆனால் அவை அவன் இளம் கரங்களைக் கண்டு கருணையா கொள்ளும்? அக் கருணைதான் மனிதரிடமும் இல்லையே?

"ஏழைகள் எங்கு செல்ல முடியும்? வள்ளியூருக்கு செல்கிறோம்."

இதற்குள் இளவேனிலின் தந்தை கருணாகரர் ஜன்னலை அடைந்தார்.

"தம்பி! பார்த்தாயா? இதுதான் உலகம்! விளையாட்டுச் சிறுவன் நீ! உன் விளையாட்டால் ஏற்பட்ட வினையை பார்த்தாயா? நடுத்தெருவில் நின்று நாங்கள் தவிக்கிறோம்."

"ஆம்! ஏழை பணக்காரன் என்ற பேதம் நீங்காத வரை, மனிதனுக்கு மனிதன் பயந்தே வாழ்கிறான். மன்னியுங்கள் என்னை! சிறைதப்பி வந்து என் செல்வத்தை எப்படியும் மணப்பேன். இது உறுதி!"

"எங்களை மறக்க மாட்டீர்களே?"

"வாழ்வின் இலட்சியம் நீ! இலட்சியத்தை எந்த இலட்சிய வீரனும் மறப்பானு? கூவும் குயில் சோலையை மறக்குமா? அல்லது குளிர்ந்த தென்றலாவது சோலையை மறக்குமா?"

கண்ணீரோடு கூறினன். ஆனல் அவன் உள்ளத்திலோ களிப்பு! தன் காதலி செல்லும் வழியை அறிந்து விட்டோம். என் தந்தை அவள் எங்கு சென்ருள் என்று நான் அறியமாட்டேன் என்று எண்ணி என்னை விடுதலை செய்வார். என்று அவன் மனம் ஆனந்தம் கொண்டது.

இதற்குள் "இளங்கோ! இளங்கோ!" என்று சத்தம் வரவே, கருணுகரர் இளவேனிலை இழுத்துக் கொண்டு சென்ருர்.

---

13. விஷச் சிலந்தி!

கருணுகரர் தம் குழந்தைகளுடன் வள்ளியூரை அடைந்தார். அங்கு அவருடைய பழைய வீடு இருந்த இடத்தில் ஒரு சிறு குடிசை கட்டிக் கொண்டு வசித்தார். அந்த ஊரில் அவருக்கு உறவினன் ஒருவன் உண்டு. அவன்தான் மாணிக்கம். அவர் மனைவியின் தம்பி! பினங்கு சென்று திரண்ட பணம் சம்பாதித்தான் அவன். அவன் இயற்கையிலே ஒரு முரடன். விடாக் கண்டனும் கூட.

கருணுகரர் வள்ளியூர் வந்ததுதான் தாமதம், சுகமாயிருந்த வியாதியும் வலுத்தது. ஆம்! காசம் அவரைப் பலமாக இழுத்து வதைத்தது. கையிலோ நோயைத் தீர்க்க பணம் கிடையாது. சொற்ப பணம்தான் கொண்டு ந்தார்வ. அதை வைத்துக்கொண்டு எவ்வளவு நாள்

வசிக்கமுடியும்? என்ன செய்வது என்று தெரியாமல் கருணாகரர் திகைத்தார்.

"அப்பா! ஏதாவது வேலை செய்து வந்து நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்."

"என்ன? இளவேனில் நீயா வேலை செய்யவேண்டும்? வயது வந்த பெண் நீ! நீ வெளியில் சென்றால் உலகம் தூற்றும் அம்மா!"

"உலகம் கிடக்கிறதப்பா உலகம்! ஏழை எளியவர்களின் வாழ்வை அது சுட்டுப் பொசுக்கும். ஆனால் அவர்கள் வாழ வழியா பிறப்பிக்கும்? ஏழைப் பெண் சென்றால் ஏளனம் செய்யும்! ஆனால் சீமான் வீட்டுச் சிங்காரி சென்றால் கற்புக்கரசி என புகழும். இந்த உலகத்தை பார்த்தால் என்ன நடக்கும்?"

"அம்மா! நீ வேலை செய்வது கேவலம்!"

"தன் வயிற்றுப் பசியை அடக்க பாடுபடுவது கேவலம் அல்ல அப்பா!"

"சரியம்மா! உன் இஷ்டம்! நான் கெடுப்பானேன்?"

அன்று முதல் இளவேனில் சில வீடுகளில் சில்லரை வேலைகள் சில செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள்.

ஒரு நாள் அவள் 'பஸ் ஸ்டாண்டு' வழியாக வந்து கொண்டிருந்தாள், அங்கு கூடி நின்ற காவாலிகள் அவளைக் கண்டுவிட்டனர்.

"டேய்! புது சரக்காலாடா இருக்கு? இது எங்கிருந்தடா இறக்குமதியாச்சி!"

"புது சரக்கு மட்டுமல்லடா; பிட்டுத் தின்னத் தின்ன புளிக்காத லட்டுடா இவள்."

"ஆமாம்! தங்க கட்டிதான்! இவளை எப்படியும் தட்டணுமேடா!"

"டேய்! இது நம்ம மாணிக்கம் இருக்கானல்லா மாணிக்கம்"

"பினங்குகாரன், அவன் இன்று வருவதாகக் கூட கேள்வி!"

"அவன் மருமகளடா அவள்!"

"அவன் வருவதற்குள்ளே அவனுக்கு அடிக்குது லாட்டரி சீட்டு."

"என்னப்பா தம்பிகளே! எந்தப் புறுவுக்கு கண்ணி வைக்கிறீர்கள்" என்று கூறிக் கொண்டே மாணிக்கம் வந்தான். அவனுடன் இன்னொருவனும் வந்தான். அவன் அப்போது வந்து சேர்ந்த தென்னிந்திய ரயில்வே அவுட் ஏஜன்ஸி, பயோனியர் வண்டியில் தான் வந்து இறங்கினன்.

"அடேயப்பா! உன்னைப் பற்றிதான் பேசிக்கிட்டு இருந்தோம்! மாணிக்கம்! அதோ வருகிறளே அவள் தாண்டா உன் மருமகள், உனக்கு லக்கிப் பிரைஸ் விழுந்து விட்டது."

"கருணகரர் மகளா? அழகுராணியாலாடா இருக்கு மிகவும் சந்தோஷம்! டேய்! மூர்த்தி!"

"யாருடா அது.........?"

"இதோ இவன்தான்!" என்று தன்னுடன் வந்த நண்பனைச் சுட்டிக் காட்டினன்.

"மூர்த்தி! இதுதான் நாம் நாடி வந்த சரக்கு! நீதான் இந்த விஷயத்தில் எனக்கு முதல் மந்திரி!"

"முதல் மந்திரியா? ஆகட்டும்!"

"டேய்! முதல் மந்திரி! நம்ம இராஜ்ய மந்திரிகள் மாதிரி நீயும் உருப்படாத பட்ஜெட்டை சமர்ப்பித்தா உரித்து விடுவேன்."

"சரிடா! நாம் வீட்டிற்கு போவோம்."

"எல்லோருமே வாங்கடா! இன்னைக்கு நம்ம பீஸ்டு தான்!"

அனைவரும் அவன் பின்னாலேசென்றனர். தேனைச் சுற்றி ஈக்கள் மொய்ப்பது சகஜம்தானே?

"ஆமா! அவர்கள் எந்த வீட்டில் இருக்கிறார்கள்?"

"அவர்கள் பழைய வீடு இடிந்து கிடந்த தல்லவா? அதில் ஒரு குடிசை கட்டி வசிக்கிறார்கள்."

"மாணிக்கம்! அவர்கள் எங்கிருந்தால் நமக்கென்ன நாம் வந்த காரியத்தை நிறைவேற்றியே தீரவேண்டும். நீயும் அவளை அடைந்தே தீரவேண்டும். அவ்வளவு தானே?"

"ஆமா! அதில்கூடவா சந்தேகம்?"

"பின்பு என்ன கழுதையை விடு! நான் கவனிச்சுக் கிறேன்."

"அதென்ன முதல் மந்திரி? அவ்வளவு சுலபமாக சொல்லி விட்டாய்?"

"இந்த மூர்த்தியைப் பற்றி என்ன நினைத்தாய்? மாணிக்கம்! நமக்கா இந்த புறாவைப் பிடிக்க வழி கிடையாது? இருக்கவே இருக்கிறது நம்ம மாகாண முதல் மந்திரி ராஜாஜி வழி!"

"அதென்ன ராஜாஜி வழிடா?"

"அதுதாண்டா! சாணக்கிய தந்திரம்! அவர் மந்திரி பதவி காட்டி, பயல்களைப் பிடித்தது போல், நாம் பணத்தைக் காட்டி அவளை பிடிக்கவேண்டும்."

"டேய்! முதல் மந்திரி! எல்லாரையும் ஏமாந்த மாணிக்க வேலரு என்று நினைக்கிறாய்? தன் பிள்ளைகளுக்குத் துரோகம் செய்த மாணிக்க வேலரல்ல அவர்."

"முயன்று பார்! முழுவெற்றி கிடைக்கும், இல்லை... நான் அதற்கு ஜவாப்தாரி!"

"சரிடா!"

மாணக்கம் ஒரு விஷச் சிலந்தியானுன். அவனுக்கு ஆகாரமாக இளவேனில் அகப்பட்டாள். பணம்தான் சிலந்தி வலையாயிற்று.

---

14. வஞ்சக வலை

"வணக்கம் அத்தான்!"

"வணக்கம்"

இறுமிக் கொண்டே கூறினுர் கருணுகரர். அவருக்கு காச நோய் விளைந்து கொண்டே வந்தது. கட்டிலிலே படுத்துக் கொண்டிருந்தார்.

"யாரப்பா நீ?"

"என்னைத் தெரியவில்லையா அத்தான்? நான்தான் மாணிக்கம்! உங்கள் மச்சினன்."

"ஓ! மாணிக்கமா? வாப்பா? எப்ப வந்தே?"

"நேற்றுதான் வந்தேன் நீங்கள் இங்கு இருப்பதாகவும மிகவும் சுகமில்லாமல் இருப்பதாகவும் கேள்விப் பட்டு வந்தேன்."

"இளவேனில்! இளவேனில்!" என்று ஆவலோடு தன் மகளை அழைத்தார் கருணுகரர். இளவேனில் பின் வாசலில் நின்ருள்.

"இளவேனில்! இனிமையான பெயர்! யார் அத்தான் அது?"

இதற்குள் மின்னல் போல் அங்கு தோன்றினுள் இளவேனில்.

"மாமாவுக்கு வணக்கம் செலுத்தம்மா?"

"வணக்கம் மாமா!"

"வணக்கம்!"

"இதுதான் அக்காவின் மூத்த மகளா? ஆம்! நேற்று நான் பஸ் ஸ்டாண்டில் உன்னைப் பார்த்தேனே!"

"பார்த்திருக்கலாம். நான் அவ்வழியாக வேலை செய்யப் போனேன்."

"வேலை செய்கிறாயா? நீயா? வேண்டாம்! மாமன் நான் இருக்கும்போது நீ ஏன் வேலை செய்ய வேண்டும்."

"பிறர் கையை நம்பி வாழ்வதைவிட சொந்த கையை நம்பி வாழ்வதே மேல்."

"அத்தான்! இளவேனில் பலே புத்திசாலியாக இருக்கிறாளே? அத்தான் ஏன் உங்களுக்கு இந்த இழுப்பு? என்ன செய்கிறது?"

கருணாகரரைப் பார்ப்பதுபோல் பாசாங்கு செய்தானே தவிர, அவன் கண்கள் இளவேனிலின் இளமையை ருசி பார்த்தன. கண்களுக்கு அழகுதானே நல்ல விருந்து?

"அழகு கொழிக்கும் அப்ஸரஸ். என் அருகிலே இருந்தாள்.........! முகராத முல்லை. என் முற்றத்தில்தான் இருக்க வேண்டும். நிறைவான தேன் குடம். அதைக் குறைக்குடமாக்க வேண்டியவன் நான்தான். பச்சைக் கிளி இவள். என் இச்சையைப் போக்கவல்ல மருந்து. கச்சை கட்டி யார் நின்றாலும் சர்ச்சை செய்தாகிலும், இவளை அடைய வேண்டும்." என்ற கெட்ட எண்ணங்கள் அவன் இருதயத்தில் உதித்தன.

இளவேனிலுக்கோ மாணிக்கத்தைக் காண பிடிக்கவில்லை. அவன் அவளையே அடிக்கடி கூர்ந்து நோக்குவதை கவனித்தாள். 'காமவெறியன்' என்று அவன் கண்கள் அவளுக்கு கூறின. ஆகவே அதிகம் பேசாமல்

தந்தையின் கட்டிலுக்கு அருகில் காலால் நிலத்தை கீறிக் கொண்டு நின்றுள். ஆனல் கருணகரர் அறிவாரா மாணிக்கம் ஒரு வலை விரிக்கும் வஞ்சகன் என்று? கண்ணி வைக்கும் கபடன் என்று? பதுங்கிப் பாயும் புலி என்று? அடுத்திருந்து கெடுக்கும் அயோக்கியன் என்று?

"மாணிக்கம்! காசநோய் எனக்கு. அதை கவனிக்க கையிலே காசு ஏது?"

"அத்தான்! அதைரியப் படாதீர்கள். நீங்கள் நன்ருக இருந்தால்தானே இளவேனிலையும் மற்ற பிள்ளை களையும் கவனிக்க முடியும்? அத்தான்! இதோ! ஐம்பது ரூபாய்! சாப்பாட்டுச் செலவுக்கு பெற்றுக்கொள்ளுங்கள். டாக்டரிடம் நான் ஏற்பாடு பண்ணுகிறேன். மருந்து செலவுக்கு நான் பொறுப்பு."

"வேண்டாமப்பா! உனக்கு ஏன் அந்தக் கஷ்டம்? நாங்கள் எப்படியும் வாழ்கிறோம்."

"இல்லை அத்தான்! நீங்கள் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். மனப்பூர்வமாகவே நான் உதவிசெய்கி றேன். கைமாற்ற உதவி."

"வாங்கிய கடனை என்னல் திருப்பித்தர முடி யாதே?"

"நீங்கள் தந்தாலும் சரி! தராவிட்டாலும் சரி! அதைப்பற்றி எனக்கு கவலையில்லை."

"இல்லை! பிறர் சொத்துக்கு நான் ஆசைபடுகிற வன் அல்ல. உனக்கு வேண்டுமானல் புரோநோட்டு எழுதி தருகிறேன்."

எல்லோரையும் வழியனுப்பிவிட்டு, மாணிக்கம் தன் வீடு ஏகினன். "வித்து விதைத்து விட்டோம், இனி முளைக்காமலா போகும்? தூண்டில் போட்டுவிட்டேன், தூண்டில் கண்டிப்பாக சிக்கிவிடும், மீனகள் துள்ளி ஓட வழி ஏது? இளவேனில்! நீதான் என் இன்பக் காவி யம்!" என்று இறுமாந்திருந்தது அவன் இரும்புநெஞ்சம்.

மாணிக்கம் அத்தானிடம் இருநூறு ரூபாய்கள் கொடுத்து அதற்கு புரோநோட்டும் பெற்றுக் கொண்டான். கருணைகரரும் சிறிதுசிறிதாக குணமடைந்து வந்தார்: இளவேனில் வேலை செய்வதற்கு வெளியில் செல்வது கிடையாது. மாணிக்கமும் அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவான். கொக்கு பெரிய மீனைக் கொத்தும்வரை, முற்றும்துறந்த முனிபுங்கவனைப்போல் குளத்தங்கரையில் நின்று தவம் புரிவதுபோல் மாணிக்கமும் சமயம் வந்ததும் இளவேனிலையை கௌவிச் செல்ல வேண்டுமென் றிருந்தான். எதிலும் குணமே காணும் பரம்பரை கருணைகரர். ஆகவே அவர் மாணிக்கத்தின் வஞ்சகவலை வீச்சை அறியவில்லை. வஞ்சகவலை விரித்து விட்டோம் என்று கும்மாளம் போட்டான் மாணிக்கம்.

---

15 வலை கிழிந்தது

“ டே! முதல் மந்திரி! நம் சோதனையில் சரியாக சிக்கிவிட்டார்கள். இனி சிறை மீள முடியாது.”

“ மாணிக்கம்! என் மூளை எப்படி? அடுத்துக் கெடுக்கும் அருமையான வித்தை.”

“ முதல் மந்திரி பட்டம் உனக்கு வேறு எதற்கடா கொடுத்திருக்கிறேன். வஞ்சகமே உருவான உன் நெஞ்சம். தந்திரத்தில் நரிகூட உன்னிடம் லாயக்கில்லை, வலை வீசி ஏமாளிகளைப் பிடிப்பதில் நீ கைதேர்ந்தவனுச்சே!”

இதற்குள் கதவை யாரோ கடகடவென தட்டும் சப்தம் கேட்டது. மாணிக்கத்திற்கு அது கோபத்தை அளித்தது.

“ டேய்! முதல் மந்திரி! போய் கதவைத் திறந்து வையப்பா!”

கதவு திறக்கப் பட்டது. கருமேகத்தைக் கிழித்துக் கொண்டு வெளிக் கிளம்பும் வான்மதிபோல், கதவி னின்று உள் நுழைந்தாள் இளவேனில்.

“ஓ! இளவேனிலா? இங்கு ஏன் வந்தாய்? என்னி டம் ஒரு வார்த்தை சொல்லி விட்டால் ஓடோடியும் வரு வேனே.”

“ஏன் மாமா உங்களுக்கு அந்த வீண்தொந்தரவு?”

இளவேனில் மாமனைப் பின் தொடர்ந்து சென்றாள். மாணிக்கம், மூர்த்தியிடம் கண்காட்ட, அந்த முதல்மந்திரி யும் “சரியான சந்தர்ப்பம். நழுவவிடாதே. காரியத்தை காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.” என்று கண்க ளால் கூறிவிட்டு வெளிப் போந்தான்.

“இளவேனில்! அப்படி உட்கார்.” என்று நாற் காலியை சுட்டிக் காட்டினன்.

“இல்லை மாமா! அவசரமான காரியம்! கொஞ்சம் பணம் வேண்டும்.” என்று கூறிக்கொண்டே நாற்காலி யில் அமர்ந்தாள்.

“இளவேனில்! இன்றுதான் நீ என் வீட்டிற்கு வந்திருக்கிறாய். உன்னை உபசரித்து அனுப்பக்கூட வீட் டில் ஒருவரும் கிடையாது. நான் ஓர் அனுதை. நீதானே இந்த வீட்டை யாளும் ராணியாக வரவேண்டும்.”

“என்ன மாமா? என்ன?”

கேள்விக் கோடுகள் அவள் நெற்றியிலே பதிந்து கிடந்தன. கள்ளமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவ ளுக்கு அவன் கக்கும் விஷம் எப்படித் தெரியும்?

“ஏன் பதறுகிறாய் இளவேனில்? நீதான் என் குடும்பத்திற்கு விளக்கு ஏற்றி வைக்கவேண்டும்.”

“அப்படியானல்......”

“நீ என் மனைவி......”

இதற்குள் இளவேனிலுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அலை அலையாக வெறுப்பு தோன்றியது. அவள் மாமன் மீது!

" மாமா! நடக்காத காரியம்! நான் வேறு ஒருவரை காதலித்து விட்டேன். அவரையே மணப்பதாக உறுதியும் செய்துவிட்டேன்."

" அப்படிச் சொல்லாதே இளவேனில்! நீ இல்லாவிட்டால் என் வாழ்வே எரிந்துவிடும்."

" மாமா! என்னை நீர் அடையவே முடியாது. என் உள்ளம் உருக்கிவார்த்த இரும்புகவசம். அதை உடைக்க உம்மாலும் முடியாது. உம் பணம் அவ்வளவும் செலவானாலும் முடியாது."

" இளவேனில்! உளராதே! யோசித்துப் பார்! என்னை நீ மணந்து கொள்ளாவிட்டால் உனக்கு ஏற்படும் கதியைப் பார்! பசி உன் குடலைப் பிடுங்க துடித்து துடித்து சாவாய்! உன் தகப்பன் என் கடனாளி. கடனை தரும்படி வற்புறுத்துவேன். ஆம்! நீ என்னை மணந்தால் மாடமாளிகையில் உலாவலாம். கூடகோபுரங்களில் சுற்றலாம். இல்லையேல்......? தெருவிலே நாதியற்றவளாய் அலைவாய்!"

" மாமா! பாழும் பணத்திமிறினுல் வாய்க்கு வந்த பிரகாரம் பேசவேண்டாம். ஆதாயமில்லாமலா செட்டி ஆற்ரோடு போவார். தெரிகிறது மாமா! நீங்கள் எங்களுக்கு உதவியதன் நோக்கம். மாமா! என் தந்தை உன் சொல்லழகில் மயங்கிவிட்டார். நீ சொக்குப்பொடி தூவுகிருய்; கொட்டும் விஷத்தை கக்குகிருய்; வஞ்சக வலை வீசுகிருய் என்பதை உணரவில்லை. அது தெரிந்திருந்தால் அப்போதே பணத்தை உமது முகத்தில் விட்டெறிந்திருப்பார்."

" இளமை துடிப்பால் உளராதே! யோசித்துப்பார் இளவேனில்! யோசித்துப் பா!"

"யோசித்துதான் முடிவு செய்தேன். என் காதலர் என்னை எப்படியும் காப்பாற்றுவார்."

"ஹா! ஹா! உன் காதலர்! இளங்கோ என்ற அற்ப புழு! அவனை நீ அடையவே முடியாது இளவேனில். அவனை அடைய நீ மதத்துடன் போராடவேண்டும்."

"போராடி வெற்றிபெறும் சீர்திருத்த சிங்கம் அவர்."

"சீர்திருத்த சிங்கம் உன்னை அடைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது இளவேனில்! அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவன் தந்தை செய்து விட்டார். பாவம்! நீ அறியாய்?"

"ஏன் மாமா வீணுக பிதற்றுகிறீர்கள்?"

"நானு பிதற்றுகிறேன். என்னுடன் வந்திருக்கிறுனே மூர்த்தி—எனக்கு முதல் மந்திரி—அவன் யார் தெரியுமா...?"

"யாராக இருந்தால் எனக்கென்ன? நான் வருகிறேன் மாமா!" என்று கூறிக்கொண்டே நாற்காலியை விட்டு எழுந்தாள்.

மாணிக்கம் வேண்டுமென்று அவள் கரங்களை பற்றிஞன். அவளுக்கு ஆத்திரம் அளவு கடந்தது. கைகளை உதறிஞள், சீ! என்ன திமிர் உனக்கு? கன்னியரை கற்பழிக்க நினைக்கும் கயவனே." என்று கூறிக்கொண்டு அவன் கன்னத்தில் அறைந்தாள்.

செயலற்று நின்றுன் மாணிக்கம். இளவேனில் இவ்வளவு முரடு பண்ணுவாள் என்று அவன் கருதவில்லை. இளவேனில் தன் வீட்டிற்கு ஓடிவந்தாள்.

ஓடிவந்து தன் தந்தையின் கட்டிலின் அருகில் உட்கார்ந்து அழுதாள். அவளின் அழுகையைக் கண்ட கருணுகரர் பதறிஞர். துன்பமே மலைமலையாக வந்து மோதி

னும் கலங்காதவள்; கதறித் துடிப்பதைக் கண்டு அசைந்தே போனார்.

"ஏன் அம்மா அழுகிறாய்? என்ன நடந்தது? யாராவது தீங்குவிளைவித்தார்களா? உன் மாமன் பணம் தர மறுத்தானா?"

"மாமன் அல்ல அப்பா அவன்; மகா துரோகி! பெற்ற பிள்ளைபோல் என்னை பேண வேண்டியவன், என்னைப் பெண்டாள நினைக்கிறான்."

"என்ன? மாணிக்கமா? உன்னையா? மடையன்! வேறு என்ன செய்தானம்மா?"

இதற்குள் அங்கு தோன்றினான் மாணிக்கம். அவனைக் கண்ட கருணாகரருக்கு கோபம் இமயமாயிற்று. மாணிக்கத்தைக் கண்டதும் புலியைக் கண்டு பயந்தோடும் புள்ளிமான்போல் இளவேனில் பின்புறம் சென்றாள்.

"மாணிக்கம்! நீ கோடிக் கோடி பொன் குவித்தாலும் என் குலவிளக்கை நீ அடையமுடியுமா? கோடாரிக் காம்பே!"

"ஏன் அத்தான் இவ்வளவு கோபம்? நான் இளவேனிலை விரும்பினேன். அவளிடமே என் ஆசையை வெளியிட்டேன். இது குற்றமா?"

"அதை என்னிடம் கூறக்கூடாதா? கன்னிப் பெண்ணிடமா கேட்க வேண்டும்?"

"ஏன்? உங்களிடமே கேட்கிறேன். கண்டிப்பாக நீங்கள் எனக்கு இளவேனிலைத் தரவேண்டும். இல்லையேல்........."

"வில்லனாகி வேடிக்கை காட்டுவாயோ? வீணாக எங்கள் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளாதே."

"வெறுப்பு! ஆம்! என் விருப்பத்தை நீங்கள் நிறைவேற்றாவிடில் வெறுப்பு ஏற்படத்தான் செய்யும். அத்

தான் உங்களிடம் நான் கெஞ்ச வரவில்லை. தஞ்சம் தரச் சொல்லி தவிக்கவில்லை. காரியத்தை மிஞ்சவிடாதீர்கள் என்றுதான் எச்சரிக்கிறேன்."

"மாணிக்கம்! மூர்க்கத்தனத்தைக் கிளப்பாதே. முரடன் நான்! என் மகளை நீ கனவிலும் கருதாதே. கோட்டையை கட்டுவது கடினம். இடிப்பது எளிது. எங்கள் அன்பை இழக்காதே!"

"அத்தான்! மணந்தால் உங்கள் மகள்தான் என் மனைவி! இது உறுதி! இதை நீங்கள் மறுத்தால்......... கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்பேன். எப்படித் திருப்பி கொடுக்க முடியும்? மானத்தை கோர்ட்டிலே ஏலம் போடாதீர்கள். என் கோபம் பொல்லாதது வீட்டை ஜப்தி செய்து விடுவேன். வீடிழந்து தவிக்க நேரிடும்......ஜாக்கிரதை! வருகிறேன்!" என்று கூறிக் கொண்டே வெளியேறினான் மாணிக்கம்.

இதற்குள் வெளியே நின்ற இளவேனில் அழுது கொண்டு தன் தந்தையின் மடியில் வந்து விழுந்தாள். "அப்பா! என்னை அவனுக்கு மணமுடித்துக் கொடுத்து விடுவீர்களா ?"

"மாட்டேன் அம்மா! மாட்டேன்; வீடிழந்து நாம் தவித்தாலும் நான் உன்னை அவனுக்கு கொடுக்கமாட்டேன். கலங்காதே."

அவள் சோகத்திலே சிறிது களிப்பும் ஏற்பட்டது. ஆனால் கருணாகரர் மனதிலோ பெரும் புயல், பிரளயம், பூகம்பம் ஏற்பட்டது.

ஆனால் மாணிக்கம் விரித்த வஞ்சகவலை கிழிந்தது: முதல் கண்ணி தெறித்தது.

16. நரிக்குகை

"அத்தான்! இதோ போலீஸ் ஜவான்கள்! வீடு ஜப்தி செய்யும் படி உத்தர வாகி விட்டது' என்று கூறு கிறீர்கள்? இளவேனிலை எனக்கு கொடுக்கிறீர்களா? இல்லையா?"

"முடியாது என்ருல் முடியாது! கொட்டும் தேளே! கடிக்கும் விஷப் பாம்பே! உன் மனம் போல் செய்து கொள். ஈவிரக்க மற்ற சண்டாளா! நாங்கள் வெளியேறு கிருேம்."

"மாமா எங்கள் மீது உங்களுக்கு இரக்க மில்லையா? உங்கள் அக்காள் மகள் அல்லவா நான்?"

"இரக்கமா இளவேனில்! இரக்கம் பாராட்டி தான் உதவினேன். என் அக்காள் மகள் என்றதினுல் தான் உரிமையுடன் கேட்டேன். உனக்குத் தான் இரக்க மில்லை. என் ஆசையை தீர்க்கும் ஈவு இல்லை. இளவே னில்! கடைசி கட்டம் நெருங்கி விட்டது. என்னை மணப் பாயா? மாட்டாயா?"

'மாட்டேன் மாமா! மாட்டேன்! மாநிலமே சாய்ந்தா லும் மாட்டேன்."

"நல்லது! வீட்டை ஜப்தி செய்யுங்கள்'"

அவர்கள் வீடு ஜப்தி செய்யப் பட்டது. கண்ணீரும் கம்பலையுமோடு அவர்கள் வெளியேறினர். கருணகரரால் நன்ருக காலை ஊன்றி நடக்க கூட முடியாது. தன் மகள் இளவேனில் தோளில் கையைப் போட்டுக் கொண்டு நடந்தார். அவர்களுக்கு பின்னுல் மங்கையும், தூயமணியும் வந்தனர். மெயின் ரோடு வழியாக அந்த மெலிந்த உருவங்கள் தெற்கு நோக்கி நகர்ந்து கொண்டி ருந்தன. எங்கு செல்வது என்ற நோக்கம் அவர்களுக்கு கிடையாது.

தெற்கே உள்ள 'இர்ட்சணிய சேனே' காம் பவுண்டை கழித்தவுடன், ஒருவன் அவர்களுக்கு எதிராக வந்தான். பார்ப்பதற்கு ஒரு பாராரியைப் போல் காணப் பட்டான். இளவேனிலுக்கு அவனை எங்கோ பார்த்தது போல் தோன்றியது. அவன் அவர்களைப் பார்த்தவுடனே, "ஐயே! நீங்கள் எங்கு செல்லுகிறீர்கள்?" என்றான்.

"வானமே கூறை! விண்மீன்களே விளக்குகள்! புல் வெளியே பஞ்சணை மெத்தை! காற்றே உணவு! என்று வாழும் ஏழைமக்கள் எங்கு செல்வோம்"

"ஐயா! உங்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. என்ன உதவி வேண்டுமானாலும் நான் செய்கிறேன்."

"ஐயா! நாங்கள் வீடிழந்து தவிக்கிறோம். தங்க ஒரு குடிசை வேண்டும்."

அந்த மனிதன் அவர்களை அழைத்துக் கொண்டு ஒரு குடிசைக்குச் சென்றான். ஒரே அறை யுள்ள குடிசை அது. குடிசையா அது? அது ஒரு நரிக்குகை! ஆம்! அவர்களுக்கு உதவி செய்தவன் ஒரு வஞ்சக நரியே! அது அவர்களுக்குத் தெரியாது. கருணைகரர் தங்களுடைய கஷ்டங்களை யெல்லாம் கூறினார்.

கருணைகரர் அவனை "நீயார்?" என்று கேட்டார். அதற்கு அவர், "நான் ஒரு முதலாளியின் வேலைக்காரன். என் பெயர் நம்பி!" என்றான்.

இளவேனில் இளங்கோவை நினைத்து மனதுருகினான். "இளங்கோ! இளங்கோ!! இங்கு பஞ்சைகளாய், பராரிகளாய், கட்டக் கந்தையின்றி உண்ண உணவின்றி கதறித் துடிக்கிறோம். கை கொடுப்பார் யாருமில்லை. பிடுங்கித் தின்னும் பேயர்களே உள்ளனர். விரைந்து வருவேன் என்றீரே? இரண்டு மாதங்கள்ளாகின்றதே! இன்னும் ஏன் வரவில்லை? நீரும் மின்னல்

போல் மறைந்து விடுவீரா? என் வாழ்வில் தோன்றிய மின்னலா நீரும்? இளங்கோ! இதய ஒலியே! இன்னும் நீர் சிறைச் சாலையை விட்டு விடு பட வில்லையா? அல்லது என்னை தான் மறந்து விட்டீரா? இறந்து கொண்டேயிருக்கிறேன். என்னை இரட்சிக்க வாரும்.'' ...... என்று புலம்பினாள்.

"இளவேனில்! ஏன் முகவாட்டமாக இருக்கிறாய்?"

"அப்பா! வருகிறேன் என்று கூறிய இளங்கோவும் இன்னும் வரவில்லையே. அவர் வந்தாலாவது நமக்கு ஒரு நல்ல கதி ஏற்படாதா?''

"வருவார் அம்மா! வருந்தாதே வந்து எப்படியும் நம்மை கைதூக்கி இரட்சிப்பார்.''

"அப்பா! இனி நானும் வெளியே செல்ல முடியாது. வேலை செய்யாமல் எப்படி அப்பா சாப்பிடுவது? தம்பியும் தங்கையும் பசியால் துடிக்கிறார்கள்.''

"அம்மா! மங்கை தான் பத்துவயது பெண்ணச்சே! அவளை எந்த வீட்டுக்காவது வேலை செய்ய அனுப்பு."

"'மங்கை' பாவம்! என்ன வேலை செய்து கொள்வாள்?''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு நின்ற மங்கையும் ஓடி வந்தாள். "அக்கா! நான் வேலை செய்யப் போகிறேன். நீ வருந்தாதே அக்கா!'' என்று கூறிக்கொண்டே இளவேனிலின் கண்களில் வடியும் நீரைத் துடைத்தாள்.

வேறு வழியில்லை. மங்கை தான் வேலை செய்ய வேண்டியதாயிற்று. வெளியில் சென்றால் மாணிக்கம் தனக்குத் தீங்கு விளை வித்து விடுவான் என்று இளவேனில் அஞ்சினாள்.

மாணிக்கம் தான் போட்ட முதல் கண்ணியில் முயல்கள் சிக்க வில்லை என்று வருந்தினான். "தோல்வி

யும் வெற்றியும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் தோல்விதான் வெற்றிக்கு முதல் படி. ஒரு சமயம் தோல்வியானுல் மறு சமயம் வெற்றி நிச்சயம்." என்று ஆறுதல் கூறினுன் அவன் நண்பன் முதல் மந்திரி. மாணிக்கமும் தன் உள்ளத்தை தேற்றிக் கொண்டான். அவன் நண்பன் மூலம் இளவேனில் வீட்டில் நடப்பதை அறிந்தான்.

---

17. டன்கர்க்!

மங்கை வீடுகளுக்கு வேலை செய்யப்போகும் வழியில், மாணிக்கம் "அக்காள் சுகம் எப்படி?" என்பான். "அதைப்பற்றி உனக்கென்ன?" என்று செவிட்டில் அறைந்தாற்போல் மங்கை பதில் சொல்லுவாள்.

ஓர் நாள் மங்கை "அக்கா! அக்கா!" என்று கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தாள். மங்கை கையில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டு இருந்தது. "மங்கை இது யார் தந்தது?" என்று கேட்டாள் இளவேனில்.

"மாணிக்கம் மாமா தந்தாங்க!" என்றது அந்த அறியாச் சிறுமி!

"மாணிக்கம்! துரோகி! இந்தப் பணம் நமக்கு வேண்டாம்மா. அவன் முகத்திலே இதை வீசிவிடு!" என்று கூறினுள் இளவேனில்.

மங்கையும் அவ்விதமே செய்தாள்.

மூர்த்தி மங்கை தன்னிடமே அந்த நோட்டை வீசியதைக் கண்டதும் கோபம் கொண்டான். கொதித்துப் போனுன். "இவ்வளவு திமிரா உங்களுக்கு? உங்களை பார்க்கிறேன் ஒரு கை? நான் முயன்ருல் முடியாதது மூவுலகிலும் இல்லை." என்று உறுமினுன்.

மழைகால மாயிற்று. கருணாகரர் குளிர் தாங்க முடியாமல் ஆடினார். மழையைக் கண்டால் காசநோய்க்கு கொண்டாட்டம்தானே. இழுப்பு அவரை இழுத்து வதைத்தது. மனக்கவலையும் ஒரு விஷம்போல் ஆயிற்று. சதிகார உலகமே! ஏழைகளை எரிக்கும் எரிமலையே! எங்களுக்கு உய்வே கிடையாதா? ஏழை வாழ்விலே இன்பம் ஒரு மின்னல்தானா? ஆம்! ஏழை வாழ்விலே இன்பம் ஒரு மின்னல்தான. உழைத்து உயிரைவிடவேண்டியது தானா நாங்கள்? ஏ! பழிகாரச் சமூகமே! நாற்றமடிக்கும் சாக்கடையே! பழிவாங்கு! ஏழைகளை—பாட்டாளிகளை பழிவாங்கு! படையெடுப்பு வரும் வரை பழிவாங்கு!" என்ற புரட்சிக் கனல் அவர் உள்ளத்தில் வீசியது. உள்ளத்திலே புரட்சிப் புயல். ஆனால் உடலிலோ......உயிர் இன்றோ, நாளையோ பிரிவேன் என்று வாட்டி வதைக்கிறது.

மங்கையும் படுக்கையில் வீழ்ந்துவிட்டாள். ஆம்! நிமோனிய ஜுரம் அவளுக்கு. நிவர்த்திக்க கையில் பணமில்லை. வேலைக்கு ஒருவரும் போகவில்லை. ஒரு வாரமாக வீட்டிலே விளக்கு கொளுத்தக்கூட கையில் பணமில்லை. எல்லோரும் பட்டினி! சிறுவன் தூயமணி பசியால் துடிக்கிறான். இந்தப் பயங்கர சோதனையில் சிக்கித் தவிக்கிறாள் இளவேனில்.

அவள் மாமன் அங்கு பணமும் கையுமாக நிற்கிறான். இளவேனில் மணம்செய்து கொள்ளுகிறேன் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும், அவன் உதவ தயார். இச் சூழ்நிலையில் அவள் சிக்கிச் சுழன்றாள். பலத்த போராட்டம் அவள் நெஞ்சில் உருவாகியது.

"சீ! துரோகி! இன்னும் ஏன் நீ தயங்குகிறாய்? தந்தையைக் காப்பாற்று. தங்கையைக் காப்பாற்று! ஏன் திகைக்கிறாய்? நீ நினைத்தால் முடியாதா? யோசித்துப் பார்."

"யோசிக்கத்தானே செய்கிறேன். என்ன வழி? என்ன வழி?"

"வஞ்சகி! வழியா இல்லை? மறைக்கவா செய்கிறாய்? உன் காதலைக் கொளுத்து! உன் அத்தானை மணந்து கொள்!"

"அதெப்படி முடியும்? மனமில்லாதவரோடு வாழ்க்கைப்பட்டால்......என் வாழ்வு? காதலால் கட்டுப்பட்டு தவிக்கும் அவருக்குத் துரோகியாவேனே!"

"அவனுக்கு மாத்திரம் துரோகியாகப் பயப்படுகிறாயே! இப்போது நீ உன் குடும்பத்திற்கு துரோகி! வஞ்சகி! இளவேனில்! கடமை பெரிதா? காதல் பெரிதா?"

"முடியாது! காதல்தான் பெரிது! கைவிடமாட்டேன் என் காதலரை."

"நன்றிகெட்ட மிருகமே! நயவஞ்சக நரியே! தன்னலப் பேயே! உன்னைப் பெற்று வளர்த்த தந்தையிடம் கூடவா நன்றியில்லை? உனக்குப் பதிலாக ஒரு நாயை வளர்த்தாலாவது சாகும் தருணம் வரை நன்றியோடு இருக்குமே? அவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பது தெரியவில்லையா? அவர் உயிர் கடையில் வாங்கும் பொருளா?"

"என் காதலும் கடையில் வாங்கும் பொருளா?"

"காதகியே! வருங்கால வாழ்விலே காதல் ஒரு மின்னல். அதன் இன்பம் நிலையற்றது. ஆனால் உன் தந்தையின் உயிர்......? தங்கையின் உயிர்......? உன் தந்தை போய்விட்டால் நீ ஒரு அனாதை தானே? தியாகம் செய்யக்கூடாதா உன் காதலை?"

"ஐயோ! காதல்? காதலர்?"

"மின்னல் தானே! மறைந்துவிடும், மருளாதே! கடமைதான் பெரிது. கடமையை செய்! காதலை 'டன்கர்க்' செய்! ஆம்! காதலை வெற்றிகரமாக வாபஸ்

வாங்கு. வளர்ந்து போன வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்ளலாம். ஆனால் இழந்த தந்தையின் உயிரைப் பெறமுடியுமா?''

"பெறமுடியாதுதான்!"

தன் காதலை 'டன்கர்க்' செய்தான். ஆம்! இரண்டாவது உலக யுத்தத்தில் நேச படைகள் டன்கர்க் துறைமுகம் மூலம் வெற்றிகரமாக வாபஸ் வாங்கியது போல், தன் காதலை வாபஸ் வாங்கினாள். கண்ணீரால் கலங்கிய அவள் கண்களிலே ஒரு களிப்பு! அழுது கொண்டிருந்த அவள் அங்குமிங்கும் பார்த்தாள்.

அவள் மாமன் "இதோ! இதில் கையெழுத்திட்டு விட்டு பணத்தைப் பெற்றுக்கொள்! கலியாணம் செய்து கொள்ளுகிறேன் என்று உறுதி கூறு!'' என்று கண்ணால் கூறிக்கொண் டிருந்தான்.

எழுந்தாள். ஓடினாள். மாமன் காலில் விழுந்தாள். அழுதாள்.

"மாமா! உங்களையே மணந்து கொள்ளுகிறேன். அப்பாவைக் காப்பாற்றுங்கள்."

"வேண்டாம்மா! வேண்டாம்! என் உயிர்போனாலும் பரவாயில்லை. அவனை நீ மணக்க வேண்டாம்."

தந்தையின் தடுப்பு இது.

"இல்லை! இல்லை! என் காதல் செத்தாலும் பரவாயில்லை. உங்கள் உயிர் வாழட்டும்."

அழுதுகொண்டே கூறினாள். அவளுக்கு பிடித்த வெறியில் அவளுக்கு யார்சொல்வதும் காதில்விழவில்லை.

"எழுந்திரு இளவேனில்! இதோ இது நீ என்னைத் தான் மணப்பேன் என்று உறுதிகூறும் பத்திரம். இதில் கையெழுத்திடு! இதோ பேனா! நான் உன் தந்தையையும் தங்கையையும் காப்பாற்றுகிறேன்."

பேனாவை வாங்கி அடிமை சாசனத்தில் தன் முத்திரை யிட்டாள்.

18. மறு பிறப்பு

இளவேனில் கையெழுத்து இட்டவுடன், அதை மாணிக்கம் கையில் கொடுக்கப் போனாள். ஆனால் அதே சமயத்தில் "இளவேனில்! இளவேனில்!" என்ற சத்தம் கேட்டது. ஆம்! அவளுக்கு ஒரு மின்னல் தோன்றியது. இருண்ட அவள் நெஞ்சுக்கு மின்னல்தான். மின்னல் போல் தோன்றியது இளங்கோதான். கையெழுத்திட்ட பேப்பருடனே, "இளங்கோ! இளங்கோ என்று அலறிக் கொண்டு ஓடினாள். இளங்கோவின் காலில் விழுந்து அழுதாள்.

இதைக் கண்ணுற்ற மனித மிருகம் மாணிக்கம் ஒரு வேங்கையானான். பயங்கரமான வெறி அவனை ஆட் கொண்டது. ஒருவன் கட்டிய கோட்டையை இன்னொரு வன் தகர்த்தெறிந்தால் கோட்டை கட்டியவன் கொதிக் கத்தானே செய்வான்? "இளவேனில்! இங்கே வா! இதோ பணம்! பத்திரத்தைக் கொடு!" என்று கர்ஜித் தான்.

"பத்திரமா? இளவேனில் என்ன பத்திரம்?" என்று பரபரப்போடு வினவினான் இளங்கோ.

"இளங்கோ! என்னை நான் அவனுக்கு அடிமை யாக இருக்க எழுதப்பட்டது. பணத்திற்காக. எழுதி னேன்."

"பணம்தானே! இதோ நான் கொடுவந்திருக்கி றேன். அதைக் கிழித்தெறிந்துவிடு."

அவள் அதைக் கிழித்து விட்டாள்.

மாணிக்கம் ஆவேசத்தோடு அவர்களை நெருங்கி னான்.

"சீ! மடையா? நீயாரடா அவளைத் தடுக்க?" கோபத் தோடு மாணிக்கம் இளங்கோவின் கன்னத்தில் அறைந் தான்.

" சீ! முட்டாளே! என் காதல் கொழுந்தடா இவள்!" என்று கூறிக்கொண்டே இளங்கோவும் அவன் கன்னத்தில் அறைந்தான்.

இருவருக்குமிடையே பெரிய போர் மூண்டுவிட்டது. இளவேனில், "இளங்கோ! ஐயோ! சண்டை சண்டை!" என்று அலறினாள். கருணாகரர் பேசமுடியாமல் தத்தளித்தார். இளங்கோவை புழுபோல் நசுக்கினான் முரடன் மாணிக்கம். கையிலிருந்த கத்தியை எடுத்து மாணிக்கம் இளங்கோவின் நெஞ்சில் சொருகப்போனான். இதைக் கண்ட இளவேனில் பக்கத்திலிருந்த செம்பை எடுத்து கத்தியை நோக்கி வீசினாள். செம்பு மாணிக்கத்தின் மண்டையைத் தாக்கியது. மாணிக்கம் கீழே சாய்ந்தான். இளங்கோ எழுந்து நின்றான். அவனுக்கு நெற்றியில் சிறிது காயம். அதற்குள் அங்கு ஜனங்கள் கூடிவிட்டனர். மாணிக்கத்தை சிலர் வெளியேற்றினர்.

" இளங்கோ! பொடிப்பயலே! இன்று நீ ஜெயித்துவிட்டாய்! இன்றுமாத்திரம்தான் நீ இளவேனிலுடன் இன்பம் அனுபவிக்கமுடியும். உனக்கு அவள் நிரந்தரச் சொத்து அல்ல. உன்னை விரட்டி அடிப்பேன். உன் தந்தை எனக்கு உதவி. மடையா!" என்று உறுமிக் கொண்டே சென்றான்.

இதுவரை ஒன்றும் பேசமுடியாமல் இருந்த கருணாகரர் இப்போது பேச வாய்திறந்தார்.

" இளங்கோ! நீதான் தெய்வம்! தக்க தருணத்தில் வந்து இளவேனிலைக் காப்பாற்றினாய்."

"ஆம்! மரித்துப்போன என் காதலுக்கு மறுபிறப்பு அருளினீர்கள்."

" இளவேனில்! அப்பாவுக்கு என்ன செய்கிறது?"

" இளங்கோ! அப்பாவுக்கு காசம்! தங்கைக்கு நிமோனியா! இருவருமே சாவுக்கும் வாழ்வுக்குமிடையே போராடுகிறார்கள்."

" இளவேனில்! நம் நாட்டில் ஏழை மக்கள் அனைவருமே சாவுக்கும் வாழ்வுக்கும் இடையேதான் போராடுகிறார்கள்."

" தூயமணி! ஓடிப்போய் டாக்டரை கூட்டிவாடா." இதுவரை பயந்து மூலையிலே பதுங்கியிருந்த தூயமணியும் எழுந்து டாக்டரை கூட்டிக்கொண்டுவர ஓடினான்.

டாக்டர் வந்து அவர்கள் இருவருக்கும் மருந்து கொடுத்தார். இருவரும் விரைவாக குணமடைந்து வந்தனர்.

"இளங்கோ! நீங்கள் எங்கே வரமாட்டீர்களோ என்று கலங்கினேன். தக்க தருணத்தில் வந்தீர்கள்."

"ஆம்! தக்க தருணம்தான்! இல்லாவிட்டால் நீ இன்னொருவனின் இறையாகி இருப்பாய். இளவேனில்! உன்னையா நான் மறப்பேன்? நீங்கள் வந்த இரண்டு நாட்களில் எனக்கு விடுதலை கிடைத்தது. ஆனால் வெளியே வந்து பார்த்தபோது. "இந்தி ஒழிக! வடநாட்டு ஆதிக்கம் வீழ்க!" என்ற எழுத்துக்களை நோக்கினேன். இந்திப் போராட்டத்தில் தொண்டனாக கலந்து கொண்டேன். விளைவு.........? மூன்று மாத ஜெயில் எனக்கு."

"ஆ! ஜெயில்! இந்தி ஒழித்து தமிழை நிலை நாட்ட முயன்றதற்கா? அநியாயம்!"

"அது அரசாங்கத்தின் காதுகளுக்கு எங்கே ஏறும்? இலக்கண வரம்பற்ற இந்தி படையெடுத்தால், தமிழன் அதை ஒழிக்கு மட்டும் ஓயமாட்டான்; உயிர் வெல்லமல்ல அவனுக்கு. என்பதை நிரூபித்தது இந்தி எதிர்ப்பு போர்."

"சந்தோஷம்! தமிழர் வாழட்டும்! தனி நாடாக பிரியட்டும் திராவிடம். அதற்கு போராட்டம் தொடங்க வேண்டும்."

"இளவேனில்! நிச்சயமாக போராட்டம் தொடங்கத் தான் போகிறது. திராவிடமும் விடுதலை அடைந்தே தீரும்."

"நல்லது!"

"ஜெயிலிலிருந்து வந்ததும் தந்தையிடமே சென்றேன். அவர் வேறு பெண்ணை மணக்கும்படி வற்புறுத்தினர்."

"சம்மதித்து விட்டீர்களா......?"

"பச்சைக்கிளி உன்னை விட்டா நான் வேறு ஒருவள் மேல் இச்சை கொள்ளுவேன். மணந்தால் இளவேனில்தான் என் மணவாட்டி என்றேன்."

"உம்! அப்புறம்......!"

"என்னோடு நீ வாழ வேண்டுமாயின், நீ அவளை மறந்துவிடு; இல்லை இன்றே வீட்டை விட்டு வெளியேறு என்றார்."

"நீங்கள் என்ன கூறினீர்கள்?"

"அவசரப்படாதே! உடனே நானும் பாக்கிஸ்தானை விட்டு வெளியே வரும் அகதிபோல் என் வீட்டை விட்டு வெளியேறினேன்."

"ஐயோ! எனக்காகவா எல்லாம் துறந்து விட்டீர்கள்?"

"தன் காதலிக்காக சாம்ராஜியத்தையே துறந்த எட்டாவது எட்வர்டை விட நான் பெரிய தியாகம் செய்யவில்லையே!"

"எனக்காகவா இவ்வளவு கஷ்டம்?"

"இளவேனில்! உனக்காக மட்டுமல்ல; எனக்காகவுந்தான்! என் தந்தைக்கு மகன் பெரிதில்லையாம்; மதமாம்! மகன் வாழ்வு பெரிதில்லையாம்; பாழும் பணமாம் இளவேனில்! நீ(ய) சொல்? பணத்திற்காக என் பது

மையை நான் இழப்பேனா? மாயா மதத்திற்காக என் மனதுக் கினியாளை நான் மறப்பேனா?"

"அதுசரி! இனி நீங்கள் என்னுடனே எப்போதும் தங்கித்தானே வாழ்வீர்கள்?"

"காலம் பிறப்பிக்கும்! அப்போது கூடி வாழலாம்! இளவேனில்! உங்களை எல்லாம் இனி காப்பாற்றவேண்டியது என் கடமை! திரண்ட சம்பாத்தியம் பண்ண நான் இலங்கை செல்லப் போகிறேன்."

"இலங்கைக்கா? என்னை விட்டுப் பிரிந்தா செல்லப் போகிறீர்கள?"

"ஆம்! இளவேனில்! பிரிவு உனக்கு பெரும் நெருப்பாகத் தோன்றும். ஆனல் காதலருக்குஇடையே காதல் வளர வேண்டுமானல் அடிக்கடிப் பிரிவு தேவை. இளவேனில்! நீ உன் தந்தையையும் மற்றவர்களையும் பார்த்துக் கொண்டு இரு! நான் இலங்கை சென்று வந்து உன்னை மணப்பேன். இன்னும் இரண்டு நாளையில் இலங்கை செல்வேன்."

இரண்டு நாள் கழித்து இலங்கை சென்று விட்டான் இளங்கோ. இளவேனில் எவ்வளவு தடுத்தும் அவன் கேட்க வில்லை. போனவுடன் கடிதமும் பணமும் அனுப்பிக் கொண்டிருந்தான். இரண்டு மாதம் கழித்தது. அவனிடமிருந்து பதிலே வரவில்லை. காரணம் விளங்க வில்லை இளவேனிலுக்கு. கையிலிருந்த பணமும் கரைந்து கொண்டே வந்தது. வேறு வழியில்லாமல் மங்கை மீண்டும் வேலைக்குச் சென்று வரலானள். கருணைகரருக்கு நோய் குறைவதும் அதிகப் படுவதுமாகவே இருந்தது, வயதானவர் அதிலும் காச நோய் ஆகவே அது பூர்ணமாக குணமடைய வில்லை.

19. பொறி!

மாணிக்கம் மீண்டும் பினங்கு சென்று விட்டான் என்று வதந்தி உண்டாயிற்று. இளவேனில் ஏமாந்தான் வஞ்சகன்; பீடை ஒழிந்தது என்று ஆனந்தப் பட்டான்.

ஒருநாள் அவர்கள் குடியிருக்கும் வீட்டைக் கொடுத்த நம்பி வந்தார். அவரைக் கண்டதும் கருணைகரர் சந்தோஷப் பட்டார்.

"ஐயா! சௌக்கியமா? எப்போது வந்தீர்கள்?"

"நல்ல சுகம்! என் முதலாளி சேட் இன்று இங்கு வந்து விட்டார். அதனல் நானும் அவருடன் வந்து விட்டேன். இன்னும் சில காலம் இங்குதான் வசிப்பார். அவர் பரம சாது! பாடு படும் பாட்டாளிகளுக்கு அவர் நிச்சயம் உதவி செய்வார். ஆனல் அவரிடம் ஒரு வழக்கம் உண்டு:"

"என்ன வழக்கம்.........?"

"யாருக்கும் உதவி செய்தாலும், 'உங்கள் உதவியை நான் ஒருபோதும் மறவேன். அதற்கு எந்தப் பிரதி யுதவியும் செய்யத் தயார்!' என்று அவரிடம் உள்ள குரானில் சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்."

"நன்ருக வாழட்டும் அவர்!"

அதற்குள் அவருடைய மகன் தூயமணி, "அக்கா! அக்கா!" என்று ஓடிவந்தான்: பின் வாசலில் நின்று ஓடி வந்தான். பின் வாசலில் நின்று கொண்டிருந்த இளவேனிலும் உள்ளே ஓடி வந்தாள்.

"அக்கா! இதோ ஒரு கடிதாசி!"

கடிதத்தை படித்தாள் இளவேனில். கைகால்கள் நடுங்கின. கண்ணிலிருந்து ஆறு உற்பத்தியானது. தொப்பென்று தன் தந்தையின் கட்டிலில் போய் விழுந்து, விசித்து விசித்து அழுதாள்.

கருணாகரர் கலங்கினர் "என்னம்மா? என்ன எழுதியிருக்கிறது?" என்றார்.

"ஏன் அழுகிருய்? விஷயத்தைச் சொல்லேன்?" என்றார் நம்பி.

"அப்பா! நீங்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி நடத்திய போது, இரண்டாயிரம் வரிசெலுத்தாமல், கள்ளக் கணக்கு சர்க்காரிடம் காண்பித்தீர்களாம். அந்த வரிக்கு இரட்டிப்பு மடங்கு இன்னும் இரண்டு நாட்களில் கோர்டில் செலுத்த வேண்டும். இல்லையென்றால் நீங்கள் சிறைக்குச் செல்ல வேண்டும், இது சர்க்கார் உத்தரவு!"

"ஐயோ! நாலாயிரமா? துன்பத்திற்குமேல் துன்பமா? பட்டகாலிலே தான் படுமா? இந்த உலகில் ஏழைகள் உய்யவே வழியில்லையா? பாழும் பணம்! அது இல்லாததால் நாங்கள் நடை பிணம்! சதிகாரச் சமூகமே! ஏழை படும் பாட்டைப் பார்!"

"ஐயா! கொஞ்சம் பொறுங்கள்!"

"பொறுத்துப் பொறுத்துதானே ஏழைகள் செத்து மடிகிறார்கள். இனி பொறுக்க முடியாது, புரட்சிப்புயலே வீசு! சதிகாரச் சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைத் தட்டி எல்லோரையும் சமமாக வாழச் செய்!"

"ஐயா! நான் ஒன்று கூறுகிறேன் கேளுங்கள்!"

"கேட்பதற்கு என்ன இருக்கிறது? இனி இந்த உலகில் நாங்கள் வாழ முடியாது எங்காவது விழுந்து செத்து மடிய வேண்டியதுதான். நான் எப்படிச் சிறைச் செல்ல முடியும்?"

"அப்பா! அவரைச் சிறிது பேச விடுங்கள்: நீங்கள் அதிகம் பேசாதீர்கள்."

"ஐயா! என் முதலாளியிடம் உங்களுக்காகப்பரிந்து பேசுகிறேன். அவர் சம்மதிப்பாரானல்...........நான் கூறியபடி சத்தியம் செய்து கொடுங்கள் போதும்."

"நல்லது! நீங்கள் உடனே உங்கள் முதலாளியிடம் போய் சிபார்சு செய்யுங்கள். உங்களுக்கு எங்கள் உயிர் உள்ளளவும் நன்றி!"

"நல்லது! நான் வருகிறேன்!"

வந்த நம்பியின் உள்ளத்திலோ மகிழ்ச்சி! "பொறியில் புறுக்கள் சிக்கி விடும்!" என்று அவன் உள்ளம் நினைத்தது. ஏன்..........?

---

20. பொறியில் புறு!

இளவேனில் தந்தையின் கட்டிலின் அருகிலிருந்து அழுது கொண்டிருந்தாள். பாவம்! பேதைப் பெண் அவள். பெரிய சோதனை அவளுக்கு. பெரிய போராட்டம் நடத்த வேண்டும். வெற்றி பெற என்ன செய்வாள்?

இதற்குள் அங்கு கையில் குரானோடு நம்பி பிரவேசித்தார். அவர் முகத்தில மகிழ்ச்சி காணவே, இளவேனில் துள்ளி குதித்துக் கொண்டு ஓடினாள். வெள்ளத்திலே கிடந்து தத்தளிப்பவனிடம் ஒருவர் கைதூக்கி காப்பாற்ற வந்தால்......நம்பியின் வரவும் இளவேனிலுக்கு அப்படியே தோன்றியது.

"ஐயா! அவர் சம்மதித்தாரா?" இளவேனிலின் கேள்வி இது.

"சம்மதிக்காமல் என்ன செய்வா? ஆனால்......"

"ஆனல் என்ன ஆனல் ......?" கருணாகரரின் கேள்வி இது.

"ஐயா! நீங்களாவது உங்கள் மகளாவது நான் நேற்று கூறிய படி சபதம் செய்து தர வேண்டும்."

"என்ன சபதம்?" இளவேனிலின் வினா.

"'நான் நீங்கள் செய்த நன்றியை மறவேன். நீங்கள் என்ன உதவி கேட்டாலும் செய்யதயங்கேன்' என்று கூறி குரானில் அடித்து சபதம் செய்தால், அவர் எவ்வளவு பணமும் தரத்தயார்."

"அதற் கென்ன? அப்படி என்ன உதவி எதிர் பார்ப்பார்?"

"யாருக்கம்மா தெரியும்? எத்தனையோ பேரிடம் இப் படித்தான் பணம் கொடுக்கிறார், பாரி வள்ளல் போல். இதுவரை யாரிடமும் உதவி கேட்டதாக தெரிய வில்லை. ஏதோ இது ஒரு விளையாட்டு......"

கருணைகரருக்கு இதில் ஏதோ கள்ளம் இருப்பதாக புலப்பட்டது.

"விளையாட்டு தான் வினையாகி விடும். யோசித்து செய்ய வேண்டிய காரியம்." என்றார்.

"யோசியுங்கள்! என் மீது கூடவா உங்களுக்கு நம் பிக்கை யில்லை."

"நம்பிக்கை இல்லை என்று கூற வில்லை. இருந்தா லும்.........ஆத்திரம் ஆபத்து தானே."

"அப்பா! யோசித்துப் பார்ப்பதற்கு என்ன இருக் கிறது? நமக்கு வில்லனாக முளைத்த மாமன் பினங்கு சென்று விட்டார். இனி நமக்கு யார் தீங்கு விளைவிப் பார்கள்?"

"பொறு அம்மா!"

"இல்லையப்பா! நான் சபதம் செய்து கொடுக்கத் தான் போகிறேன்."

அவள் அறிவாளா இந்த உலகம் சூழ்ச்சியாலும் சூதாலும் நிரம்பியது என்று கள்ளமற்ற வெள்ளை உள் ளம் கொண்டவள் அவள். வெளுத்த தெல்லாம் பால் என்று எண்ணும் இயல்பு அவளுக்கு. அதிலும் இளமை யின் துடிப்பு! புத்தியோ குழம்பி கிடக்கிறது. வெறி வேறு அவளுக்கு.

"தடை பண்ணு திருங்கள் அப்பா! என்ன வந்தாலும் சரி! எதிர் நோக்கி யிருக்கிறேன். ஐயா! குரானை கொண்டு வாருங்கள்."

குரானை கையில் வாங்கினுள். தரையில் உட்கார்ந்தாள். குரானை அவளுக்கு முன் வைத்தான். அவள் அருகிலே தூய மணியும் வந்து அமர்ந்தான். நம்பி கூறியதை கூறிக் கொண்டே குரானில் கரங்களால் அடித்தாள். அவள் கரங்கள் தரையிலே தான் பட்டது. ஆம்! தூயமணி அதை படீரென்று இழுத்து விட்டான். இந்த நிகழ்ச்சியை எல்லோரும் கண்டு விட்டனர். இளவேனிலுக்கு தூயமணிமேல் ஆத்திரம் பொங்கி வந்தது. நாலைந்து உதைகள் பரிசளிக்கப் பட்டன அவன் அழுது கொண்டு ஓடினுன்.

"அம்மா! மீண்டும் சபதம் செய்தாக வேண்டும்."

"இளவேனில்! வேண்டாம்! எல்லாம் எதிர் மாருக நடக்கிறது. எனக்கு ஏனோபயமாக இருக்கிறது. சபதம் செய்ய வேண்டாம்."

"சபதம் செய்யா விட்டால் அவர் பணம் தர மாட்டார்."

"அவர் பணம் தந்தாலும் சரி, தரா விட்டாலும் சரி! சபதம் செய்யாதே இளவேனில்!" தந்தையின் உத்தரவு!

இளவேனில் என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்தாள். அவள் நெஞ்சமும் படபடத்தது.

"இளவேனில்! அது பயங்கர மான பொறி! அதில் சிக்கி விடாதே!"

'பொறியா? இல்லை!"

"முட்டாளே! பொறி அல்ல வென்ருல் முன் பின் தெரியாத எவனும் உன்னை நம்பி நாலாயிரம் ரூபாய் தருவானு? யோசித்துப் பார்!

இது அவள் மனப் போராட்டம்.

சூழ்ச்சியா? இல்லையா? என்று தீர அறிய எண்ணினாள். அவள் மனதில் ஒரு யோசனை பூத்தது. இவருடைய முதலாளியையே நேரில் கண்டு விட்டால்......... கண்டிப்பாக சூழ்ச்சியா? இல்லையா? என்பது தெரிந்து விடும். இது தான் அவள் நெஞ்சில் பூத்த அறிவு மலர்.

"ஐயா! நான் உங்கள் முதலாளியை நேரில் சந்தித்து கேட்கிறேன். என்னை அவனிடம் அழைத்துச் செல்வீகளா?"

"சரியம்மா! உன் இஷ்டம்!"

இளவேனில் தந்தை அங்கு செல்ல வேண்டாமென தடுத்தார். ஆனால் அவள் கேட்க வில்லை. புலியைப் பின் தொடரும் புள்ளி மான் போல் நம்பியை பின் தொடர்ந்தாள். நம்பியின் மனமோ......"புரு பொறியில் இருந்தும், சிக்க வில்லையே? ஆனல் எப்படியும் பிடித்து விடலாம்."

---

21. கூண்டுக் கிளி

இளவேனிலும், நம்பியும் ஒரு மாடி வீட்டிற்குள் நுழைந்தனர். அங்கு சாய்பு ஒருவர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் வாயிலே ஒரு அசோகா சுருட்டு புகைந்து கொண்டிருந்தது, ஆழ்ந்த சிந்தனைக் கோடுகள் அவர் நெற்றியிலே! நம்பி அவர்தான் என் எஜமானர் என்று இளவேனிலுக்கு காட்டிக் கொடுத்து விட்டு வெளியேறினன்.

இளவேனில் அவருடைய கால்களில் விழுந்து அழுதாள். "ஐயா! துடிப்போர் துயர் நீக்கும் வள்ளலே! கஷ்டப் படுவோரின் கண்ணீரைத் துடைக்கும் கருணாமூர்த்தியே! ஏழைக்கு உதவி செய்ய வேண்டும்."

"உதவி செய்யத்தானே காத்திருக்கிறேன். கனி ரசம் சொட்டும் உன் மொழியிலே, என் மனத்தைப் பறி கொடுத்து விட்டேன், தங்கக் கிளியே! உன்னையா தவிக்க விடுவேன்?"

ஒன்றுக்கு ஒன்றை உளறி விட்டு திகைக்கும் சிறு பிள்ளைகள் போல் சாய்பு திகைத்தார். ஏன்......?

'சீ! துரோகி! நீயார் என்னைப் பெண்டாள நினைக்க? வஞ்சகனே! உன் கோர சொரூபத்தை மறைப்பதற்கா உனக்கு வள்ளல் என்ற திரை!" என்று கூறிக் கொண்டே இளவேனில் விலகி நின்றாள்.

"பொண் வண்டே! பொங்கும் உங் கோபத்திலும், தனி அழகு பொங்கி வடிகிறது. பெண்மானே! பொலிவும் உன் அழகு மலியும் சரக்கல்ல! அதனல் பணத்தை கொட்டித் தருகிறேன். என்னை கலியாணம் செய்து கொள். கைவிடுவேன் என்று கலங்காதே!"

பேச்சோடு பேச்சாக அவள் கரங்களைத் தீண்டினான். அவளோ "பளார்" என்று அவன் கன்னத்தில் அறைந்தாள். அவன் முகத்திலிருந்த மீசையும் தாடியும் அகன்றது. தொப்பியும் கீழே விழுந்தது. அவளுக்கு அவனைக் கண்டதும் ஆச்சரியம் ஒரு புறம்! பயம் இன்னொரு புறம்!

"சீ! துரோகி! வஞ்சகா! நீயா?"

"ஆம்! நான் தான்! ஏன் திகைக்கிறாய்? பினங்கு சென்ற மாமன் இங்கு எப்படி வந்தான் என்று திகைக்கிறாயா? அல்லது புலியின் வாயில் புள்ளிமான் போல் சிக்கி விட்டோமே என்று திகைக்கிறாயா? இளவேனில்! உனக்காகத்தான் இந்த வேஷம். நேரடியாக உன்னை அடைய முடியாமல் இவ்விதம் பதுங்கிப் பாய நினைத்தேன் அதிலும் பழுது ஏற்பட்டு விட்டது. ஆம்! உன்னைக் கண்டதும் நான் சாய்பு என்பதையே மறந்து விட்டேன். சாய்பு மாதிரி ஏமாற்றி சத்தியம் வாங்குவதுத்

தடை பட்டு விட்டது. உன்னைக் கண்ட உணர்ச்சி வெறி தான் அதற்கு காரணம்."

"சீ! பழிகாரா! நீ விதைக்கும் பொறியில் எல்லாம் நான் தப்பி விடுகிறேனே. இன்னும் நீ ஏன் என்னை தொந்தரவு செய்கிறாய்?"

"ஒன்றி உன்னோடு வாழ்வு இல்லை அதே முயற்சியில் சாவு. அதுதான் என் வேலை."

"உன்னால் என்னை அடையவே முடியாது."

"அதைத்தான் பார்க்கப் போகிறேனே. நான் முயன்றால் முடியாதது மூவுலகிலும் இல்லை இளவேனில்! வா என்னுடன்! சொர்க்கலோகத்திற்கு வழிகாட்டுகிறேன். இகலோகத்தின் இன்ப எல்லை இன்னதென்று அறிவிக்கிறேன்."

"சீ! காமவெறி பிடித்த கயவனே! என்னிடமா உன் காமவெறி?"

"காமத்திற்கு உன்னை நான் பலியிட அழைக்கவில்லை; கல்யாணத்திற்கு அழைக்கிறேன். படுக்கையறைக்கு அழைக்கவில்லை; என் பத்தினியாக இருக்க அழைக்கிறேன்.

"பாதகா! இது பாபமில்லையா? நரகம் கிடைக்காதா உனக்கு?"

"நரகம் எனக்கா? நான் என்ன அவ்வளவு பெரிய குற்றவாளியா? கண்ட பெண்களின் கற்பையும் கசக்கி எறிந்து, கோபிகா ஸ்திரிகளுடனும் கும்மாளம் போட்டு. தமக்கைக்கும் தாபத்தை தீர்த்தானே கோபால கிருஷ்ணன் அவனை விடவா நான் குற்றவாளி?" குருபத்தினியுடன் கூடி குருத்ரோகம் செய்தாரே. இந்திரர், அவரை விடவா நான் குற்றவாளி? ஆண் வண்டு, பெண் மலர். மலரைச் சுற்றி வண்டு மொய்ப்பது குற்றமா?"

"போதும் உன் வேதாந்தம். நான் வருகிறேன்."

"இளவேனில்! கூண்டுக்கிளி நீ! ஏன் பறக்கிருய்? என் வார்த்தைக்கு இணங்கிவிடு. இல்லை இதுதான் உனக்கு சிறைச்சாலை. இதிலிருந்து நீ தப்பிச் செல்ல முடியாது."

"படுபாவி! சம்மதிப்பேன் என்று கனவிலும் கருதாதே."

"கிளியே! புத்திவருமட்டும் கூண்டிலேயே இரு!"

மூர்த்தி கதவை மூடிவிட்டு வெளியே சென்ருன். இளவேனில் கூண்டுக் கிளியானுள். வெளியே அவன் நண்பன் நம்பி நின்ருன்.

"மாணிக்கம்! உன் முட்டாள்தனத்தைக் காட்டி விட்டாயே! சத்தியம் வாங்கிய பின் உன் சாயம் வெளுத்தாலும் பரவாயில்லை. அதற்கு முன் உன்னை யாரென்று காட்டி, காரியத்தைக் கெடுத்துவிட்டாயே!"

"ஆம்! அவளைக்கண்டதும் உணர்ச்சி வெறியில் சாய்பு என்பதையே மறந்துவிட்டேன். பின் நடப்பது நடக்கட்டும் என்றே பேசினேன்."

"நல்ல வேளை! அவளை எங்கே வெளியே விட்டு விடுவாயோ என்று பயந்தேன். மாணிக்கம்! மனங்கலங்காதே! இதே இன்னும் ஓரிரு மணிகள் அவள் உன் மனைவி!"

"அப்படியா...?"

"என் ஜால வேடிக்கையை பாரேன்!"

மாணிக்கம் வீட்டை சப்தி செய்தால், கருணைகரர் கண்டிப்பாக தன் காலில் விழுந்துவிடுவார் என்று எண்ணினன். ஏமாந்தான். அவர்வேறு எங்கு சென்ருலும் தன் காரியம் கெட்டுவிடும் என்று கண்டான். வெளியூர் போகாமல் தடுக்கவே, தன் நண்பன் மூர்த்தி மூலம் அவர்களுக்கு குடிசை கொடுத்தான். மூர்த்திதான் நம்பி! ஆம்! மாணிக்கத்தின் முதன் மந்திரி! அந்த

வஞ்சக நரியின் குகையிலே கருணாகரர் வசித்து வந்தார். ஆனால் அவருக்கு அது நரிக் குகை என்று தெரியாது.

நேரடியான தாக்குதலில் பயன் இல்லை என்று கண்டவுடன், மாணிக்கம் கொரில்லா முறையை கையாண்டான். அதுதான் பதுங்கிப் பாய்வது. அவன் பினாங்கு சென்றுவிட்டதாக தெரிந்தால், இளவேனில் தைரியமாக இருப்பாள் கவலையீனமாக இருக்கும் அவளை காலை வாரி விட்டுவிடலாம். தந்திரத்தால் அவளைக் கைவசப் படுத்திவிடலாம என்று கண்டான். மாணிக்கம் பினாங்கு சென்று விட்டான் என்ற பொய் வதந்தி எழுப்பிவிட்டான். கருணாகரரின் வீட்டில் நடப்பதை அறிய, நாரதர் வேஷம் போட்டவன்தான் நம்பி என்ற முதல் மந்திரி, பெரிய சேட் போல் மாறுவேஷத்தில் திரிந்தான் மாணிக்கம்.

22. சுதந்திரப் பறவை

"ஐயோ! அப்பா! உங்களுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லையே? எழுந்து நடக்ககூட உயிரற்று கிடந்தீர்களே. அப்பா! ஜெயில் கைதியாகிவிட்டீர்களே? மானத்தை இழப்பதா என்று மரணத்தை தழுவி விட்டீர்களா? நினைத்தாலே நெஞ்சு வெடிக்கிறதே! தம்பி, தங்கை சாப்பிட்டு கூட இரண்டு நாள் இருக்குமே!

"மாமன்! இல்லை! மாமன் இல்லை! மகா பாதகன்! நம் குடும்பத்தையே குட்டிச் சுவராக்க வந்த சண்டாளன். என் காதலை கத்தரிக்க வந்த கருநாகம். அவன் அழியட்டும். வஞ்சக எண்ணம் ஒழியட்டும். இளங்கோ! இளங்கோ! இதோ உம்மைப் போல் சிறையாகியிருக்கிறேன். நீர் எங்கு சென்றீர்? வரமாட்டீரா? வந்து என் வறுமையை போக்கமாட்டீரா? எனக்கு விடுதலையளிக்க மாட்டீரா? இளங்கோ! உமக்காகவே உயிரைத் தாங்கிக்

கொண்டிருக்கிறேன் என் மாமன் என்னை கற்பழிக்க வந்தால் என் உயிர் போவது திண்ணம். ஏ! சதிகாரச் சமூகமே! ஏழை வாழ்விலே இன்பம் ஒரு மின்னல் தானா? ஏழைகளை வாழவிட மாட்டாயா? இளங் காதலர்களை வெட்டிப் பிரிப்பதுதான் உன் வேலையா?" என்று புலம்பிக்கொண்டேயிருந்தாள் இளவேனில். அறையோ திறப்பதாக தெரியவில்லை.

மறுநாள் காலை கதவு திறந்தது. மாணிக்கம் உள்ளே வந்தான். அவன் கண்களில் கண்ணீர். அவன் முகத்திலோ அழுகையின் குறி!

"மூர்த்தி! முரட்டுப் புத்தியால் பெண்களை வசப் படுத்த முடியாது. கண்ணீர் சிந்து! காதலிக்கிறேன் உன்னை என்று கெஞ்சு! கைவிட்டால் மரணத்தையே முத்தமிடுவேன் என்று அழு! பெண்கள் மனம் இளகியது. எளிதில் ஏமாறக் கூடியதும்கூட! கண்டிப்பாக உன் வேண்டுகோள் அங்கிகாரமாகும்." என்பது அவன் முதல் மந்திரி அவனுக்குச் சொல்லிக் கொடுத்தப்பாடம். அதையே இபபொழுது ஒப்புவிக்க ஆரம்பித்தான் மாணிக்கம்.

அவனைக் கண்டதும் இளவேனில் நடுங்கினாள். "ஐயோ! கொலைகாரா! மறுபடியும் வந்து விட்டாயா?" என்று அவள் மனம் நடுங்கியது.

"துரோகி! காதலரை வெட்டிப் பிரிக்கும் கயவனே! சூழ்ச்சியால் என்னை சிக்க வைத்து விட்டாயே! கொலைகாரா!"

"இளவேனில்! என்ன வேண்டுமானாலும் சொல். இதற்கு நானா குற்றவாளி? நீதான்."

"என்ன நானா குற்றவாளி?"

"நீயல்ல........உன் அங்கங்களின்... அசைந்தாடும் அந்த அழகு! என் மதியை மயக்க வந்த உன்மோகனப் புன்னகை! என் இதயத்தை இம்சிக்க வந்த உன் கண் பாணம்!"

106120.

"மாமா! நிறுத்துங்கள் உங்கள் வர்ணனையை! குடி வெறியில் பிதற்றுபவன் போல் காம வெறியில் உளரா திருங்கள்."

"காமவெறியல்ல கண்ணே! காதல் வெறி!"

"மாமா! பிதற்றுகிறீர்கள். என்னை மறந்து விடுங்கள். மரணத்துக்கு மாலையிட்டாலும் உங்கள் கழுத்துக்கு மாலையிட மாட்டேன்."

"இளவேனில்! உன்னை மறந்துவிட வேண்டு மென்றுதான் பினங்கிற்குச் செல்ல நினைத்தேன். உன் மோகன உருவமே என் எதிரே வந்து நின்று என்னைத் தடுத்தது. என்ன செய்வேன்? என் காதலை நீ ஏற்கா விடில் நான் மரணத்தையே ஆலிங்கனம் செய்து கொள் வேன்."

" மாமா! என்னை அவ்வளவு எளிதில் ஏமாற்றிவிட முடியாது. என்னை இன்று விடுகிறீர்களா? இல்லை...... இதோ இந்தக் கத்திக்கு இரையாகட்டுமா?" என்று கூறிக்கொண்டே இளவேனில் மேஜையிலிருந்த கத் தியை எடுத்து தன் நெஞ்சிலே குத்தப் போனாள்.

"வேண்டாம்! இளவேனில்! வேண்டாம்! உன்மேல் நேற்று முதல் ஏதோ இரக்கம் உண்டாயிற்று. உன்னை நான் பலவந்தப் படுத்த விரும்பவில்லை: வேண்டுமானல் நீ வெளியேறிவிடு! ஆனல் நீ எப்பொழுது என்னிடம் வந் தாலும் நான் ஏற்றுக் கொள்ளத் தயார்!"

"என்ன மாமனா இப்படி கூறுகிறான்? என்னைக் கசக்கிப் பிழிய நினைக்கும் கயவனா இப்படி கூறுகிறான்? நான் குத்தி செத்து விட்டால் கொலைக் குற்றம் அவன் மேல் சேரும் என்ற எண்ணமா? என் கையிலிருக்கும் கத்தியைப் பிடுங்க வழி செய்கிறானா?" என்று எண்ணி திகைத்து நின்றாள் இளவேனில்.

"ஏன் இளவேனில்திகைக்கிறாய்?உன் மாமன்மனம் எப்படி மாறிவிட்டது என்று திகைக்கிறாயா? அல்லது

மாமன் நம்மை ஏமாற்றிக் கத்தியைப் பிடுங்க நினைக்கி ருன் என்று திகைக்கிருயா? இளவேனில்! நான்நேற்று வரை முரடனுக இருந்தேன். இன்றே மனம் மாறி விட் டேன். மனம் விரும்பாத மங்கையை மாலையிடக் கூடா தென முடிவு கட்டிவிட்டேன். உனக்கு விருப்பம் இருந் தால் நீ என்னை மாலையிட்டால் போதும். நீ வேண்டுமா ஞல் உன் வீட்டிற்குப் போ!"

மாமனு இப்படி பேசுவது என்று ஆச்சரியப் பட் டாள். பின்பு மெதுவாக அந்த அறையை விட்டு வெளி யேறினுள். கூண்டுப் பறவை சுதந்திரப் பறவையானது. ஆம்! இளவேனில் என்ற எழில் பறவை தன் வீட்டை நோக்கிப் பறந்தது. அவள் மனமோ, இனி மாமன் தொந்தரவு செய்ய மாட்டான், மனம் மாறி விட்டது; நாம் சுதந்திரப் பறவையாக திரியலாம் என்று எண்ணி யது.

ஆனல் மாணிக்கமோ........ அவள் போவதைப் பார்த்துச் சிரித்தான். "இளவேனில்! என் இன்பமே! நீ எங்கு செல்கிருய்? என்னை விட்டு சுதந்திரம் பெற்று விட்டோம் என்று பறக்காதே! எப்படியும் நீ என்னி டம் நிபந்தனையற்ற சரணுகதி அடைந்தே தீர வேண் டும். காதலை 'டன் கர்க்! செய்ய வேண்டியதுதான்" என்று கூறிச் சிரித்தான். ஏன் சிரித்தான்? எதற்காக சிரித்தான்?

---

23. இடிமேல் இடி

இளவேனில் ஓடோடியும் வந்தாள் தன் வீட்டை நோக்கி. அவள் மனம் தந்தை என்ன கதியடைந்தாரோ என்று பயத்தால் ஆடியது. வீட்டிற்குள் நுழைந்தாள். அவள் தந்தை கீழே கிடந்தார் பிணமாக. நாதியற்றது போல் கிடந்தது அந்தப் பிணம். மங்கையும், தூயமணி

யும் அழுது கொண்டு இருப்பதைக் கண்டாள். கோ வென்று கதறினள்.

"தந்தையே! மரித்து விட்டீர்களா? மாண்டு மண் ணேடு மண்ணுகி விட்டீர்களா? பிரிந்து விட்டீர்களா எங்களை? ஐயோ! எப்படி இனி நாங்கள் வாழ்வோம்? அனுதையாக அலைய வேண்டியதுதான எங்கள் கதி? தந்தையே பசியால் துடித்து செத்தீர்களா? கோரகாசம் உங்களை கொலை செய்து விட்டதா? எப்படி இறந்தீர்கள்?

ஏ மரணமே! உனக்கு கூடவா ஏழைகளிடம் இரக் கமில்லை? எங்களைத் தனியாக தவிக்க விட்டு விட்டாயே! என் தந்தை எப்படி இறந்தாங் சொல்? பாழும் பசிக்கு அவரைப் பலியாக்கினுயா? உண்மையைச் சொல்? என் தந்தை ஏன் மாண்டார்? நீயும் ஒரு ஈவிரக்கமற்ற அரக் கன் தானே!

ஏ! சதிகாரச் சமூகமே! நார்ந்துபோன சாக்கடைத் தொட்டியே! உன்னில் வாழும் ஏழைகளின் கதி இது தான? துடித்துத் துடித்து சாக வேண்டியதுதான நாங் கள்? தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று முழங்கிய தண்டமிழ் நாடே! இதோ என் தந்தை பசியால் மடிந்து கிடக்கிறார். புறப் படுங்கள்! புறப்படுங்கள் போருக்கு! இந்த உலகத் தினையே அழித்திடுவோம். நீங்கள் எப்படி வருவீர்கள்? பணக்காரன் கைப் பதுமைதானே நீங்களும்?

ஏ! தெய்வமே! நீதான் நீதியின் தராசு என்கிறுயே. நீ இருக்கிறுயா? இறந்து விட்டாயா? உனக்கு நாங்கள் என்ன செய்தோம் கேடு? ஏழைகளை வாட்டி வாட்டி வதைப்பதுதான் உன் திருவிளையாடலா? உன் நெஞ்சம் என்ன கல்லா? ஏழைகளுக்கு உய்வே கிடையாதா? நீயும் பணக்காரன் கைப் பதுமைதானு? என் கேள்விகளுக்கு பதில் சொல்ல மாட்டாயா?

யாரும் பதில் சொல்ல மாட்டீர்கள். நீங்கள் யாரா வது சக்தியோடு இருந்தால்தானே? அப்பா நீங்களாவது

பேசமாட்டீர்களா? ஒரே ஒரு வார்த்தைப் பேசுங்கள் அப்பா! ஒரே ஒரு வார்த்தை! இளவேனில் என்று ஒரு தடவை அழைக்கமாட்டீர்களா? அப்பா! அப்பா!!" என்று கதறினுள், முட்டினுள், மோதினுள்.

"இளவேனில்! கலங்காதே! காலம் வரும்! கவலைப் படாதே! உன் தந்தையைத் தகனம் செய்!"

"ஐயோ! தகனம் செய்யக்கூட கையில் பணமில்லையே!"

அவள் மனப் போராட்டம் இது.

அதற்குள் அங்கு தபால்காரர் வந்தார். இளவேனி லின் கரங்களுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. நடுங்கிய கரத்தோடு பிரித்துப் படித்தாள். விழுந்து விழுந்து அழுதாள். "இடிமேல் இடியா?" என்று ஏங்கினுள்.

இலங்கை,
17—8—51

இளவேனிலுக்கு,

இளங்கோ என்பவருக்கு எங்கள் ஆஸ்பத்திரி யில் கடும் சுரம் கண்டிருந்தது. நாங்கள் எங்களால் இயன்ற அளவு அவரைக் குணமாக்க முயற்சித் தோம். ஆனல் அவர் நேற்று இரவு இயற்கை எய்து விட்டார்.

சாகும் தருணம் உங்களுக்குத் தகவலைத்தெரி யப் படுத்த வேண்டுமென்று கூறியதால், உங்க ளுக்கு இதைத் தெரியப் படுத்துகிறோம்.

உங்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

"ஐயோ! நீங்களுமா இறந்து விட்டீர்கள்? பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது உண்மை தானே? தந்தை மாண்டார் நீங்களாவது காப்பாற்றுவீர்கள் என்றிருந்தோம். நீங்களுமா மரித்துவிட்டீர்கள்? என்னை

மறந்துவிட்டு சென்றுவிட்டீர்களா? தெருவில் நின்று கூக்குரலிடுகிறேன். உங்கள் செவியில் என் குரல் விழ வில்லையா? வருத்தி வருத்தி வாடி மடியட்டும் என்று என்னைப் பிரிந்து விட்டீர்களா? கள்ளமற்ற நம் காதலும் கருகி மடிய வேண்டியதுதானா? காதல் நம் வாழ்விலே தோன்றி மறையும் மின்னல்தானா? தூண்டா விளக் கில்லையா?

ஏ! காதல் உலகமே! என்றுதான் காதல் கைகூடும் பொருளாக மாறும் சொல்? காதலித்து காதலனை இழந்து கதறித் துடிப்பவள் கேட்கிறேன் சொல்? உன் திருவிளையாடலால் பிடிபட்டு திகைத்து திண்டாடி நிற் பவள் கேட்கிறேன் சொல்?

ஏ! மரணமே! உனக்கு உயிர்களைக் குடிப்பதுதான் பொழுதுபோக்கா? உயிர்கள்தான் உனக்கு விளையாட் டுக் கருவிகளா? என தந்தை, என் காதலர் இருவருமே உன் கோரப் பசிக்கு இரையாகி விட்டார்கள். இனி எனக்கு மட்டும் இங்கு என்ன வேலை? நானும் இங்கு வாழமுடியாது. இதோ! நானும் இங்கு வாழமுடியாது. இதோ! நானும் வருகிறேன். என்னையும் அழைத்துச் செல்.”

அவளுக்கு இருந்த வெறியில் தன் தம்பியும், தங் கையும் இருப்பது கூட அவள் கண்களுக்குத் தெரிய வில்லை. தன் தந்தையின்மேல் விழுந்து முத்தமாரி சொரிந்தாள். வரவர அவளுக்கு வெறி பயங்கரமான கட்டத்தை அடைந்தது.

“காதலரே! இதோ உம்மைப் பார்க்க நானும் வரு கிறேன்.” என்று அலறினாள். அந்த வீடே அவள் சத் தத்தால் அதிர்ந்தது. சிறுவர்கள் பயந்து கதறினார்கள். வெறிபிடித்த அவளுக்கு அவர்கள் கூக்குரல் கேட்கவா செய்யும்? “அப்பா! அப்பா!” என்று அலறிக்கொண்டு வீட்டின் பின்புறம் உள்ள கிணற்றை நோக்கி ஓடினாள். உள்ளே குதித்தாள். மேலும் கீழுமாக வந்துகொண் டிருநதாள்.

24. பொறியில் மாட்டியது புள்ளிமான்

கண் விழித்துப் பார்த்தாள். ஒரு பெரிய அறையில் இருப்பதாக அறிந்தாள். "ஐயோ! நான் காண்பது என்ன கனவா? எப்படி நான் இங்கு வந்தேன்? கிணற்றில் விழுந்து சாகவில்லையா நான்? யார் என்னைக் காப்பாற்றியது?" என்ற ஐயம் தோன்றியது. அறையை சுற்றும் முற்றும் பார்த்தாள். கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். முன்னொரு தடவை இங்கு வந்தது போல் அவளுக்குத் தோன்றியது. திகைத்தாள். "எப்போது இங்கு வந்தேன்?" அவள் உள்ளத்தில் எழுந்த வினா இது." ஆம்! மாணிக்கம்! மாமன் என்னை இந்த அறையில்தான் சிறை வைத்தான். ஐயோ! மீண்டும் அவன் வலையிலா வீழ்ந்துவிட்டோம்? பாதகன் என்னை ஏன் காப்பாற்றினான்" என்று துடித்தாள்.

"அக்கா! அக்கா!" என்ற குரல் அவள் காதுகளில் ரீங்காரமிட்டது. மங்கையும், மணியும் ஓடிவருவதைக் கண்டாள், அவளுக்கு பகீரென்றது. "தான் அன்று கிணற்றிலே விழுந்து இறந்திருந்தால் இச்சிறுவர்கள் கதி?" என்ற கேள்வி அம்பு அவள் நெஞ்சிலே தைத்தது. தன் குற்றத்தை யுணர்ந்தாள்.

"அக்கா! அன்று நீ எங்களைத் தனியாக விட்டு விட்டு கிணற்றில் போய் குதித்துவிட்டாயே. நீ இறந்திருந்தால் எங்கள் கதி? நல்லவேளை! மாமன் காப்பாற்றினார்." என்றாள் மங்கை கண்ணீரை உகுத்துக் கொண்டே.

"ஆம்! நல்ல வேளைதான்! மாமன் என்னைக் காப்பாற்றினார்!" என்ற வார்த்தைகள் அவள் உள்ளத்திலே எதிரொலித்தது. மாமன் மீது ஒரு பாசம் உண்டாயிற்று. அவருக்கு நீ மிகவும் கடமைப்பட்டவள். என்று கூறியது அவள் மனம்.

"அக்கா! மீண்டும் எங்களை விட்டுப் பிரிந்து விட மாட்டாயே?!"

"இல்லையடா கண்ணு! என் உயிரைக் கொடுத்தாகிலும் உங்களைக் காப்பாற்றுவேன்."

"ஏன் அக்கா உன் உயிரை எங்களுக்காக கொடுக்க வேண்டும்? நீ மாணிக்கம் மாமாவை மணந்துகொள். இந்த மச்சி வீட்டிலே நாம் மகிழ்ச்சியாக இருக்கலாமே."

மங்கையின் சொற்கள் வேல்களாக உருவெடுத்து, அவளது வைராக்கிய நெஞ்சை குத்தி துளைத்தது. மங்கை போட்டது ஒரு அதிர்வேட்டாயிற்று இளவேனிலுக்கு. அவள் வைராக்கிய கோட்டையின் அடித்தளமே ஆட்டம் கொடுக்க ஆரம்பித்தது.

"இளவேனில்! மாணிக்கத்தை மணந்துகொள்! தயங்காதே! உனக்கு உயிர் பிச்சை அளித்ததை மறவாதே!"

"முடியாது. அவன்தானே என் துன்பங்களுக்கெல்லாம் காரணம். அவன் இல்லாவிட்டால் என் தந்தை இறந்திருக்கமாட்டாரே!"

"அவன்தான் நன்றிகெட்டவன். நீயுமா அப்படி? மீண்டும் அவன் மனம் இப்போது திருந்திவிடவில்லையா? திகைக்காதே! உன் எதிர்கால வாழ்விற்காவது அவனை மணந்து கொள்."

"மனமில்லாதவனை மணப்பதைவிட மரணமே மேல்."

"நீ மரணமாகி விடலாம். ஆனால் இதோ நிற்கும் இளஞ்சிறுர்களைப்பார்! அவர்களுக்காக அவனை மணந்து கொள்ளக் கூடாதா? அவர்களைக் காப்பது உன் கடமை அல்லவா? உன் வாழ்வு பெரிதா? கடமை பெரிதா?"

நெஞ்சிலே உருவாகிய இந்த போராட்டம் முடிவதற்குள்ளாகவே அங்கு மாணிக்கம் தோன்றினன்.

"மாமா! அக்காள் விழித்து விட்டாள்." என்றாள் மங்கை.

"இளவேனில்! எப்படியம்மா இருக்கிறாய்?" என்று கூறிக் கொண்டே மாணிக்கம் அவள் அருகில் ஒரு நாற் காலியில் வந்து அமர்ந்தான்.

"மாமா! என்னை மன்னித்து விடுங்கள்." கண்ணீர் மாரி சொரிந்து கொண்டே கூறினாள்.

"இளவேனில்! எதற்கம்மா மன்னிப்பு? நானல்ல வா உன்னிடம் மன்னிப்பு? கேட்க வேண்டும். உனக்கும் உன் குடும்பத்திற்கும் செய்த துரோகத்திற்கு நான் மன் னிப்பு கேட்கிறேன். மன்னிப்பாயா?"

"மாமா! அதையெல்லாம் மறந்து விடுங்கள். மாமா! நீங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். மிகவும் நன்றி."

"இளவேனில்! கடமைக்கு நன்றி எதற்கு? நீ உன் வீட்டிலிருந்து ஓடுவதை நான் கவனித்தேன். கிணற்றில் குதித்தாய்! தண்ணீரில் கிடந்து தத்தளிக்கும் ஒருவளை காப்பது என் கடமை அல்லவா?"

மாமன் நம் மீது மனம இரங்கிவிட்டார். இனி நம் கதி......? அவர்தான்!" மனமதிரும் புதல் இது

"அது கிடக்கட்டும் மாமா! இனி நீங்கள் தான் எங் களைக் காப்பாற்ற வேண்டும். நான்...உங்களை...ம... ண...ந்...து...கொ...ள்...கி...றே...ன்."

"உண்மையாகவா? மனப்பூர்வமாகவா?" மகிழ்ச்சி யும் வியப்பும் கலந்த ஒளி அவன் முகத்தில் பிரகாசித் தது. ஏழை ஒருவனுக்கு அரச பதவி நாடி வந்தால்...... அவ்வளவு ஆனந்தம் அவனுக்கு.

"ஆம்! மாமா! திருமணம் என்ற ஒப்பந்தம் மூலம் வாழ்க்கை என்ற சினிமாவிலே கதா நாயகனுக்கு கதா நாயகியும் நாம் இருவர்.

ஆனந்தம் அணைகடந்து விட்டால் ...... அன்பில் அணைப்புதானே தம்பதிகளிடையே நடக்கும்? மார் போடு அணைத்தான், மலர் இதழ்களில் முத்த மாரி

பொழிந்தான். அவள் உதைத்தாளா? இல்லை! உடன் பட்டாள். அது மட்டு மல்ல! உளம் பூரித்தாள் தந்தை தம்பி பாசம் அவள் வைராக்கிய கோட்டையை சிதள் சிதளாக சிதறடித்தது. எதிரி அரசோச்ச அதில் ஆனந்த குடியாக இல்லை! அவனுக்கே அரசியாக— வாழ இடங்கொடுத்தது. மாணிக்கம் மன்னனாக இளவே னில் மகாராணிபட்டம் சூட்டத் தயாரானான். "மாணிக்கம் முயன்றால் முடியாதது மூவுலகிலும் இல்லை!" என்றது அவன் மனம்.

திருமண தினம் அன்று. வீடே ஒரு அலங்கார மாளிகை யாகியது. எங்கும் களிப்பு வெள்ளம். அதிலே உல்லாசப் படகை சல்லாபத்துடன் விடச் சித்த மானான் மாணிக்கம். ஆனால் இளவேனில் உள்ளமோ...! 'வருங்கால வாழ்வின் கோட்டையே சரிந்து விட்டதே!' என ஓங்கியது. அவள் ஆசைக் கனவுகள்—ஆம்! இளங் கோவுடன் இன்பமுடன் வாழலாம் என்ற ஆசைக் கோட்டையே—ஆகாயத்தில் பறந்து விட்டது. இல்லை! மறைந்தே விட்டது. ஆனால்......? திசை தெரியாமல் தத்தளித்த அவளுக்கு—அவள் எதிர்கால வாழ்விற்கு— ஒரு ஒளி தோன்றி விட்டது; வழி காட்டி கிடைத்து விட்டது; கலங்கரை விளக்கம் தென் பட்டு விட்டது; என சிறிது மகிழ்ந்தாள்.

சேடியர்களால் ஆடை அலங்காரம் செய்யப் பட் டாள் இளவேனில். கோயிலின் மணி ஒலித்தது. வாழ்க்கை ஒப்பந்தம் செய்வதற்கு கோயிலுக்கு காரில் அழைத்துச் செல்லப் பட்டாள். காரை விட்டு இறங்கி னாள். கோயிலின் படிக் கட்டுகளில் ஏறிய போது, "இள வேனில்! இளவேனில்!" என்ற சத்தம் கேட்டது. தலை குனிந்து வந்தவள் **தன்** பார்வையை மெல்ல சத்தம் வந்த பக்கம் ஓட விட்டாள். அவள் கண்களோ அவளுக் குத் தெரிந்த ஒருவரும் அங்கு இல்லை என்று அறிவித் தது. அவள் காதுகளோ அது அடிக்கடி உன்னை

அழைத்த பழகிய வரின் குரல் என்றது. அவள் மனமோ 'அது யார்? அது யார்?" என்றது. பதில்......!

திருமணம் இனிது நடந்தேறியது. ஆனால் அவள் கண்களிலே கண்ணீர்; களிப்பல்ல காரணம்......? கதா நாயகனை மணக்காமல் வில்லன் அல்லவா வீட்டுக்காரன் ஆகி விட்டான் என்ற மனக் கொதிப்பு! மட்டமற்ற மன வருத்தம்.

---

25. கீரியும் பாம்பும்!

மாணிக்கம் மீண்டும் மலேயா செல்ல எண்ணினன். இளவேனிலையும் அழைத்துப் போக வேண்டுமா? வேண் டாமா? என்ற பிரச்சனை எழுந்தது. "முட்டாளே! இள வேனிலை அங்கு அழைத்துச் செல்லாதே. அவளை அழைத்துச் சென்றால்......கண்ட கண்ட கன்னிப் பெண்களுடனும் கை கோர்த்துக், கனிகளைக் கடித்துச் சுவைக்க முடியுமா? மனம் போல் வாழ்வு நடக்குமா? சுவைத்த கனியை தானே மீண்டும் மீண்டும் சுவைப் பாய். சீக்கிரத்தில் அது புளித்து விடுமே! புளித்து விட்ட தென்று புதுக்கனி தேடினல் நீயும் அவளும் கீரியும் பாம்பும்தான். ஜாக்கிரதை."

"அவளையா விட்டு விட்டு செல்லவா நினைக்கிறாய்? மடையா! அவள் ஆசைத்தீயை மூட்டி விட்டு, அதை தணிக்காமல் சென்று விட்டால்......அது பக்கத்து வீடு களில் பற்றிக் கொள்ளாதா? அது மட்டு மல்ல...அதை விடப் பயங்கர ஆபத்து அருகிலிருக்கிறதே. மறந்து விட்டாயா ?"

"மறக்கவில்லை. இளவேனிலை என்னுடனே அழைத்துச் செல்வேன். அப் பறவையை இங்கு விட்டுச் சென்றால், மாயமாக பறந்தாலும் பறந்துவிடும்."

அவன் மனத்திலே நிகழ்ந்த மனப்போராட்டம் இது. ஏன் இளவேனிலை தனியாக விட்டுச் செல்ல பயந்தான்? அவள் கண்டவருடன் கள்ளக் காதல் கொள்ளும் காதகியா? காமத்தால் கருத்தழிந்து போகும் கன்னியா? இல்லையே! பத்தரை மாற்றுப் பசும் பொன் அல்லவா அவள்? விலையேறப்பட்ட மாணிக்க மல்லவா அவள குணம்? பின் ஏன் தயங்கினுன்? எதற்கு? எதற்கு? பயங்கர ஆபத்து என்ருனே! எது அது?

சில நாள்கள் கழித்து இளவேனிலுடன் மாணிக்கம் மலேயாவுக்கு பயணமானுன். தூயமணியும், மங்கையும் மாணிக்கத்தின வீட்டிலேயே இருந்தனர். அவர்களைக் கவனிப்பதற்கு மாணிக்கம் தன் பாட்டியை ஏற்பாடு செய்திருந்தான்.

மலேயாவில் இருவரும் சிறிதுகாலம் குதூகலத் துடன் வாழ்ந்தனர். ஆனல் குதூகலத்தை துரத்தி யடிக்க எப்போதும் துன்பம் குறிவைத்துக்கொண்டு தானே இருக்கும்? அமைதியை நோக்கிப் புயல் சீறத் தானே செய்யும்? இன்பமாகச் செல்லும் அவர்கள் வாழ்க்கைப் படகை, காலதேவன் கண்டுவிட்டான். பொருமை கொண்டான். புயலை வீசும்படி செய்துவிட் டான். கண்ணும் கண்மணியும் போல்; கனியும் சுவை யும்போல் இருந்த அவர்கள் கீரியும் பாம்பு மாயினர். ஆம்!......

ஒருநாள் அவர்கள் இருவரும் கோலாலம்பூரில் ஒரு வீதி வழியே வந்துகொண்டு இருந்தனர். அவர்களுக்கு எதிராக ஒருவர் ஒரு காரில் வந்துக்கொண் டிருந்தார். அவரை முன்பு அறிந்ததுபோல் தோன்றியது அவ ருக்கு. கண் இமைக்காமல் அவர் நெருங்க நெருங்க அவ ரையே பார்த்தாள். கலங்கினுள்.

“இளங்கோ! இளங்கோ!” என கதறிவிட்டாள். ஆம்! அவள் கண்களுக்கு அவன் இளங்கோவாக காட்சி அளித்தான். தன்னையும் அடக்க முடியாமல் வாய்விட்

டுக் கதறிவிட்டாள். அருகில் வந்துக்கொண்டிருந்த மாணிக்கத்திற்கு......ஆத்திரம் உண்டாயிற்கு. மடிந்து கொண்டிருக்கும் தீயை மீண்டும் தூண்டினல் பெரு நெருப்பு பற்றிக்கொள்ளத்தானேசெய்யும். ஆம்! அவன் தன் கோபத்தை குழிதோண்டி புதைத்திருந்தான். அவளுடைய வார்த்தைகள் குண்டுகள்போல் அக் குழியை குத்தித் துளைத்தது. கோபம் பொத்துக்கொண்டு வந்தது பற்களை நற நறவெனக் கடித்தான். கண்களோ நெருப்பைக் கக்கியது. எரியும் நெருப்பு பந்தம்போல் காட்சியளித்தன அவைகள்.

“சீ! துரோகி!” என்று கர்ஜித்தான். கலங்கினுள் பேதை. கருணையா அவளுக்கு கிடைக்கும்? கரகரவென வீட்டிற்கு அவளை இழுத்துச் சென்ருன். கொலைக்களம் செல்லும் கைதிபோல் சென்ருள் அவளும்.

கட்டிலில் அவளை தூக்கி எறிந்தான். “காதகியே!” என்ருன். “கருணை காட்டுங்கள்” என மன்ருடினுள். காலால் எட்டி உதைத்தான். கையில் உள்ள பிரம்பு அவள் முதுகில் விளையாடியது. கதறினுள். கருணைகாட்டவில்லை அவன். ‘மன்னியுங்கள்! மன்னியுங்கள்’ என மன்ருடினுள். மனங் கசியவில்லை அவனுக்கு! மனித மிகத்திடமா மன இரக்கம் கிடைக்கும். கதற கதற அடித்தான். கால் பந்துபோல் விளையாடினுன்.

பின்பு தன் கட்டிலில் போய் படுத்தான். “நன்றி கெட்ட நாய்! நான் என்ன உதவி செய்தும் அந்த நாயை மறக்கவில்லையே;” என உறுமியது அவன் உள்ளம். மாணிக்கத்திற்கு கோபம் வந்துவிட்டால் அவன் ஓர் மதம்பிடித்த வேழம்போல் ஆகிவிடுவான். மதம்பிடித்த யானையிடம் மலர் மாலை சிக்கினுர்.........இளவேனிலும் அவ்விதமே ஆனுள் அன்று. அன்று பிடித்த சனியன் தான் அவர்கள் வாழ்வில்......உடும்பு பிடியாகவே இருந்தது. இருவரும் கீரியும் பாம்பும்போல் தான் வாழ்க்கை நடத்தினர்.

மாணிக்கம் இளவேனிலுடன் ஒழுங்காக பேசுவது கிடையாது. பூசல்தான் அவர்களுக்கிடையே, வர வர அவன் ஒரு குடிகாரன் ஆகிவிட்டான். அதுமட்டுமல்ல கூத்திக்கள்ளனுமானன். தடுத்தாள் அவள். தடியடி தான் அதற்குப் பரிசு. கெட்டலைய வேண்டாம் என்று கட்டிப் பிடித்தாள். வெட்டிப் பேச்சு ஏன் என்று எட்டி உதைத்தான்.

26. வெள்ளி மலை

ஒருநாள் இரவு குடிவெறியில் தன் கட்டிலில் புரண்டுகொண் டிருந்தான் மாணிக்கம். வெறி தீர்ந்த பின்பு அவன் கட்டிலைவிட்டு எழுந்து, இளவேனில் என்ன செய்துக்கொண் டிருக்கிருள் என்று அறிய அவள் அறைக்குள் சென்ருன். அங்கு அவன் கண்ட காட்சி அவன் கல் மனத்தையும் கரையச் செய்தது. பாகாக உருகி ஓடச் செய்தது. ஆம்! இளவேனில் கட்டி லில் புரண்டு கொண்டு புலம்பினுள். அவளுடைய தேகம் கொதித்தது. கடும் ஜுரம் அவளுக்கு. ஜன்னி கண்டு பிதற்றுபவள்போல் பிதற்றினுள்.

"நாதா! மாமா! என்னை மன்னிக்கமாட்டீரா? நரக வேதனையில் நான் நாசமாகனுமா? மாமா! மாமா! மன் னியுங்கள்! மன்னியுங்கள்" இந்தச் சொற்கள் அவன் கடிய மனதை கரையச்செய்தது. இரக்கம் கொண்டான் அவள்மேல்! தன்மீதுதான் குற்றம் என்றுகூட நினைக்க லானுன். மீண்டும் அவள் புலம்பத் தொடங்கினுள்.

" அப்பா! நீங்கள் என்னை அழைக்க மாட்டீர்களா? இளங்கோ! நீங்கள் சென்றதும், தம்பிக்கும்... தங்கைக்கு மாக...வாழ்க்கைப்பட்டேன். ஆனல் இளங்கோ...குற்ற மறியா எனக்கு தண்டனை. ஐயோ! அப்பா! இளங்கோ! என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்." இந்தச் சொற்கள்

அவனைச் சித்ரவதை செய்தது. "பாவி! உன்னால்தானே அவளுக்கு இந்த கஷ்டமெல்லாம்! மடையா! உனக்கு பயந்துதானே அவள் இந்த காய்ச்சலையும் உன்னிடம் சொல்லவில்லை. பாதகா! நீமட்டும் என்ன? திடீரென நேசித்த ஒருவர் உன் முன் சென்றால் அவரை கண்டு அழைக்க மாட்டாயா? உனக்கு மட்டும்தானா அந்த உணர்ச்சி உண்டு? பேதை அப் பெண்ணுக்கு கிடையாதா? சிந்தித்துப் பார்! துரோகி!" என்ற பலமான சம்மட்டி அடிகள் அவன்மனத்திலே. மனங்கலக்கினான். மனதுருகினான். இளவேனில் மன்னித்துவிடு என்னை" என்றான்.

கூதலினால் துடித்துக்கொண் டிருந்தாள் அவள். அவள் பெட்டியை திறந்தான். போர்வை ஒன்றை எடுத்துஉதறினான். அதனுள்ளிருந்து ஒரு சிறியநோட்டு விழுந்தது. அதற்கு தலைப்பு......! "வாழ்க்கைத் துறை முகத்தை தாக்கிய அலைகள்"

பக்கம் பக்கமாக திறந்தான். அவன் செய்த கொடுமைகள்; அவனால் ஏற்பட்ட தொல்லைகள் எல்லாம் அதில் தெள்ளத் தெளிய தீட்டப்பட் டிருந்தன. அவை ஒவ்வொன்றும் அவன் மனசாட்சியை சுடும் வேட்டுகளாயின. மற்றொரு பக்கம் புரட்டினான். அதில் ..., அவர்களுக்கிடையே ஏற்பட்டபிணக்கின் காரணம்......அவள் குற்றவாளி அல்ல என்று எழுதப்பட்டிருந்தது. வாசித்தான்.

"வெந்துபோன இருதயத்தால் நொந்து போய் எழுதுகிறேன். இளங்கோ! உம்மை நான் என் மனதிற்கு இருட்டடிப்பு செய்தேன். ஆம்! இளங்கோ என்ற ஒளியே இல்லாதபடி அதை இருளும்படி செய்தேன். ஆனால், எந்த இருண்ட வானிலும் மின்னல் தோன்றி ஒளி பரவச் செய்து மறைவதுபோல், உம் எண்ணம் மின்னல் போல் தோன்றிவிட்டது. இது என் குற்றமா? மின்னல் இருண்ட வானிலே தோன்றுவதை எப்படி

தடுக்க முடியாதோ அதுபோல் என் மனத்திலே ஒளி யாகிய நீர் திடீரென தோன்றுவதை தடுக்க முடியுமா? ....தடுக்க முடியாது என்ற பதில் தானே யாரிடமும் எதிரொலிக்கும். ஆனால் என் கணவர்......அதை பெரும் களங்கமாக கருதுகிறார். செய்யக் கூடாததை செய்து விட்டதாக செப்புகிறார். வாழ்விழந்து வாடி வதங்குகி றேன். வாழ்வழிக்க வழி பிறக்காதா? இளங்கோ! நீர் வரமாட்டீரா? வரமாட்டீர்! நானும் வாழமுடியாது."

வாசித்தான். ஒவ்வொன்று ஒவ்வொரு குத்தீட்டிக ளாயின. கருணையே அறியாதவன், கண்ணீர் வடித் தான். இரக்கம் கொள்ளாதவன். இளகி நின்றான். ஆம்! இருண்ட வானிலே மின்னல் தோன்றுவது போல, துர்க்குண இருள் சூழ்ந்தவன் நெஞ்சிலும், நற்குண மாகிய ஒளி தோன்றத்தானே செய்யும்?

"இளவேனில்! நீ வாழவேண்டும். வாழ முடியும்! உன்னை வாழும்படிச் செய்வேன். ஆம்! ஆனால் என் னோடு இனி நீ இன்பமாக வாழமுடியாது. எப்படியும் உன்னை வாழ்விக்கப் போகிறேன்." என்று உறுதி கூறினான். வெறிகொண்டவன்போல் அலறினான். ஏன் அப்படி அலறினான்? எப்படி அவளை வாழ்விக்க முடி யும்? யாரோடு அவள் வாழ முடியும்? விளங்காதப் புதி ராகத் தோன்றலாம். ஆனால் அவன் பட்ட பகல்போல் விளங்கும் என்றான்.

டாக்டரை அழைத்து வந்து அவளைக் குணப்படுத் தினான். அவன் மனத்திலே பலமான எண்ண அலைகள் மோதிக் கொண்டிருந்தன. வாழ்விக்க வேண்டும் இளவேனிலை என்ற எண்ணம் வெள்ளி மலைபோல் அவன் இருண்ட காடாகிய மனத்திலே தோன்றியது. அதற்கு ஒரு முடிவுக்கு வந்தான். பயங்கரமான முடிவு. கேட்பவர் நெஞ்சே நடுங்கும் முடிவு. பக்திமான்கள் பலர் பாவம் பழி என பழிக்கும் முடிவு.

27. தியாகத்தின் வானம்

தற்கொலை! ஆம்! அந்தப் பயங்கர முடிவுக்கே வந்தான். இளவேனிலை இன்பமாக வாழ அதுதான் சிறந்த வழி! தன் வாழ்வையே—ஏன்? உயிரையே தியாகம் செய்வதுதான் வாழவளிக்கும் வசந்த மண்டபத்தின் வாசல் என்றான். இளவேனில் இன்றி அவனால் வாழ முடியாது. ஆனால் இளவேனில் தன்னுடன் இன்பமாக வாழமுடியாது. வைராக்கியமோ......அவள் இன்பமாக வாழவேண்டும்—இதற்கு வழி உயிர் தியாகம். ஆம்! ஆண்கள் தியாகத்தின் வானம் என்பதை நிரூபித்தான்.

இளவேனில் பூர்ண சுகமடைந்ததும் ஒரு நாள் இரவு மாணிக்கம் தன் கட்டிலில் அமர்ந்திருந்தான். "இளவேனில்! இளவேனில்!!" என்று அழைத்தான். இளவேனில் ஓடிவந்தாள் அவளை அருகில் அமரும்படிச் சொல்லி கூந்தலைக் கோதிக் கொண்டிருந்தான். அவளுக்கு இது பெரிய ஆச்சரியத்தை அளித்தது. அனுகுண்டை கண்டுபிடித்ததைக் கண்டுகூட அவ்வளவு ஆச்சரியப் பட்டிருக்கமாட்டாள். அதைவிட அவள் மாமன் நடை அவளுக்கு ஆச்சரியத்தை வாரிவாரி வீசியது.

" இளவேனில்!"

" என்ன மாமா?"

" நான் நஞ்சு உண்டுவிட்டேன்."

திடுக்கிட்டாள். அவள் நெஞ்சிலே பயங்கர இடி போல் அதிர்ந்தது அவை. பயத்தால் நடுங்கினாள்.

"ஏன் மாமா? நீங்கள் போவிட்டால் என் வாழ்வு? ஐயோ! மாமா!"

"இளவேனில்! நீ வாழவேண்டும். அதற்காகவே சாகிறேன்."

"என்ன மாமா? நான் உங்களுடன் தான் வாழ்வேன். வீணை......"

"வீணைக இல்லை இளவேனில்! நான் உன்னுடன் வாழமுடியாது. ஆனல் நீ இன்பமாக வாழவே வழி..."

"நீங்களன்றி இனி எனக்கு வழியேது மாமா!"

"வழியிருக்கிறது. கலங்காதே. கருத்த நோட்டு. திறந்து பார். ஆனல் நீ எனக்கு ஒரு உறுதி தரவேண்டும்."

"என்ன உதவி?"

"நீ நான் இறந்தவுடன் கண்டிப்பாக இந்தியா செல்! உன் தம்பி தங்கையை காப்பாற்று."

"சரி மாமா!"

"அது மட்டுமல்ல இளவேனில்! மணப்பதிலே இன்பம் கண்டவர்கள்; மறுபடியும மணந்துகொள்ள வேண்டும்."

"அதனல்.........?"

"நீயும் மறுவிவாகம் செய்துகொள்!"

"விதவை விவாகம் செய்தால் உலகம் தூற்றுமே!"

"எதைத்தான் போற்றும் இந்த உலகம். விதவை விவாகம் நடக்காததினல்தான் அம்மா, இன்று நம் நாட்டிலே விபச்சாரம் வளர்கிறது. கள்ளிக் காட்டுகளிலேயும், பாழுங் கிணறுகளிலும், குப்பைத் தொட்டிகளிலும் பிணமாக கிடக்கின்றதே பிள்ளைகள் அது யார் பெற்ற பிள்ளைகள் தெரியுமா...? அதனல் நீயும் விதவை விவாகத்தை ஏற்றுக்கொள்."

"சரி மாமா!"

"சரி! நான் கூறியதை மறவாதே. கருத்த நோட்டு திறந்து பார்! பல இரகசியங்கள் அதில் உள்ளன. என் குற்றங்களை மன்னித்து விடு."

"சரி மாமா!"

அதற்குள் மாணிக்கம் இருமினன் அவன் உயிர் அவன் உடலை விட்டுப் பிரிந்தது. இளவேனில் கதறி

னள்—முட்டினுள், மோதினுள், திரள் கூட்டம் கூடியது. பின்......? மாணிக்கத்தின் அடக்கம் நடைபெற்றது.

இளவேனில் படுக்கையில் கிடந்தே கதறினுள். "ஐயோ! அப்பாவும் போய்விட்டார். ஆசைக் காதலனும் பிரிந்துவிட்டார். கட்டிய கணவனும் மறைந்துவிட்டார். இனி என் வாழ்வு......? நான் ஏன் உயிர் வாழவேண்டும்......?" என அலறினுள்.

"நீ வாழவேண்டும்! அதற்காகவே நான் சாகிறேன். நீ நான் இறந்தவுடன் இந்தியா செல். உன் தம்பி தங்கையை காப்பாற்று."

"ஆம்! என் தம்பி தங்கைகளைக் காக்க வேண்டும். நாளையே இந்தியா செல்லவேண்டும்!"

"நான் இந்தியா சென்றாலும் எப்படி இன்பமாக வாழமுடியும்?"

"நான் கூறியதை மறவாதே! கருத்த நோட்டு! திறந்து பார்! அதில் பல இரகசியங்கள் உள்ளன. அதில் நீ வாழ வழியிருக்கிறது."

உடனே ஓடினுள். அவன் மேஜையைத் திறந்தாள். கருத்த நோட்டைத் தூக்கினுள் ஆச்சரியமான சம்பவங்கள் இங்கே இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன என்பதை அந்த கரிய நிறம் எடுத்துக் காட்டிற்று. திறந்து வாசிக்கலானுள்.

28. இரகசிய சுரங்கம்

"என் வாழ்க்கையில் நடந்த பல ரசமான சம்பவங்களை எழுதப் போந்தேன். அதன் விளைவுதான் இந்த இதழ்."

முதல் பக்கத்திலிருந்த சில சொற்கள்.

"வாழ்க்கையில் நான் கண்டெடுத்தக் கருவூலம் இளவேனில் கண்களுக்கு!" பத்தாவது பக்கத்திலுள்ள தலைப்பு இது .

இதயங் கவர்ந்த இன்பக் களஞ்சியம் இளவேனிலுக்கு,

இளவேனில்! இளங் கொழுந்தே! நான் கூறும் சில சம்பவங்கள் ஆச்சரியத்தில் உன்னை ஆழ்த்தலாம், பழிகாரா, துரோகி என்று நீ என்னைத் தூற்றலாம், பாழும் சமூகத்தின் கண்களுக்கு நான் குற்றவாளியாகத் தோன்றலாம், ஆனால் நீ கண்டிப்பாக என்னை மன்னித்துதான் தீரவேண்டும்.

இளவேனில், உனக்கு நான் செய்த துரோகம் மகத்தானது, ஆனால் துரோகி நானா? குற்றம் என்னுடையதாகத் தோன்றலாம்,ஆனால் குற்றம் என்னுடையதா? ஏன்? உன்னுடையது என்று கூட கூறலாம், உன்னை அடைவதற்குதானே அத்தனை குற்றங்களையும் புரிந்தேன். குற்றவாளி நானா? நீயா? என்று திகைக்கிறாயா? குற்றவாளி நானல்ல என்று வேண்டுமானால் நிரூபித்துக் காட்டுகிறேன்.

நீ என் வாதத்தை ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி என் எண்ணத்தை மட்டும் வெளியிடுகிறேன்.

எதிரே ஓர் தேன் கூடு! அதைச் சுற்றி வண்டினங்கள் காவல் புரிகின்றன விழித்தபடி. நோயால் வாடும் ஒருவன் இதைக் காண்கிறான். தேன் கிடைத்தால் அவன் நோய் குணமாகி விடும். அத்தேனை அடையப் போராடுகிறான். காவல் புரியும் வண்டினங்கள் வெட்டி வீழ்த்தப் படுகின்றன. தேனை அடைகிறான். காவல் புரியும் வண்டினத்தை வெட்டி எறிவது அவன் குற்றமா?

இலட்சிய வீரன் ஒருவன். அவன் இலட்சிய உருவம் ஒரு கோட்டையினுள் அடைபட்டுக் கிடக்கிறது. இலட்சியத்தை அடையப் போராடுகிறான். எதிர்த்து நின்

றவரின் சிரங்களைக் கொய்கிறான். இது இலட்சியவீரன் குற்றமா? நீயே சொல்!

என் இலட்சியம் நீ! உன்னை அடையவே பெரும் போராட்டம் நடத்தினேன். இதற்கு வந்த இடையூறு களை அகற்றினேன். இதில் கொலை கூட நேர்ந்திருக்கி றது. அது என் குற்றமா? சிந்தித்து சீர்தூக்கிப் பதில் சொல்?

'கொலை! அட கொலைகாரா! என்ன கொலை செய் தாய் சொல்? படுபாவி! நெஞ்சிலே உனக்கு கிஞ்சித்தே னும் இரக்க மில்லையா?' என்று நீ கூறலாம். இலட்சிய வீரன் இலட்சியத்தை அடைய நேரும்போது ஏற்படும் உயிர்ச் சேதங்களைக் கண்டு மனம் இரங்கினால் அவன் இலட்சியத்தை அடைய முடியுமா? இலட்சியத்தை அடையா விட்டால் அவன் இலட்சிய வீரன் ஆவானா? அவனை வீரன் என்று உலகம் ஏற்றுமா? நீயே சொல்!

அது போலவே நானும் இளகிய என் மனதைஇரும் பினும் கடுமையாக்கினேன். இதன் விளைவு.........?

சுரங்கத்தின் முதல்படி

இளவேனில்! இதய வீணையே! இதைக் கேள்! முத லில் நடந்த விளைவு இது. நீ என்னை மணக்க மறுக்கவே இனி உன்னிடம் வாதாடுவதில் பயனில்லை என்று கண் டேன். "நீதியைக் கூறி, நேர்மையுடன் நேரடியாகப் போராடுபவனுக்கு வெற்றியா கிடைக்கும்இந்த உலகில்? பதுங்கிப் பாய்பவனுக்கும் மறைந்திருந்து தாக்குபவனுக் கும் தான் வெற்றி நிச்சயம்" என்றான் என் முதல் மந் திரி.

ஆம்! நேரடித் தாக்குதலால் பயனில்லை என்று கண்டேன். அதை நீயே நிரூபித்து விட்டாயே. நீள்

வையகத்தில் அதற்கு விடுதலைச் சீட்டு அளிக்கப்பட்டு விட்ட தென்று உணர்ந்தேன். அந்த உணர்விலே உதித்த கொள்கைதான் மறைந்திருந்துதாக்குவது;பதுங்கிப் பாய்வது.

பண்டைத் தமிழர்களிடம் இந்தப் பழக்கம் கிடையாது. பதுங்கிப் பாய்பவன் கோழை. புறமுதுகு காட்டுபவன் தொடை நடுங்கி, என்ற உயரிய நோக்கங்கள் கொள்கைகள்தான் உலவின. அதனுல் ஆரியர் தமிழரை நேரடியாக தாக்க முடியாமல் கையாண்ட வழி இது! இதனுல்தான் வண்டமிழர் ஆரியவலையில்வீழ்ந்தனர். இது சரித்திரம் கண்ட உண்மை. அந்தப் பதுங்கிப்பாயும் கொள்கைதான் உலகில் எங்கும் வெற்றிப் பெற்றது. இது உலகறிந்த உண்மை.

இந்தப் பதுங்கிப் பாயும் கொள்கையில் பூத்த முதல் மலர்தான் ஒரு கடிதம். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு வருமானவரி செலுத்தும்படி நான் எழுதிய கடிதம். என்ன விழிக்கிருய்? 'ஐயோ! நான் அது சர்க்காரிடமிருந்து வந்த கடிதம் என்றல்லவா நினைத்தேன்? பாவி! நீயா எழுதினுய் என்று விழிக்கிருயா? நீ ஒரு படித்த முட்டாள் என்பதை நிரூபித்து விட்டாயே. அந்த கடிதத்தை நன்ருகப் பார்த்தாயா? அதில் சர்க்கார் முத்திரை இருந்ததா? சர்க்கார் உத்தரவு இல்லாமல் ஏதாவது சர்க்கார் உத்தரவு வருமா?

"ஐயோ ஏமாந்து விட்டேனே! சிந்தித்துப் பார்க்காமல் சிதைந்து விட்டேனே!" என்று கலங்குகிருயா? அதுமட்டுமல்ல, சர்க்காரின் உத்தரவாக இருந்தால் வாய்தாபடி பணம் செலுத்தாதற்கு யாரும் வந்தார்களா? "ஏன் என்று கேட்க எவருமே வரவில்லையே." என்கிருயா? உண்மைதான்.

"படுபாவி! ஏன் அப்படி எழுதினுய்?" என்கிருயா? எல்லாம் உன்னை—உன் பொங்கும் அழகில் தங்கி வசிக்கத்தான். புரிந்து கொள்! உனக்கு பணத்திற்கு

நெருக்கடி ஏற்படுத்தினல் பதறித் துடிப்பாய். பணத்திற்கு யாரிடம் செல்வது? என்ன செய்வது என்று யோசிப்பாய். பிரதி உபகாரம் இல்லாமல் உலகில்உதவி செய்வார் கிடைப்பது அரிது. அப்படியிருக்க யார் நமக்கு உதவி செய்வார்கள்? பணக்காரனுக்கு மண்டை வலி ஏற்பட்டாலும் பதறிப் போய் உதவ பலர் வருவர் ஏழை சாகக்கிடந்தாலும் யார் உதவ முன் வருவார்கள்என்று நினைத்து நீ நிலைதடுமாறுவாய். அந்த தருணத்தில் யார் உனக்கு உதவ முன்வருவார்களோ அவர்களிடம் சரண் புகுவாய். இது நானறிந்த உண்மை. ஆனல் நான் நேரடியாக உதவ முன் வந்தாலும் நீ ஏற்க மறுப்பாய். அதனல் மறைந்திருந்தேன். மறையவில்லை; மாறுவேஷத்திலிருந்தேன். என் நண்பன் மூலமாக என்னை முதலாளி என அறிமுகப் படுத்தினேன். நீயும் ஏமாந்தாய். என் வலையில் வீழ்ந்தாய். பின் நடந்தது நீ அறிந்ததே.

இரண்டாவது படி

இரண்டாவது உன் தந்தையைக் கொன்றேன். "கொலைகாரா! நீயா என் தந்தையைக் கொன்ருய்? நன்றி கெட்ட நாயே! ஈவிரக்கமற்ற பேயே! என்கிருயா?" ஆம்! உன் தந்தை எப்படி இறந்தார்? வெம் பசிக்கு இரையானரா? துடிக்கும வியாதிக்குப் பலியானரா? வெடிக்கும் என் உள்ளத்திலே வேதனையைமூட்டி விட்டுச் சென்று விட்டாரே என்று புலம்பினய். அது வல்ல அவர் இறந்ததற்குக் காரணம், ஏக்கம்தான் அவரை மீளாத தூக்கத்தில் ஆழ்த்தியது.

ஏக்கமா? அவருக்கு அப்படி என்ன திடீர் ஏக்கம்? எப்படி இது நடந்தது என்று அறியத் துடிக்கிருயா?

உன் தந்தையின் மரணத்திற்கு நான் காரணம் ஆனேன். ஆனல் காரியமாக வில்லை. இன்னும் விளங்

காத புதிராகத் தோன்றுகிறதா? இதோ கூறுகிறேன் கேள். கூறுவதைக் கேட்டவுடன் என்மேல்ஒரேயடியாக குற்றத்தைப் போடாதே! போடவும் முடியாது. நீதான் அதற்கு மூல காரணம். ஏன் திகைக்கிருய்? முதலாவது உன்னை அடையத்தானே அவர் மரணம் நேர்ந்தது. அதுமட்டுமல்ல இளவேனில்! அன்று நான் உன்னைப் பலவந்தப் படுத்தினேனே ஞாபகம் இருக்கிறதா? என் பலவந்தத்திற்கு நீ பணிந்திருந்தால், இப்பழி நேர்ந்திருக் குமா? நீயே சொல்?

அன்று! ஆம்! அன்றுதான் நீ என் வீட்டுச் சிறையில் கைதியாக இருந்தாயே அன்றுதான் நடந்த சம்பவம் இது. நீ என்னை மறுத்தாய் அல்லவா அதனுல் ஏற்பட்ட விளைவு இது.

நீ என்னை மறுத்தவுடன், நான் வெறிபிடித்த வேழம்போல் வெளியேறினேன். எதிரே என் நண்பன் வந்தான்.

"என்ன மாணிக்கம்? ஏன் இரத்த வெறி கொண்டவன் போல் நிற்கிருய்? ஏன் பித்தம் பிடித்து விட்டதா?" என்ருன்.

"இல்லை! என் காரியம் சித்தியடைய வில்லை. அந்தப் பச்சை கிளி என் இச்சையைப் போக்க மறுத்தது. செய்கிறதை செய் என்று கச்சை கட்டி நிற்கிறது. வழி ஏதாவது உண்டா?" என்றேன்.

"பூ! இவ்வளவு தானு? இவள் சம்மதிக்கா விட்டால் இவள் தந்தையை சம்மதிக்க வைக்கிறேன். இதோ பார்!" என்ருன்.

உன் தந்தையை நோக்கிச் சென்ருன். பாவம்! அந்த உருவம் வெறும் பிணம் போல் கிடந்தது. அவர் இவனைக் கண்டதும 'என்ன? இளவேனில் எங்கே? ஏன் இன்னும் வர வில்லை?" என்ருர்.

"ஐயா! நடக்காதது நடந்தது விட்டது." என்று கூறி கதறி அழுதான்.

"என்ன? கூறமாட்டீரா?" என்று கூறிக் கொண்டே உன் தந்தை கட்டிலில் அமர்ந்தார். ஆம்! சுருண்டு புழு போல் துடித்துக் கொண்டிருந்த அவர் எழுந்து உட்கார்ந்தார்.

"ஐயா! போகிற வழியில் உமது மகள் காரில் சிக்கி விபத்துக் குளளாகி விட்டாள்."

அவ்வளவுதான் தாமதம்! உன் தந்தை "ஐயோ! மகளே!" என்று அலறி எழுந்தார். கீழே விழுந்தார். மீண்டும் எழுந்திருக்கவே இல்லை.

அடப் படு பாவிகளே! என் தந்தையைக் கொன்று விட்டீர்களே! ஏன் அவ்வாறு பொய் சொல்ல வேண்டும்? நடக்காததை நடந்தது என்று ஏன் நவில வேண்டும்! என்கிருயா?

"இளவேனில் காரில் சிக்கி அதிக ஆபத்துக் குள் ளாயிருக்கிருள். அவளை என் முதலாளி ஆஸ்பத்திரியில் வைத்து இரட்சிப்பார். ஆனல் நான் சொன்ன நிபந் தனை செய்ய வேண்டும்" என்று சொன்னல், மகள் மேல் உள்ள மட்டற்ற அன்பால் நிபந்தனையை மறுக்க மாட்டார். மனமுவந்து ஏற்பார். நிபந்தனையை ஏற்று விட்டால்...நீதான் நான் வேண்டும் உதவி என்பேன்... இது எனது தோழன் முதல்மந்திரியின் திட்டம். ஆனல் நினைத்தது நடக்க வில்லை. ஏமாந்தோம்.

'கொலைக்காரா! கொலையை செய்து விட்டு ஏதேதோ கூறி குற்றத்தை மறைக்கப் பார்க்கிருயா? கொலையைக் கலை என்கிருயா?' என்று கேட்கிருயா? கேள்! நன்ருக கேள்! ஆனல் சிந்தித்துப்பார்த்துக் கேள்! சிந்தனை தான் நல்ல ஜீவநாடி! முடிவின் மறந்து விடாதே! கொலைக்குற் றத்தைமறைக்க வில்லை. மழுப்பவு மில்லை. அப்பழுக்கில் லாமல் எடுத்துரைக்கிறேன். ஆனல் அதற்கு முழு குற்ற வாளி நானு? என்றுதான் உன்னை சிந்தித்துப் பார்க்கச் சொல்லுகிறேன்.

மூன்றாவது படி

உன் தந்தை இறந்தால் தான் நான் உன்னை—கூண்டுக் கிளியாகிய உன்னை—சுதந்திரப் பறவையாக்கினேன். தெரிகிறதா என் கதையின் போக்கு, தந்தை இறந்தாலும் நீ என்னைத் தஞ்சமடைய மாட்டாய் இன்னும் உனக்கு ஊன்று கோல் இருக்கிறது—என்பது எனக்குத் தெரியும். அது தான் இனி நான் செய்த பெரிய துரோகம். இளவேனில்! இந்த இரகசியத்தை எளிதில் வெளியிடக் கூடாது. என் நெஞ்சிலே வெந்து சாம்பலாகட்டும். வெளியில் உனக்குத் தெரியவே கூடாது என்று தான் இருந்தேன். ஆனல் அது நெஞ்சிலே பெரும் பளுவாகத் தோன்றியது. அப் பளுவை சிறிது இந்த சுமைதாங்கி கல்லில்—ஆம்! இந்த இதழ் தான் சுமைதாங்கி கல்—இறக்கி வைக்க எண்ணினேன். அது மட்டு மல்ல; என் மனந்திரும்பினல் உன் வாழ்வு வளம் பெறுவதற்காக வெளியிடுகிறேன்.

உன்னிடம் சொல்லா விட்டால் என் நெஞ்சின் பாரம் நீங்காதே! உன் வாழ்வு வளம் பெறவழிதான் கிடையாதே! அது தான் இளங்கோ இறக்க வில்லை என்பது.

“சீ! மடையா! இது உனக்குத்தெரியாதா? இலங்கையிலிருந்து எனக்கு இன்பர்மேஷன் வந்து விட்டதே? இலங்கை ஆஸ்பத்திரியில் இருந்து எனக்கு அறிவித்து விட்டனரே. இது தெரியாமல் ஏன் உளறுகிருய்?” என்கிருயா?

“பைத்தியக்காரி! நான் ஏமாற வில்லை. நீதான் ஏமாந்து விட்டாய். இறக்காதவனை இறந்து விட்டதாக தீர்மானித்து விட்டாய். உன் இளங்கோ உயிரோடு இருக்கிருன். சிறிது காலத்திற்கு முன்னல் இங்கு கூட நான் அவனைக் கண்டேன். ஏன் திகைக்கிருய்? இந்த விபரம் முழுவதும் உனக்கு விந்தையாகத் தோன்றுகிறதா?

இதுதான் என் வாழ்வின் இரகசிய சுரங்கம். நீ அதன் ஆழம்பார்க்க இறங்கியிருப்பது மூன்றாவது படி. உனக்கு இன்னும் நம்பிக்கை விழவில்லையா? ஆனால் நீ கூட அவனைப் பார்த்திருக்கிறாய்! அவன் குரலை கேட்டிருக்கிறாய்!

"என்னபுதிர்? நான் கண்டேனா? அவர் குரல் கேட்டேனா? எங்கே? எப்போது? எவ்விடம்?" என்ற வினாக்கள் வெடிக்கின்றனவா உன் மனதில்? ஆத்திரம் துடிக்கின்றதா? ஆவல் பொங்கு கின்றதா? கேள்.

அன்று ஒரு நாள் நாம் கோலாலம்பூர் கடை வீதி வழியாக வந்து கொண்டிருந்தோம். நமக்கு எதிரே ஒரு பிளசரில் இளங்கோ வருவதுபோல் ஒருவன் வருவது நீ கண்டாய். கண்டு நீ இளங்கோ என்று கூவினாய். நான் கோபத்தால் உன்னை உதைத்தேன். நீ துடித்தாய். இப்போது தெரிகிறதா? எந்த சம்பவம் என்று மனதில் உதயமாகிறதா? மூளை அக்காட்சியை படம் பிடிக்கிறதா? அன்று இளங்கோ போல் தோன்றியது வேறு யாருமில்லை. சாட்சாத் இளங்கோவே தான்.

அன்று உன் கண்ணில் மண்ணைத் தூவினேன். அந்த மாசை இப்போது துடைக்கிறேன்.

"ஏன்? அவன் குரலை நான் கேட்டேனா? எங்கே? எப்போது? காலங் கடத்தாமல் சொல்?" என்கிறாயா?

நாமிருவரும் வாழ்க்கைப் பூங்காவில் சமுதாயத்தின் கண்களுக்கு முன்னால் நுழைந்தோமே!
அன்றுதான்! ஆம்! நமது திருமணம் நடந்ததே அன்றுதான் அவன் உன்னை அழைத்தான்.

உன்னை கோயிலுக்கு அழைத்துச் செல்லும்போது, கோயிலின் வாசற்படியில் நீ ஏறும்போது, "இளவேனில்!" என்று ஒரு குரல் கேட்டது. நீ திகைத்துப்போய் நின்றாய். திரும்பிப் பார்ப்பதற்குள் ஒருவரையும் காணவில்லை. அப்படித்தானே?

இளவேனில் என்று உன்னை அழைத்தது வேறு யாருமில்லை. சாட்சாத் இளங்கோதான். நீ திரும்பிபார்ப் பதற்குள் அங்கு நின்ற என் நண்பன் அவனை அப்பால் அகற்றிவிட்டான். "ஐயோ! என் காதலர் இறக்க வில் லையா? மரணம் அவரை மாய்க்கவில்லை. சாவு அவரை சந்திக்கவில்லையா? நான்தான் ஏமாந்துவிட்டேனா? அக் கடிதம் யாது? யார் எழுதியது? ஏன் எழுதியது? படு பாவி சொல்!" என்று உன் உள்ளம் துடிக்கிறதா? பத ருமல் கீழே வாசி!

உன் தந்தை இறந்தும் உன் காதலர் இறக்காவிட் டால் நீ என்னை ஏற்கமாட்டாய். இது உண்மைதானே? உன் நெஞ்சில் கைவைத்துச் சொல்? "ஆம்!" நீ கூறு விட்டாலும், உன் உதடுகள் முணுமுணுக்காவிட்டாலும், உன் மனசாட்சி "ஆம்!" என்றே எதிரொலிக்கும். இது எனக்கு நன்ருகத் தெரியும்.

ஆகவே உன்னை அடைவதற்காகவே அவ்விதம் நானே கடிதம் எழுதினேன்.

இளங்கோ நமது திருமணத்தன்று வருவதற்கும் காரணம் நானே. அவனுக்கும் நமது திருமண அழைப் பிதழை அனுப்பினேன்.

இதை வாசித்துக் கொண்டே இளவேனில் அழு தாள். "ஐயோ! அவர் இறந்துவிட்டார் என்று அல்லவா மதிமோசம் போனேன். அவர் என்னை வஞ்சகி! காத லனை கைவிட்ட காதகி! நம்பிக்கைத் துரோகி! நயவஞ் சகி! என்று வசவு மாலைகளைத் தானே வாரிவீசுவார். அவர் என்னை மன்னித்தாலும் மன்னிக்கா விட்டாலும், நான் அவரிடம் சென்று மன்னிப்பு கேட்கவேண்டும்" என்று புலம்பினுள்.

சுரங்கத்தின் சுனை!

கையிலிருந்த நோட்டில் திறந்திருந்த பக்கத்தின் கீழே "மறுபக்கம் பார்க்கவும்!" என்று எழுத்துக்களைக் கண்டாள். மறு பக்கம் புரட்டினுள்.

" இளவேனில்! உன் கண்களுக்கு என்றுஎழுதிய துடன் இதையும் சேர்த்துக்கொள். இவை இந்த இரக சிய சுரங்கத்திலுள்ள அறிவின் சுனை."

இளவேனில்! இப்பொழுது நீ என்னை ஒரு கொடிய மிருகமாக கருதலாம். வஞ்சகனே! துரோகியே, பெண் கண்ணிலே மண்ணைத் தூவிய எத்தனே என்று நீ என்னை ஏசலாம். ஆனல் அதற்கு நான் பழிகாரனு? அல்ல! குற்றவாளி அல்ல; துரோகி அல்ல என்றே வாதாடுவேன்.

வேந்தன் ஒருவன் வெஞ்சமர் புரிந்து ஒரு நாட்டை கைப்பற்ற திட்டம் தீட்டுகிருன். அவன் எதிரிகளின் பிண மலைமேல் ஏறிச்செல்கிருன். சூழ்ச்சிகளை விதைத் தவரை சிதறடிக்கிருன். எல்லாம் இலட்சியம் நிறைவே றவே. அவனை இந்த உலகம் "கொலைக்காரா! பழிகாரா! துரோகி! என்ரு தூற்றும்? அவன் வீரத்தை ஏற்றுமே அன்றி தூற்ருதே! அதைப்போல் நான் வீரப் போராட் டம் ஆடினேன். அதனல் உன் தந்தை பிணமானுர். உன் காதலனும் என் எழுத்துக்களால் பிணமாக்கப் பட்டார். உன்னை நான் அடைந்தேன். ஆகவே என் வீரத்தை ஏற்றவேண்டுமே தவிர, தூற்றக்கூடாது. ஆயிரம் கொலை நடந்தாலும் அரசன் குற்றவாளி அல்ல என்ற சமூகத்தில் நீதி நின்று நிலவும்வரை நானும் குற்றவாளி அல்ல என்றே வாதாடுவேன். நீ ஏற்றுக் கொண்டாலும் சரி!" ஏற்றிக் கொள்ளாவிட்டாலும் சரி! என் மனம் தந்த தீர்ப்பு இது.

ஆகவே நீ எனக்கு கண்டிப்பாக மன்னிப்பு தந்து தான் ஆகவேண்டும்.

இளவேனில் உன் காதல் பாதையிலே முதல் வில்லனுக முளைத்தது மதந்தானே. மதத்தின் நேரடியான

தாக்குதலிலே, உன் காதலன் வென்றுவிட்டான். ஆனல் அவன் அறிவானு அதன் மறைமுக தாக்குதலை? நீ அவனை சந்தித்தால் இதை தெரியப்படுத்து.

இளங்கோ வீட்டைவிட்டு தப்பிச்சென்றதும்,அவன் தந்தையின் ஆட்கள் நாலாபுறமும் தேடினுர்கள். காண வில்லை.

நான் பினங்கிலிருந்து திரும்பிவரும்போது சென்னை துறைமுகத்திலே ஒருவனை சந்தித்தேன். அவன்தான் என் நண்பன் முதல் மந்திரி. இளங்கோவின் தந்தை யிடம் அவன் உன்னிடமிருந்து இளங்கோவைப் பிரிப்ப தற்கு ஏராளமான பணம் பெற்றிருந்தான். அதனை அறிந்தேன். அவன் குடும்பங்களைக் குலைப்பதில் சகுனியைவிடச் சிறந்தவன். நீ என் உரிமை, நான் உன்னை எவ்விதத்திலும் அடையவேண்டும் என்றேன். நீ அவளை அடைந்தால் என் காரியமும் வெற்றி பெறும், நான் உனக்கு என்ன உதவியும் எப்பொழுதும் செய்யத் தயார் என்ருன். அவனைத்தான் எனக்கு யோசனை கூற முதல் மந்திரியாக நியமித்தேன். அவனும் வெற்றி பெற் ருன். மதமும் வெற்றி பெற்றது. இளங்கோவின் தந்தை யும் வெற்றிபெற்ருர். நானும் வெற்றி பெற்றேன்.

இளவேனில், இனியாவது புரிந்து கொள். வாழ்க் கையிலே காதல் ஒரு மின்னல்தான். எந்த இருண்ட நெஞ்சிலும் - காதலை வெறுக்கும் மனதிலும் - ஊடுருவி பாய்ந்துவிடும். ஆனல் மின்னல் எவ்விதம் நிலையற்று மறைந்துவிடுகிறதோ அதுபோல காதலும் கைகூடாமல் மறைந்துவிடும். ஆம்! ஜாதி பேதம் மதப்பேய், சமூக ஏற்றத்தாழ்வுகள், நின்று நிலவும்வரை காதல் தூண்டா விளக்கல்ல; தோன்றி மறையும் மின்னல்தான்!

இளவேனில்! நான் என் வாழ்விலே கண்டெடுத்த உண்மை இது! மனமில்லாதவர்கள் ஒருவரை ஒருவர் மணந்தால், அவர்கள் வாழ்வில் இன்பமும் ஒரு மின்னல் தான். ஆம்! இரு மேகங்கள் ஒன்ருேடு ஒன்று சேரும் போது மின்னல் எப்படி உண்டாகிறதோ, அதுபோல்

இரு மனங்களும் ஒன்றுபட்ட சமயங்களில்தான் இன்பம் சுரக்கும். அந்த இன்பமும் மின்னல்போல்தான் நிலையற்றது.

இதுபோலவே ஏழை ஒருத்தி பணக்காரனை மணந்தால் அவள் வாழ்வில் இன்பம் மேற்கூறியபடி மின்னல்தான்.

அதுமட்டுமல்ல; ஏழை வாழ்விலே இன்பமும் ஒரு மின்னலே. வழிதவறி திரிபவனுக்கு மின்னல் தோன்றினால் மகிழ்ச்சி தோன்றும், நேர் வழியே நடப்பான். மின்னல் விரைவில் மறைந்துவிடும். அது போலவே ஏழை வாழ்விலே இன்பமும் சிறிது காலத்திற்குள் மறைந்து விடும். மின்னல் ஒளியால் நல்ல வழியே நடக்க ஆரப்பித்தவனும், மீண்டும் இருளில் சேரும் சகதியும் நிறைந்த வழியேதான் செல்வான். அதுபோலவே ஏழையும்!

மேற்கூறிய இரண்டு மின்னல்களும் என் சூழ்நிலை எனக்கு அறிவுறுத்திய உண்மைகள்.

நீ எனக்கு அறிவுறுத்தியபடி ஒன்றை நாம் எவ்வளவு முயற்சி கொண்டு மறந்தாலும், இருண்ட வானிலே மின்னல் தோன்றுவதை எப்படி தடுக்க முடியாதோ, அதுபோலவே அந்த பொருளும் தோன்றிவிடும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

என் அனுபவ உண்மை இது! எந்த இருண்ட வானிலும் மின்னல் ஒளி வீசுவதுபோல், எந்த துர்க்குணமாகிய இருள் நிறைந்தவன் மனத்திலும் நற்குணமாகிய ஒளி திடீர் திடீரென தோன்றும்.

வழிக்கு ஒளி!

இளவேனில்! கலங்காதே! உன் காதலன் உன் மீது கோபமாக இருப்பான். பழிக்குப் பழிவாங்கத் துடிப்பான் என்று பதறாதே. நானே அவனுக்கு சமாதானம் கூறிவிட்டேன். ஆம்! அவனை நான் போனவாரம் சந்

தித்து, ஒரு கடிதம்கொடுத்து, உன்மேல் அவன் கொண்டுள்ள தப்பெண்ணத்தை துடைத்து விட்டேன். அந்த கடிதமே உன் வருங்கால இன்ப வாழ்விற்கு வழியைக் காணும் ஒளி! அந்த ஒளியின் சிதறல்கள் சிலவற்றை சேகரித்து தருகிறேன். வாசி!

அன்பான இளங்கோவுக்கு,

இளங்கோ! காதல் ஏமாற்றத்தினல் கயஸ் போல் இருக்கிறாய். உன்னை வஞ்சித்த வஞ்சகியை பழிக்குப் பழிவாங்கத் துடித்து நிற்கிறாய் நீ? மதவெறியை வென்று மனதுக்கினியாளை மணக்கலாம் என்று மனப்பால் குடித்தாய். ஆனல்......?

தோல்வியே கண்டாய். ஆம்! தோல்வியே அன்றி சமூகத்திலுள்ள மேடு பள்ளங்கள் சமமாக ஆகும்வரை வெற்றியே காணமுடியாது. ஆகவே சமூகத்தின் மேடு பள்ளங்கள் நிரம்பும்வரை காதலே வேண்டாம் என்று உபதேசிக்க வேண்டிய நீ காதலித்தாய். கடைசியில் ஏமாந்தாய். சமூகம் உன்னைக் கண்டு எள்ளி நகையாடியது.

ஏன் இதை கூறுகிறேன் தெரியுமா? நீ உன் காதலி உன்னை தனியாக தவிக்க விட்டுச் சென்று விட்டாள் என்று எரிந்துகொண்டிருக்கிறாய்! ஆம்! குமுறும் எரிமலை போல் உள்ளது உன் உள்ளம். காதலியைக் கண்டால் கனலை கக்கி அவளைப் பொசுகிக் விட எண்ணுகிறது அந்த எரிமலை. ஆனல் உன் இன்ப வல்லி உனக்குத் துரோகம் செய்யவில்லை என்றே நான் கூறுவேன்.

நீ யாரடா? அவளுக்கு வக்கீலா? ஏன் இந்த வக்காலத்து? எனலாம் நீ! ஆனல் நான் கூறுவதை கவனமாக கேள்! பின் தீர்ப்பு கூறு!

உன் காதலி வஞ்சிக்கவுமில்லை; வஞ்சிக்க நினைக்கவுமில்லை; ஆனல் வஞ்சிக்கும்படி செய்யப்பட்டாள்.

அவள் உன்னை வஞ்சிக்க செய்ததுதான் நான். அவளின் கணவன்.

நீ என்மீது கோபப்படலாம்; காதலை கத்தரித்த காதகனே என்று ஏசலாம். ஆனால் அவள் எனக்கு உரிமை பெண்! இளங்கோ! என் உரிமையை நீ பறிக்க வந்தாய் காதலிக்கிறேன் என்றாய்! நான் உன்னை எதிர்த்து போராடினேன். அவளையும் ஏமாற்றினேன். எளிதில் எனக்கு வெற்றி கிட்டியது இது என் குற்றமா? இல்லை! காகத்தின் குஞ்சுகளை கழுகு கொத்த வந்தால் காகம் அதனை விரட்டி அடித்து தன் உரிமையை காக்கிறதே, அது காகத்தின் குற்றமா? இது போலவே என் நிலையும். சிந்தித்து பதில் கூறு.

நான் அவளை எப்படி அடைந்தேன் என்பதை என் இரகசிய சுரங்கத்திலிருந்து பெயர்த்தெடுத்து ஒரு குறிப்பை இதனுடன் அனுப்புகிறேன். அதை வாசித்துவிட்டு யார்மீது குற்றம் என்பதை தீர்மானித்துக் கொள்!

இளங்கோ! மனமொத்தவர்கள் மணந்தால் தான் இன்பமாக வாழலாம். மனமின்றி மணந்தால் சச்சரவு தான் சதாகாலமும். இது என் வாழ்வின் கதையிலே கண்டெடுத்த கருத்துக் கருவூலம். இப்பொழுதுதான் நான் என் குற்றத்தை உணர்கிறேன். மனமில்லாத மங்கையை விரும்பியது மடமை என்று எண்ணுகிறேன்.

இளங்கோ! நான் அவளை அடைய செய்த முயற்சிகள் கூட குற்றமாக தோன்றவில்லை. அதனால் நேரிட்ட கோர கொலைகூட குற்றமாக நான் கருதவில்லை. ஆனால் மனமில்லாதவளோடு இன்னமும் வாழ்வதுதான் பிடிக்கவில்லை!

ஒரு நாட்டைக் கைப்பற்றும் போது, அரசன் பிணக்குவியலைத் தாண்டித்தான் சிம்மாசனம் அடைகி

ருன். பிணக்குவியலைத் தாண்டியது அவன் குற்ற மில்லை. அது போல் தான் நானும்! ஆனல் குடிகள் மன்னனை விரும்பாவிட்டால், அவன் சிம்மாசனத்தை துறப்பதுதான் ஒழுங்கு; நீதியுங் கூட. அது போலவே நான் என் மனைவியோடு வாழ்வதை பெருங் குற்றமாக கருதுகிறேன். ஆகவே அவனை நான் துறக்கப்போகி றேன். இன்னும் சில தினங்களில் நான்.........அதன் பிறகு விதவையாகும் இளவேனில் கதி......?

இந்தக் கடிதமே அவள் வருங்கால வாழ்வை வளப் படுத்தும் வழியைக் காணும் ஒளியாக விளங்கட்டும் என் பதற்காகவே எழுதுகிறேன்.

விதவை மணத்தை ஆதரிப்பவன்தானே நீயும்? நீ அவளை எப்படியும் ஏற்றுக்கொள்வாயா? இதற்கா கவே இதனை எழுதுகிறேன். என் பழங்கால வாழ்வைப் போல் பாசி படர்ந்துள்ள சமூகம் புதுமை வாழ்வு நடத்த விரும்பும் என்னைப்போல் பரிசுத்தமாக வேண்டும் என் பதற்காகவே உன்னையும் அவளையும் கூட்டுவிக்கிறேன். இதை நீ ஏற்பாயா? என் வேண்டுகோளை நிராகரிப் பாயா? அல்லது நிறைவேற்றுவாயா? உடன் பதில் எழுது.

என் மனைவிக்கு நான் கொடூரமானவனுகவே வாழ்ந்தேன். அப்படியே கொடூரமானவனுகவே சாகி றேன். ஆனல் நான் என் மனதை மாற்றிக்கொண்டது கூட அவள் அறியாள். துன்பக் கடலில் நீந்தும் அவளை, இன்பக் கரை சேர்ப்பாய்!

இப்படிக்கு,

புது உலகம் காணத் துடிக்கும்

மாணிக்கம்

0 0 0

"ஆம்! இந்த கடிதம் வழியைக் காணும் ஒளிதான். அது மட்டுமா? உங்கள் மீது நான்கொண்ட தீய கருத்தாகிய இருளை அகற்றும் ஒளியாயிற்று. ஆம்! உங்களை நான் இதுவரை துரோகி, வஞ்சகன், எத்தன், கொலைகாரன் என்ற பட்டங்கள் சூட்டினேன். பலவகையாக பழித்தேன். இப்பொழுதுதான் தெரிகிறது உங்கள் நோக்கம். நீங்கள்தான் தெய்வம்! துரோகி அல்ல நீங்கள்; புரட்சி தொண்டர்! வஞ்சகரல்ல நீங்கள்; வாழ்விழந்து தவிக்கும் விதவைகளுக்கு வாழ்வளிக்க விரும்பும் வள்ளல்! கொலைகாரரல்ல நீங்கள்; கொல்லும் விஷத்தை கக்கும் சமூகத்திற்கு ஓர் சவுக்கு." என கண்ணீர் உகுத்துக்கொண்டே அவனை—மாணிக்கத்தை—போற்றினாள்.

வழிகாட்டி

இளவேனில் கரங்கள் மறுபக்கத்தையும் திருப்பியது. ஆச்சரியத்தால் அவள் கண்கள் அகல விரிந்தன. களிப்பால் அவள் உள்ளம் துள்ளிக் குதித்தது. ஒரு கடிதம்......ஆம்! அவள் ஆசை காதலன் கடிதம் அதில் ஒட்டப்பட்டிருந்தது. பூரிப்பு மிகுதியால் அவள் மனம் அதனை வாசிக்க மறுத்தது.

சிங்கப்பூர்,

5—6—52

அன்பான அண்ணா, மாணிக்கத்திற்கு,

உங்கள் கடிதம் பெற்றேன். கடிதமல்ல அது. என் கவலையை—குரோதத்தை போக்க வந்த மருந்து. 'பழிக்குப் பழி!" என்ற குரோத எண்ணத்தை குழி தோண்டி புதைத்த அறிவின் ஆயுதம்.

இளவேனிலை நான் மன்னித்து விட்டேன். கொதித்து 'ப்யூஜியாமா' போல் குமுறிகொண்டிருந்த

என் மனம், கோடைக்கனல் குளிர்போ லாயிற்று. மனப்பூர்வமாக மன்னித்துவிட்டேன் என் மாணிக் கத்தை.

ஆனல், அதற்காக நீங்கள் இறக்கவோ தற்கொலை செய்யவோ வேண்டாம். இளவேனிலுடன் இன்பமாக வாழுங்கள். சமூக சாக்கடைக்கு, சந்தனத்தை தெளித் தால் போதும், சாவை சந்திக்கவேண்டாம்.

ஆனல் வாழ்விழந்து அவள் வாடி வதங்கும்போது அவளுக்கு வாழ்வளிப்பேன். இது உறுதி.

மலேயாவுக்கு நான் வந்த காரியம் நிறைவேறி விட் டது. ஆகவே இன்னும் ஒரு வாரத்தில் இந்தியா செல் லப் போகிறேன். வருகிறேன்!

வணக்கம்!

இப்படிக்கு

என்றுமுங்கள் அன்பு மறவாத

இளங்கோ.

கடிதம் அவள் வேட்கையை தணிக்கும் ஜீவ நீராயிற்று. ஆம்! வருங்கால இன்ப வாழ்வுக்கு செல் லும வழி இதுதான் என்பதை உறுதி கூறும் வ ழி கா ட் டி அந்த கடிதம். வழிதான் இளங்கோ வுடன் இன்ப வாழ்வு!

0 0 0

மாணிக்கத்துடன் வாழ்விழந்து வாடிய அவள் வருங்கால இன்பவாழ்வு பூத்துவிட்டது. இருளில் கிடந் தவளுக்கு ஒளி தோன்றியது. 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்றது அவள் மனம்.

இந்தியாவிற்கு மறுநாள் புறப்பட்ட கப்பலில் புறப்பட்டாள். மூன்ருவது வகுப்பு டிக்கட் அவளுக்கு. கப்பலின் அடித்தளத்திலே நின்றுகொண்டிருந்தாள்.

அவள் மனம் பருந்து போல் வருங்கால வாழ்வைப் பற்றியே வட்ட மிட்டுப் பறந்து கொண்டிருந்தது. 'வாழ் விலே இது வரை அடித்த புயல் நீங்கி விட்டது. இனி அமைதி! துன்பம் பறந்து விட்டது. இனி இன்பம்! இந் தியா செல்வேன். என் ஆசைக் காதலனைச் காண்பேன். அவரையே மணப்பேன். என் வாழ்வு மலரும். ஆம்! வாழ்வின் புயல்தான் அகன்று விட்டதே! இது அவள் மனக்கோட்டைகள்.

"இனி என்றும் இன்பம் தான்! இன்பந்தான்." என்ற இசையை அவள் உதடுகள் முணுமுணுத்தது.

---

29. காயமும் கனிவும்

இளவேனிலை விட்டுச் சென்ற இளங்கோ இலங்கை யடைந்தான். பாடுபட்டான். பணம் சேர்த்தான். இள வேனிலுக்கு கடிதம் போட்டான். பதிலும் வந்தது. இன் பங் கொண்டான். திடீரென அவனுக்கு ஜுரம் வந்தது; ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டான். வெகு நாட்க ளாக இளவேனிலுக்கு பதில் போடவில்லை. சுகமடைந்த தும், தன் அறைக்கு வந்தான். அங்கு ஒரு திருமண அழைப்பிதழ் அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டிருந் தது, அதனை எடுத்து வாசித்தான். அவ்வளவு தான் தாமதம். அவள் முகம் கருத்தது. கோபத்தால் அவன் முகம் விகார மாயிற்று.

ஆம்! மாணிக்கம் இளவேனில் திருமண அழைப்பி தழ் அது.

"இளவேனில்! எவ்வளவு நெஞ்சத்துணிவு உனக்கு? காதலித்த என் மனத்தில் கவலைவாரி யிறைத்த காதகியே! நேசித்த என் நெஞ்சினைப் பிளந்த நீலியே

இதுதானு உன் காதல்? காதல், காதல் என்று கூறி ஞயே யாவும் பொய்தானு? வஞ்சகியே! ஆசைக் கனலை என் நெஞ்சிலே எழுப்பி விட்டு, என்னை தனியாக விட்டுச் சென்ற ஆலகால விஷமே! காதற் கொழுந்தென்றல்லவா உன்னை நினைத்தேன். காமக் குளம் என்று கருத வில்லையே. நல்ல பாம்பினும் கொடியவளே! உனக்காக அல்லவா என் இலட்சியத்தை துறந்தேன். உன்னை அடைவதற்காக அல்லவா என் வீட்டை விட்டு வெளியேறினேன். கஷ்டப் பட்டு தவித்த போது கை கொடுத்து காப்பாற்றினேன். உன்னை மணக்கத்தானே நான் மண்டை நோக பாடுபட்டேன். இது கூடவா உனக்குத் தெரியாதா? செய் நன்றி கொன்றவளே! நம்பி கிடந்த என்னை நட்டாற்றில் தவிக்க விட்ட நாசகாரி! விரும்பிய என்னைவிட்டுப் பிரிந்த விஷத்தாடகமே! உன்னை விட்டேனுபார்! முடியாது! உன்னை இனி உயிரோடு விட முடியாது. வருவேன். வந்து பழிக்குப் பழி வாங்குவேன். உன் கணவனை நீ முத்த மிடுவதற்குள். சாவை முத்த மிடச் செய்வேன்." என்று வெறி பிடித்த வன் போல் அலறினுன்.

கலியாண தினத்தன்று வள்ளியூரே வந்து விட்டான். அவளைக் கொல்ல வேண்டும் என்று காயம் கொண்டான். கோயிலின் வாசலில் இளவேனில் மணக் கோலத்திலே ஏறுவதைக் கண்டான். "இளவேனில்!" என்று அலறினுன். அதற்குள் சில முரடர்கள் அவனை அடித்து துரத்தி விட்டார்கள்.

வள்ளியூர் குளத்தங் கரையிலே ஒரு மரத்தடியில் வந்து அமர்ந்தான். நீர் தேங்கி நிற்கும் அக்குளம் வறண்டு கிடந்தது. என் வாழ்வும் இது போல் வறண்டு தான் விட்டது என்றது அவன் உள்ளம். ஒரு வயது முதிர்ந்தவர் அங்கு வந்தார்.

"ஐயா! இங்கு யாருக்கு கலியாணம்?"

"தம்பி! ஏதோ ஒரு பெண்ணு பாவம்! அது! அந்த பய மாணிக்கத்தை—அவன் தான் அவள் மாமன்—முரடன். அவனை கலியாணம் செய்ய மாட்டேன் என்றது விடாப் பிடியாக பிடித்தது பாருங்க. எப்படியோ மை போட்டு மயக்கிட்டான். இப்ப அவனுக்கும் அவளுக்கும் கலியாணம்."

அவன் உள்ளூரச் சிரித்துக் கொண்டான், அவன் அறியாமையை குறித்து. மூடசமூகம் மைபோட்டு மயக்கலாம் என்று இன்னமும் நம்புகிறதே என்று அவன் பகுத்தறிவுச் சிரித்தது.

அவன் மனத்திலோ பெரும் போராட்டம் நிகழ்ந்தது. இளவேனிலை பழிவாங்கலாமா? கூடாதா என்று.

"பழிகாரி! உன்னை ஏமாற்றி விட்டாள். செய் நன்றி கொன்றவளை விடாதே."

"இளங்கோ! நீயும் அவளைப் போல் புத்தி தடுமாருதே, அவள் உன்னை ஏமாற்றி விட்டாள் என்றாலும் நீ பெரிய சீர் திருத்த வாதி யாயிற்றே! அவளை மன்னிக்க கூடாதா?"

"முடியாது! என் வாழ்வின் இலட்சியத்தையே அழித்து விட்டாள். அவளை வாழ விடக் கூடாது. அவளை கொலை செய்!"

"கொலை செய்தால் நீ தப்புவிக்க முடியுமா? நீயும் தூக்கு மரத்தில் தொங்க நேரிடும்."

"தூக்கு மேடைக்குப் போகத் தயார்! இளவேனிலை இழந்து என் வாழ்வு எதற்கு?"

"சிந்தித்துப் பார்! காதல் வெறியில் உளருதே! உன் வாலிப இலட்சியத்தை மறந்து விட்டாயா?"

"மறக்க வில்லை! ஆம்! பழிவாங்க வேண்டாம். என் இளமை இலட்சியம்! இன்பத் திராவிடத்தின் விடுதலை. அதற்காகப் போரிடு! போ!"

"எங்கு செல்வேன்?"

"போ! உன் தந்தை வீட்டிற்கு வக்கீல் வேலைக்குப் படி! மலேயாவில் கயிற்றில் தொங்கும் கணபதிகளை மீட்டு இரட்சி! போ!"

"ஆம்! அதுதான் சரி!"

மனப் போராட்டம் முடிந்தது. வீட்டிற்கு வந்தான் வக்கீல் வேலைக்குப் படித்தான். படித்து முடித்ததும், "மலேயாவில் கையில்துப்பாக்கி வைத்தமைக்காக இன்னொருவருக்குத் தூக்குத் தண்டனை" என்று தின இதழ்களில் படித்தான். அவன்உணர்ச்சி உத்வேகம் கொண்டது. "பாடுபடும் பாட்டாளிகளின் உழைப்பை மென்று தின்று மெருகேற்றிக் கொண்டு ஏழைகளை வாட்டி வதைக்கும் மலேயாவே உனக்குத் தகுந்த பாடம் கற்பிக்கிறேன் பார்!" என்று உறுமினான். மலேயாவுக்குப் புறப்பட்டான்.

மலேயாவில் இளவேனில் இருப்பதை அறிந்தான் இளங்கோ. கோலாலம்பூரில் அவள் இருக்கும் இடத்தைக் காணச் சென்றான். அவ்விதம் அவளைத் தேடித் திரியும் பொழுதுதான் இளவேனில் ஒரு நாள் இளங்கோவைக் கண்டாள். மற்றொரு நாள் மாணிக்கத்தைச் சந்தித்தான். அவன் மறுநாள் அவனிடம் ஒரு கடிதத்தைச் சேர்ப்பித்தான்.

கடிதம் நாம் மேலே தந்திருப்பதுதான். கடிதத்தைக் கண்டதும் கண்கலங்கினான். இளவேனில் மீது அவன் கொண்ட கோபம் தணிந்தது. காயம் கனிவாக மாறியது. ஆத்திரம் அன்பாகக் கனிந்தது. மறுநாள் அதற்குப் பதில் அனுப்பினான்.

அவன் வந்த கேஸிலும் வெற்றிமாலை சூடினான். வாயைப் பிளந்து கொண்டிருந்த தூக்கு மேடை நின்று ஓர் வாழ்விழந்த திராவிடனை மீட்டு இரட்சித்தான் நாடு திரும்பினான்.

30. மின்னல்

மேற்கூறிய எல்லாம் அவன் மனத்திரையில் மள மளவென்று ஓடி மறைந்தது.

ஆம்! இளவேனில் செல்லும் கப்பலில் மேல்தளத்தில் நின்று நடந்தகால நிகழ்ச்சியைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தான் இளங்கோ. ஆனல் அடித்தளத்திலே இளவேனில் சிந்தித்துக் கொண்டிருந்தாள் தன வருங்கால வாழ்வைக் குறித்து. இளங்கோ முதல் வகுப்பு டிக்கெட் எடுத்திருந்தான். அதனல் ஒருவரோடு ஒருவர் சந்திக்க வில்லை. அவனும் இளவேனில் வாழ்விழந்து வந்தால் வாழ்வளிக்கலாம் என்று கூறினன்.

ஒளியே எங்கும். ஆனல் இருள் அதனை துரத்தியடிக்க ஆரம்பித்தது. தன் ஆட்சியை விரைவில் பரப்பியது. எங்கும் காரிருள் கப்பிக் கொண்டது. அமாவாசை அன்று. அந்த இருளையும் துளைத்துக் கொண்டு கப்பல் தன் வழியே சென்று கொண்டிருந்தது.

நடுநிசி! வானவெளியே களங்கமில்லாமல் வெறுமையாக கிடந்தது. போருக்கு முன் போர்க்களம் எப்படி அமைதியும், வெறுமையுமாக கிடக்குமோ அதுபோல் வான வெளி தோன்றியது. வெறுமையாக வெகுகாலம் ஓர் போர்க்களம் காட்சியளிக்கமுடியுமா? வீரர்கள்விரைவில் அங்கு தோன்றியே தீரவேண்டும்.

ஆம்! அந்த வெறுமையைக் குலைக்க, வான வெளியை நோக்கி வீரர்கள் இரு திசையிலிருந்தும் புறப்பட்டுவர ஆரம்பித்தனர். வெண்ணிற மேகங்கள் தான் அவை. போருக்குச் செல்லும் வீரர்கள்போல் அந்த மேக வீரர்கள் கடலென திரண்டனர். கீழ் திசையிலிருந்து ஓர் படையும் மேல் திசையிலிருந்து ஓர் படையும் கிளம்பலாயிற்று. அணி அணியாகச் செல்லும் படை

வீரர்கள் போல், அவை ஒன்றின் பின் ஒன்ருக வரும் அலைபோல், அலை அலையாக திரண்டு எழுந்தனர். பெரிய யுத்தக் களத்திற்குச் செல்லும் படைகள் போல். இரு மருங்கினின்றும் அவை உச்சிவானை நோக்கி பவனிவர ஆரம்பித்தது. அந்த உச்சிவானந்தான் போர்க்களமாகத் திகழ வேண்டும் என்பது அவைகள் முடிவு போலும்.

ஒவ்வொரு திசையிலிருந்து வரும் மேகப் படைகள், மற்ற எதிரி படைகளைக் காண, காண மூர்க்கமாகியது. கோபம் அவைகளின் மேனியெங்கும் கொந்தளிக்கத் தொடங்கியது போல் அவைகள்—அந்த வெண்ணிறப் புரவிகள்—கருக்கத் தொடங்கியது. உச்சியை அடைய அடைய அவற்றின் கருமை அதிகரித்தது. அந்தக் கருமை நிறமேகங்கள் வானிலிருந்து சிறிது தோன்றிய விண்மீனின் ஒளியையும் மறைத்தது. அது கப்பலை சூழ்ந்திருந்த கருமைக்கு, இன்னும் கருப்பு வர்ணம் பூசுவது போலாயிற்று. ஒருவர் அருகில் ஒருவர் நின்ருல் கூட எதிரில் நிற்பது யார் என்று கூட காண முடியாத அளவுக்கு இருள் சூழ்ந்தது.

போராட்டம் தொடங்கி விட்டது அவ்விரு படைகளுக்குமிடையே. ஆம்! ஆம்!! அவ்விரு சைனியங்களும் உச்சி வானிலே மோத ஆரம்பித்து விட்டன. வெடி சத்தங்கள் வானைப் பிளந்தன. ஆம்! இடியோசையின் சங்கநாத முழக்கமே எங்கும். வெடிகள் வெடித்தால் பெரிய நெருப்புப் பந்தங்கள் தோன்றி, தோன்றி மறைய ஆரப்பித்தன. ஆம்! இடியால் ஏற்பட்டமின்னல் "பளிச் பளிச்" என்று மின்னி, மின்னி கண்ணைப் பறித்தது.

அவைகளின் போராட்டம் மேன்மேலும் வலுக்கத் தொடங்கியது. பயங்கர வெடிகளும், பெரிய ஒளிகளுமே வானை ஒரு பெரிய போர்களமாக காட்டிற்று. ஓயாத போராட்டம் நடந்து கொண்டே இருந்தது.

வானிலே நடக்கும் யுத்தத்தைக் கண்டு கடல் நடுங்கியது போலும். ஆம்! இடியோசைக் கேட்டு நடுங்கும் நாகம்போல் கடல் அஞ்சி ஒடுங்கிற்று. அமைதியே குடி கொண்டது. கடல் தன்மீது எதிரி எவரும் படையெடுத்து விடக் கூடாதென்று தன் சைனியத்தை போருக்குத் தயாராக்கிக் கொண்டு இருந்தது.

இதற்கிடையே கப்பல் இவைகளைப் பொருட்படுத்தாமல் தன் இச்சைப்படியே கடலைக் கிழித்துக் கொண்டு சென்றது. இளங்கோ வானிலே நடக்கும் போராட்டத்தைத் தன் மனமாகிய காமிராவில் படம் பிடித்துக் கொண்டிருந்தான். கடலின் மோகன அமைதியும் வானிலையும் கப்பலை ஓட்டும் மாலுமிகளுக்கு அச்சத்தை அளித்தது. இளவேனில் மனமோ வானிலே நடக்கும் போராட்டத்தைக் கண்டு, "இது போல் தான் என் வாழ்விலும் போராட்டம் நடந்தது. மனம் தான் ஒரு போர்களமாயிற்று. காதல் நேச படையாகவும், சமூகம் அதற்கு எதிரியாகவும் அவள் மனத்திலே போரைத் தொடங்கியது. முதலில் வெற்றிமாலையை சமூகம் சூட நினைத்தாலும், பின் என் காதலே வெற்றி மாலை சூடப் போகிறது" என்று எண்ணியது. இளங்கோவோ சமூகத்தை எதிர்த்து வெற்றி பெற்றால், வெற்றி பரிசாகிய இளவேனிலை நான் கண்டிப்பாக சூட்டிக் கொள்வேன் என்றான்.

நடுங்கிய கடலை எதிர்த்து ஒரு வீரோதி கிளம்பி விட்டான். ஆம்! அவன் தான் அமைதிக்கு அரக்கன். புயல் என்பவன். அமைதியான கடலை நோக்கி போர் தொடுக்க புறப்பட்டு விட்டது. அதைக் கண்டு. போர் வீரர்களை தயாரித்துக் கொண்டிருந்த கடல் சீறிற்று. கொந்தளித்து எழும்பிற்று. தன் படைகளாகிய அலைகளை மலைமலையாக புயலோடு மோதச் செய்தது. அலை மலைபோல் எழும்பியும் புயலை எதிர்த்து நிற்க இயலாமல்

பின் நோக்கி ஓடியது. கடும்போர் கடலுக்கும் காற்றுக்கும் கீழே; மேகங்களுக்கு கடும்போர்மேலே.

கடல் அலைகள் கப்பலை தனக்குரிய குண்டாக கருதித் தூக்கி எறிந்தது. கப்பலோ நான் யுத்தகளத்தை பார்வையிட வந்துள்ள ஒரு நிருபன் என்று கூறி அங்கும் இங்கும் ஒதுக்கிடம் தேடி அலைந்தது. ஆனல் அலையோ அதனை விட்ட பாடில்லை. ஒதுக்கிடம் கிடையாது நிருபன் திண்டாடினன் தத்தளித்துக் கொண்டிருந்தான். இதனை நிருபனின் ஒரு பெரிய வீரோடி கண்டு விட்டான். அவ்வளவுதான்! எதிரியை தாக்க வீசப்படும் குண்டின் கதி கப்பலுக்கு. ஆம்! நிருபனுகிய கப்பல் பாறை என்ற விரோதிக்கு பலியாகியது. தூள் தூளாக சிதறியது.

பிரயாணிகளின் கூக்குரல் விண்ணை அதிரச் செய்தது. இளங்கோவும் இளவேனிலும் கதறினர். "ஐயோ! அப்பா!" என்று சிலர் அலறினர். "அட! கடவுளே!" என்று சில பக்தர்கள் கதறினர். இந்தக் கோரக் காட்சியைக் கண்டு புயலும் அலையும் சிறிதும் இரக்கம் கொள்ளவில்லை. மாருக, அலை கப்பலை சிதள் சிதளாக பிரித்து தனக்கு உரிய ஆயுதமாக்கிக் கொண்டு காற்றை நோக்கி வீசியது. அந்த துண்டாக சிதறிய கட்டைகளில் பலர் மிதந்தனர். கடலும் அலையும் தங்கள் போரை தீர்த்த பாடில்லை.

சர்வின் இருள் அங்கு அணுக்குண்டு வெடித்தால் ஏற்படும் ஒரே கூக்குரல் அங்கு இளங்கோ மேல தட்டிலுள்ள ஓர் கட்டை பிடித்துக் கொண்டு மிதந்தான். என்ன நடக்கிறது? யார்யார் மிதக்கிறர்கள்? என்று கூட பார்க்க இயலவில்லை. கட்டையை இறுக பற்றிக் கொண்டு கிடந்தான். அவனுக்கு முன் அவன் எண்ணங்கள் "இளவேனிலை விட்டு விட்டு. மாணிக்கம என்னை நம்பி இறந்து விட்டால்...... இளவேனிலைக் காப்பாற்ற முடியாதே." என்று வருந்தியது. அவனுக்கு ஏற்படப்

போகும் சாவு கூட அவனுக்கு வருத்தத்தை அளிக்க வில்லை. ஆனல் இளவேனில் விதவையானல்......வாழ் விழந்து தவிப்பாளே என்ற வருத்தமே நெஞ்சி ல பெரும் பாரமாகத் தோன்றியது.

திடீரென்று இன்னெரு உருவம் அவன் பிடித்தி ருந்த கட்டையைப் பற்றியது. யார் என்று பார்க்க அறிய அவன் உள்ளம் விழைந்தது. ஆனல் யார் என்று அறிய இயலாத காரிருள். யார் என்று கேட்கலாம் என்று நினைத்தாலோ அங்கு வானத்திலே முழங்கும் சத்தமும், அலைகளில் இரைச்சலும் பக்கத்திலிருந்த வரிடமும் பேசினல் என்ன பேசுகிருர் என்பது மற்ற வருக்கு விளங்காது.

இந்நிலையில், வானத்திலே நிகழ்ந்த போர் இறுதி கட்டம் அடைந்தது. போர்வீரர்களின் பலருக்கு பெருங் காயம் ஏற்பட்டு அவற்றினின்று இரத்தம் பூமியை நோக்கி ஆறுகப் பொழிந்தது. ஆம்! மேகத் தினின்று மழை பொழிய ஆரம்பித்தது. கடலிலே நடக்கும் கோரக் காட்சியை நோக்கி மேகம் கண்ணீர் வடிப்பது போல் தோன்றியது. அக்காட்சி! கொட்டும் மழையைக் கண்டு குளிர் படையெடுக்க ஆரம்பித்து விட்டது. கடுங்குளிர் கடலிலே.

கடுங்குளிரால் இளங்கோவின் உடல் ஆடியது. பக் கத்திலிருந்த உருவமும் அவனை நெருங்கியது. இருவரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து கிடந்தனர். ஒருவருக்கு மற்றெருவர் உடம்பு போர்வை போலாயிற்று. இரு உடலின் இணைப்பிலே சிறிது கதகதப்பு அவனுக்கு. ஏதோ என்றமறியாத இன்பம் அவனுக்கு. ஒருடல் போல் ஒண்டிக் கிடந்தனர். அவன் கரங்கள் அந்த உருவத்தின் கரங்களைத் தீண்டியது. வளையல்கள் கரங்களில் இருப்பதாக தென்பட்டது. இளங்கோ அந்த உருவம் பெண் என்பதை அறிந்தான். 'இளவேனிலாக இருந்தால்'......அவன் உள்ளத்தின் அவா இது. ஒரு

O;3NVH4,M N54

கரத்தால் கட்டையைப் பிடித்துக் கொண்டு மற்றொரு கரத்தால் அவளின் அங்கங்களைத் தொட்டுப் பார்த்தான். அவளின் அங்கங்கள் எல்லாம் இளவேனிலுடையது என்றது கரங்கள்.

இந்த நெருக்கடியான சமயத்திலே வானிலே ஒரு பெரிய மின்னல் தோன்றியது. இறக்காமல் வானிலே மிதந்த இரு வீரர்கள் எழுப்பிய வெடியின் ஒளி அது. அந்த மின்னல் ஒளியிலே......இளங்கோ எதிரே கிடந்த அவளை நோக்கினான். அவளும் அவனை நோக்கினாள். அவன் "இளவேனில்!" என்றான். அவள் "இளங்கோ!" என்றாள். இருவரது சப்தமும் நெஞ்சினின்று ஏக காலத்தில் கிளம்பின. அவ்வளவு தான்! மீண்டும் ஒரு மின்னல் தோன்றியது.

அந்த மின்னல் ஒளிக்கு வெறும் கட்டையே மிதந்தது. ஆம்! அவர்கள் இருவரும் ஆச்சரியத்தால் கட்டையைப் பிடித்திருந்த கரங்களைக் கைவிட்டு விட்டனர். அந்த கடல், 'உலகிலே நீங்கள் இணைந்து வாழ முடியாது நான் நீங்கள் இணைந்து வாழ இடம் தருகிறேன்' என்று கூறுவது போல் அவர்களைத் தன் அடித்தளத்திற்கு கொண்டுச் சென்றது. காதலனைக் கண்டு ஒன்றாக வாழ நினைத்தவள் காதலனை அடைந்து அவனோடு ஒன்றாகி விட்டாள். சாவின் கடைசி கட்டத்தில் சந்தித்து விட்டாள். மின்னல் போல் தோன்றி மின்னல் போல் சந்தித்து மின்னல் போல் மறைந்தனர்.

கடல் "காதலோ! காதல்!" என்று அலறியது. வானமோ "மின்னலோ மின்னல்" என்று கூறியது.

[முற்றும்]

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 106120 MADRAS
3/3-93

திராவிட இயக்கத் தலைவர்கள்

வாழ்க்கை வரலாறுகள்

★

1.	அறிஞர் அண்ணாதுரை	0	8
2.	தலைவர் பெரியார்	0	8
3.	புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்	0	8
4.	கடமை வீரர் கருணாநிதி	0	8
5.	அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி	0	8
6.	பன்னீர் செல்வம், பாண்டியனார், வேலாயுதம்	0	8
7.	நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன்		8
8.	சம்பத், நீலமேகம்	0	8
9.	ஆசைத்தம்பி, சிற்றரசு	0	8
10.	இராமாமிர்தத்தம்மையார், பூங்கோதை, அருண்மொழி,	0	8

— கழிவு வழக்கம் போல் —

கிடைக்கும் இடங்கள்

கலைமன்றம்
122, வரதாமுத்தியப்பன்தெரு,
சென்னை—1

M.S. ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை—1

வாழ்க்கைக்கு வழிகாட்டி!
இல்லறத்திற்குத் திறவுகோல்!

எஸ். எஸ். வாஸன்
எழுதிய

தம்பதிகள்

சுகமாய் வாழ்வதெப்படி?

குடும்பத்தினர் யாவரும் படிக்கவேண்டிய புத்தகம்
பரிசளிப்பதற்கேற்ற அழகிய கிலோஸ் பதிப்பு

விலை 3-12-0

ஒவ்வொரு ஆணும் பெண்ணும்
தெரிந்திருக்கவேண்டிய பல
அபூர்வ விஷயங்கள் அடங்கியது

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1

04/3-93